உண்மையைத் தேடும் எழுத்தைவிட உயர்ந்த இலக்கியம் இல்லை.

ஞானரதம்

— புதுமை இலக்கிய மாத இதழ் —

ஆசிரியர்: ஜெயகாந்தன்

நிர்வாக ஆசிரியர்: தேவ. சித்ரபாரதி

2 / 1970

ஆசிரியர் குழு:

ந. முத்துசாமி
ஒய். ஆர். கே. சர்மா
ஜியாவுடீன்
வையவன்
செல்வி சாதனா

இந்த இதழில்

ஜெயகாந்தன்
எம். எஸ். பி. முருகேசன்
முத்து
சரஸ்வதி ராம்நாத்
சிதம்பர சுப்ரமணியம்
வெ. சாமிநாதன்
எழில் முதல்வன்
பொன்மாரி
எஸ். வைதீஸ்வரன்
வழிப்போக்கன்
புதுமைக்கூத்தன்
ரமணியன்
சித்ரபாரதி
சந்திரமௌலி

விலை 50 பைசா

தனிவீடு

வயலில் தனித்த வீடொன்று
வழிப்போக்கனைத் துணையாய் அழைக்கும்
அழைப்புக் கிணங்கினான் வழிப்போக்கன்
ஆங்கே இருட்டு எதிரில் நின்றது
விளக்குத் துணியால் இருளைத் துடைத்தால்
வீட்டின் பூட்டு வழியை மறித்தது.
மாடம் எரவாணம் மற்றுமுள இடமெலாம் துழவி
மடியில் சாவி இருக்கக் கண்டான்.

வயலில் தனித்த வீடு
வழிப்போக்கனைத் துணையாய்க் கொண்டது
வெளிச்சம் வந்ததும்
வீடு மீண்டும் தனித்து நின்றது
வீட்டுக் கதவில் பூட்டும் இருந்தது

மடியைத் தடவிச் சாவியைக் காண்போர்
மனமும் இருந்தால் மறுபடி வரலாம்
சொந்த வீடு சுமையாய்ப் போனபின்
இந்த வீட்டில் இருக்க வரலாம்.

ஜெயகாந்தன்

முன்னோட்டம்

ஞானரதத்தைப் பார்த்த நண்பர்கள் பூரண திருப்தி தெரிவிக்காவிடினும் நல்ல நம்பிக்கையைத் தெரிவித்திருக்கிறார்கள். பல அரிய யோசனைகளையும் வழங்கியிருக்கிறார்கள். மிகச் சிறந்த உதவிகளையும் செய்து வருகிறார்கள். எனவே ஞானரதம் மேலும் சிறப்படையும் என்ற நம்பிக்கை எனக்கு வருகிறது.

என்னுடைய சொந்தக் கருத்தைக் கேட்பீர்களேயானால், முதல் இதழ் நான் எதிர்பார்த்த அளவில் அமையவில்லை என்பதை எடுத்த எடுப்பிலேயே சொல்லி விடுகிறேன். ஆனால் இதில் எனக்கு ஏமாற்றமில்லை. எந்தச் சோதனையில் எடுத்த எடுப்பிலேயே உங்களுக்கு முழு வெற்றி கிடைக்கிறதோ

அந்தச் சோதனை அத்தோடு முடிந்தது என்று பொருள்.

ஞானரதத்தின் எழுத்துக்களைச் சிறிதாகப் போடவேண்டும் என்பது ஓர் ஏகோபித்த அபிப்பிராயம். அடுத்த இதழிலிருந்து அந்த விருப்பம் பூர்த்தி செய்யப்படும் என்று நம்புகிறேன்.

ஞானரதம் ஒவ்வொரு இதழும் முழுக்க முழுக்க வெவ்வேறு மாதிரியாக அமைவதில் கூட ஒரு சிறப்பு ஏற்படும் என்று நான் நம்புகிறேன். அப்படிப்பட்ட Variety-ஐ இது தரவேண்டும் என்பது எனது தனிப்பட்ட ஆசை.

நமக்கு வழி காட்டுவதற்கு என்று ஓர் ஒற்றைத் தத்துவமில்லை. அறிவைப் பெறுவதற்கு ஒரே ஒரு பாதை தான் உண்டு என்பதனையும் நாம் ஒப்புக் கொள்வதில்லை. இந்தப் பாதை என் பாதை; இது எங்கே கொண்டு போய் விடுகிறதோ அங்கேதான் நான் போய்ச் சேருவேன் என்கிற பிடிவாதம் நமக்கில்லை. எல்லாப் பாதைகளிலும் நடந்து பார்ப்போம். கடைசியில் நாம் கண்டடைவது அனுபவங்கள் மட்டுமே. எனவே எல்லாருடைய அனுபவங்களையும் கௌரவிப்போம்.

பார்த்தனுக்குக் கண்ணன் செய்த கீதோபதேசத்தில் மட்டும்தான் ஞானம் இருக்கிறது என்று தர்க்கித்து நிற்பதையும் விட அஞ்ஞானம் இல்லை. ஏசுநாதரின் மலைப்பிரசங்கத்திலும் அந்த ஞானம் உண்டு.

பத்திரிகைக்கு ஞானரதம் என்ற பெயர் மிக நன்ருக இருக்கிறது என்பது எல்லோரும் கூறிய மற்றுமோர் ஏகோபித்த அபிப்பிராயம். இந்தப் பெயர் இந்தப் பத்திரிகைக்கு மிகவும் பொருத்தமாகவும் இருக்கும் என்று நான் இப்போது உறுதி கூறுகிறேன்.

சென்ற இதழில் வெளியான கதைகளில் 'சூழ்நிலை, வலை, பட்டினிக் கலைஞன் ஆகிய

மூன்று கதைகளையும் நண்பர்கள் பாராட்டியிருக்கிறார்கள். 'சூழ்நிலை' கொஞ்சம் சலிப்புத் தட்டுகிற அளவுக்கு விவரணங்கள் நிறைந்ததாக இருந்தது என்பது ஒரு விமர்சனம். 'வலை' என்கிற கதையின் நோக்கம் புரியவில்லை என்பது சில நண்பர்களின் கருத்து. ஜி. நாகராஜனின் கதையை வெளியிட்டிருக்கவே கூடாதாம். பின்னுக்குப் பகுதியில் வந்த 'ஸ்பிநோஸா' ஒரு விஷயமே இல்லாத வெற்றுக் கட்டுரையாம். ஸ்பிநோஸாவைவிட மணி சாஸ்திரியே தலை நீட்டியிருக்கிறாராம்.

சாமிநாதன் கட்டுரையைப் பயனுடையது என்று பலர் பாராட்டியிருந்தார்கள். மாடர்ன் ஆர்ட்டுக்கு வரிந்து கட்டிக்கொண்டு வக்காலத்து வாங்குகிறார் என்று சிலர் முணுமுணுக்கிறார்கள்.

வாசகர்களின் இந்த அபிப்பிராயங்களை நாங்கள் குறித்துக் கொள்கிறோம். அதற்கு மேல் இந்த அபிப்பிராயங்களை வெளியிட்டவர்களுக்கும், இந்தப் படைப்புக்களை உருவாக்கியவர்களுக்கும் இருப்பதைவிட ஞானரதத்துக்குப் பொறுப்பேதும் இல்லை.

சென்ற இதழைவிட இவ் விதழுக்கு இரண்டு மடங்கு ஆர்டர் வந்திருப்பதாக நமது நிர்வாகி தெரிவிக்கிறார். எனக்குச் சந்தோஷமாகவும் இருக்கிறது; பயமாகவும் இருக்கிறது. ஞானரதத்திடம் வாசகர்கள் நிறைய எதிர்பார்க்கிறார்கள் என்பது இதற்கு அர்த்தம். பொறுப்பை நான் ஆசிரியர் குழுவிடம் ஒப்படைக்கிறேன்.

சென்னையில் 'பவர்' என்றொரு அமைப்பு இருக்கிறது. இந்தப் 'பவர்' என்ற வார்த்தைக்கு அவர்கள் தருகிற விளக்கம். P-for poets (கவிஞர்கள்) O-for orators (பிரசங்கிகள்), W-for writers (எழுத்தாளர்கள்),

E-for Educationist (கல்வியாளர்கள்) R-for Readers (வாசகர்கள்).

இந்த மேற்படி அமைப்பின் 'ஸ்டாக் டேக்கிங்' - கணக்கெடுப்புக்-கூட்டம் அண்மையில் நடந்தது. அதாவது தமிழ் இலக்கியத்தை 'சர்வே' பண்ணுவது மாதிரி பல நண்பர்கள் சிறுகதை, நாவல், கவிதை, விமர்சனம் ஆகிய துறைகள்பற்றி இரண்டு நாட்கள் பேசினார்கள்.

நான் முதல் நாள் நிகழ்ச்சிகளில் சில பகுதிகளிலும், இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளில் பெரும் பகுதிகளிலும் கலந்துகொண்டேன்.

அங்கு காந்தியக் கொள்கைகள் அதிகமாக வலியுறுத்தப்பட்டன. இலக்கியத்துக்குப் புறம்பான போக்குகள் இலக்கியத்தில் தலையிடுவதும் விமர்சிக்கப்பட்டது. எல்லாவிதமான கருத்துக்களிலும் பலதரப்பட்ட பார்வைகள் பரிமாறிக் கொள்ளப்பட்டன: நண்பர்கள் பிச்சமூர்த்தி, சிதம்பர சுப்ரமணியம், பி. எஸ். ராமையா, செல்லப்பா, அகிலன், நா. பார்த்தசாரதி ஆகிய எழுத்தாளர்கள் இந்த நிகழ்ச்சிகளில் பெரும் பங்கு கொண்டனர்.

இலக்கியம் பற்றிய சிந்தனைகளிலும் மதிப்பீடுகளிலும் மாறுபட்ட கருத்துக்களுக்கு மதிப்பு அளிக்கிற ஒரு போக்கு இங்கே பெரிதும் கடைப்பிடிக்கப்பட்டது. இது மிகவும் மகிழ்ச்சிகரமான, நமக்கு இன்றைய சூழ்நிலையில் மிகவும் அவசியமான ஒரு போக்காகும்.

அங்கு எழுந்த பல கருத்துக்களிலே. நான் அபிப்பிராயம் சொல்லவேண்டும் என்று நினைத்து, அங்கு சொல்லாமல் விடப்பட்ட ஒரு கருத்தை மட்டும் இங்கே எழுதுகிறேன்.

அங்கே இதைச் சொல்வதற்கு எனக்கு வாய்ப்பும் நேரமும் இல்லை. இங்கே இதனை நான் சொல்வதன் மூலம் அந்தக் கருத்தை முற்றாக மறுக்கிறேன் என்பதல்ல, அதன்

விளைவாக எழுந்த எனது சிந்தனைகளையே நான் முன் வைக்கிறேன்.

இறுதியாகப் பேசிய நண்பர் ஒருவர் மிகவும் உறுதியாக ஒன்றை வலியுறுத்தினார்.

அதாவது இலக்கியப் படைப்புக்கு 'முறை' யான கல்வி எவ்வளவு அவசியம் என்பது குறித்து அவர் மிக முனைப்பாக இருந்தார். அவர் 'முறை' யாகப் படித்தவர். பட்டம் பெற்றவர் என்று நான் புரிந்துகொண்டேன்.

உங்கள் அனைவருக்கும் தெரியும் நான் 'முறை'யாகக் கல்வி பயிலாதவன் என்கிற விஷயம். எனவே நண்பருடைய அபிப்பிராயத்தை வைத்து என்னையே நான் பார்த்துக்கொண்டேன். இதற்குப் பெயர் 'சப்ஜக்டிவிடி' அல்ல.

என்னை ஒரு சாட்சியாக வைத்துக் கொண்டு இந்த விஷயத்தை நான் விசாரணை செய்து பார்த்தேன்.

நண்பர் 'முறை'யான படிப்பு என்று சொன்னரே தவிர முறையான படிப்பு என்று எதைச் சொல்கிருர் என்று எனக்கு விளங்கவில்லை.

மெக்காலே கல்வி முறை, முறையான படிப்பு என்கிருரா? அல்லது நமது குருகுல வாசக் கல்விமுறை, முறையான கல்வியா? அல்லது புலவர் தேர்வு கல்வி குறித்துச் சொல்கிருரா என்று எனக்கு விளங்கவில்லை.

இது ரொம்ப ஆபத்தான வாதம் என்பதனை மட்டும் நான் உணர்கிறேன். இது புதுவிதமான வகுப்புப் பிரிவினையை உருவாக்கும் என்று நான் அஞ்சுகிறேன். என்னிடம் அட்டண்டர்களாக இருப்பதற்கு லாயக்கில்லாதவர்கள் கூடச் சிலர் M. A. படித்திருக்கிருர்கள். இப்போது இங்கு 'முறை'யான கல்வி என்பது மார்க்கு வாங்குகிற கல்வி. பச்சையாகச் சொல்லப் போனல் ஒரு இலக்கியப் படைப்பாளனுக்கு நீங்கள் 'முறை'

யான கல்வி என்று சொல்லுகின்ற எல்லாமே முறையற்ற கல்வியே.

படைப்பவனைச் சிறுமைப்படுத்துவதற்காக உங்கள் 'படிப்பை' ஆயுதமாக உபயோகப் படுத்தாதீர்கள். ஆழ்ந்து யோசிப்பீர்களானால், உங்கள் கணக்குப்படி நீங்கள் படித்தவைகளே அந்தப் படிக்காத படைப்பாளன் தந்தவைதான்: ஷேக்ஸ்பியர் கல்விமான் அல்ல. கலைஞன். ஆனால் அவனால் கல்வி மான்கள் பலபேர் உருவாகினர்.

'இராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஒரு தற் குறி. அவரை குருவாக ஏற்றுக்கொண்ட விவேகானந்தர் பெரிய படிப்பாளி.

உங்கள் 'முறை'யான கல்விக்கு அறிவுல கில் என்ன இடம் என்பதை வாழ்க்கை அறுதியிட்டு வைத்திருக்கிறது.

சராசரி மனிதனுக்கு இந்த முறையான கல்வி மிக மிக அவசியம். இதுவும் இல்லை யென்றால் அவன் முழு மூடனாகிப் போவான்.

எனவே, நான் கல்வியையோ - முறையான கல்வியையோ - நிராகரிக்கவில்லை. ஆனால் இது ஒன்றே தகுதி என்றோ, இந்த ஒன்று இல்லாவிட்டால் தகுதியான இலக்கியம் படைக்க முடியாது என்றோ செய்யப்படுகிற வாதம் சரியானது அல்ல என்பது மட்டு மல்ல, இது நியாயமானது கூட அல்ல என்று சொல்லுவேன்.

ஏனெனில், இங்கே கல்வி என்பது அண் மைக் காலம் வரைக்கும் ஒரு (Privileged Class)ன், வசதி படைத்த வர்க்கத்தின் ஏக போகமாக ஆக்கிரமிக்கப்பட்டிருந்தது. இன் றும் கூட 'முறை'யான கல்வி என்பது முழுக்க முழுக்கக் கட்டாயமாக்கப்படவில்லை. இதுபற்றிய ஆராய்ச்சியில் இறங்கினால் ஒரு சமூகவியல் கட்டுரையே எழுத நேரிடும். எல்லாரும் முறையாகப் படித்து, முழுசாகப் பட்டம் பெறுகிறவரைக்கும் வாழ்க்கையோ இலக்கியமோ காத்துக் கொண்டிருப்பதில்லை.

படித்தவனெல்லாம் பொய்யும், சூதும், பாவமும் பண்ணி, ஐயோ, ஐயோ, என்று அலையும்போது, வேறு எந்தெந்த தேவைகளுக்கோ, முக்கியமான தேவைகளை எல்லாம் விற்று விட்டு வியாபாரம் பண்ணிக் கொண்டு இருக்கிறபோது, உண்மையான இலக்கியம் என்பது எதனிலிருந்தோ வெடிக்கிறது. அது வெடிக்கத் தேர்ந்தெடுக்கிற இடம் 'முறை'யாகப் படித்தவனிடமிருந்தும் இருக்கலாம். முறையாகப் படிக்க முடியாதவனிடமிருந்தும் இருக்கலாம்.

எது முறையான கல்வி என்பதனைப் பெயருக்குப் பின்னால் ஒட்டி வைத்துக் கொண்டிருக்கிற இரண்டொரு எழுத்துக்களை வைத்துக் கண்டு பிடிப்பதில்லை. அந்தச் சில எழுத்துக்களுக்கு உத்தியோகத்துக்குச் செய்கின்ற மனுவில் இருக்கிற முக்கியத்துவம் எல்லா இடங்களிலும் வந்துவிட முடியாது.

நந்தனும் பார்ப்பானவான். இராமகிருஷ்ணரும் கல்விமான் ஆவார். இராமலிங்க சுவாமிகளும் கூட ஓதாது உணர்ந்தவராவார். இந்த உண்மையைச் சொல்வதே இலக்கியம்.

பண்டித மமதை இலக்கிய உலகைக் கெடுத்ததற்கு ஈடாக, படித்த மமதை மறுபடியும் வந்து கெடுக்க வேண்டாம்.

படைப்புக்கும் இவற்றுக்கும் சம்பந்தமில்லை. சம்பந்தமிருப்பதுபோல் தோன்றினாலும் அந்தத் தோற்றங்களுக்கும் இலக்கியத்துக்கும் சம்பந்தமில்லை.

ஏதோ நான் படிக்காதவன் என்பதனால், பண்டிதப்பட்டம் வாங்காதவன் என்பதால் இவ்வளவு தூரம் பேசுகிறேன் என்று எண்ண வேண்டாம்.

ஒரு வகையில் நானும் பண்டிதனே. ஆனால் பரீட்சை எழுதியதில்லை. நானும் படித்தவனே. அதற்குச் சான்று என் பெய

ருக்குப் பின்னல் இருக்கவேண்டிய இரண்டு எழுத்தல்ல. நான் எழுதிய எல்லா எழுத்துக் களுமே.

நான் தாழ்வுணர்ச்சியினுல் இதனைப் பேசு கிறேன் என்று இதனைத் தவருக யாரும் எண்ணலாகாது. எனக்கு உண்மையிலேயே தாழ்வுணர்ச்சி இருக்குமானல் என்னைப்பற்றி இப்படி எண்ணி விடுவார்களே என்று இதனைப்பற்றி எழுதாமலே இருந்திருப்பேன்.

எவர் என்ன எண்ணிஞலும் இந்த உண் மையைச் சொல்லவேண்டுவது ஒரு அவசி யம் என்று நான் கருதுகிறேன்.

ஏனெனில், தமிழ் நாட்டில் பல இளைஞர் கள் எழுதுவதற்குரிய எல்லாவிதமான (Potency) வீரியங்களையும் பெற்றவர்களாக இருக்கிருர்கள். ஆயினும் அவர்கள் எழுதத் தயங்குகிருர்கள். காரணம் அவர்களில் பெரும்பாலானவர்களுக்கு 'முறையான' படிப்பு கிடைக்கவில்லை 'முறையாக'ப் படித்த வர்களின் மத்தியில் அவர்களுக்கு மரியாதை யும் இல்லை.

மரியாதை தராதவர்களுக்கு மரியாதையை மறுத்து, மோதி, முன்னல் வந்து நிற்கும் சூழ்நிலை என்னை மாதிரி அவர்களுக்கு இல்லை. ஆனல் அவர்களுக்கு வாழ்க்கை யில் அடிபட்ட அனுபவம், மோதி உராய்ந்து கொண்ட சிராய்ப்புகள், இந்தப் பள்ளிக்கூட ஜீவராசிகள் கற்பனை செய்து கொள்ள முடியாத அளவுக்கு இருக்கிறது.

படைப்பு என்பது அனுபவமும் அனுபவத் தின் வெளியீடுமாகும். கல்வி என்பது, ஒரு பாஷை மூலம்தான் இது வெளிப்படும் என்ப தனுல், ஒரு அத்யாவசியமான உபகரணமே. இதில் என்ன முறை வேண்டிக் கிடக்கிறது. முறை?

முறையான கல்வி ஒன்றுதான் யோக்கிய தாம்சம் (criteria) என்கிற வாதம் தமிழ்

இலக்கியத்தில் புதிய வேகமும் ரத்தமும் பாய்வதற்குத் தடையாகப் போய்விடும்.

எது முறையான படிப்பு என்கிற கேள்வியை எழுப்பினால் இங்குள்ள பட்டதாரிகளின் படிப்பெல்லாம் முறையற்ற படிப்பு என்பதை நிரூபித்து விடவும் முடியும். இங்கே நம்முடைய நோக்கம் அதுவல்ல.

எழுதுவதற்கு, இலக்கியம் படைப்பதற்கு, வாழ்க்கை தரும் கல்விதான் அடிப்படை. இந்தக் கல்வியைச் செழுமையாகப் பெற்றிருப்பவர்கள் முறையான படிப்பில்லையே, பட்டமில்லையே என்று ஒதுங்கியிருக்கலாகாது. தமிழ் சுத்தமாக எழுதத் தெரியாவிட்டாலும் கூடப் பரவாயில்லை. அந்தத் தவறுகளை ஒரு புரூப் ரீடர்கூடத் திருத்தி விடுவான்.

படித்தவனுக்குப் படித்த படிப்பு மட்டும் தான் தெரியும். அதுவும் மார்க் வாங்க வேண்டும் என்கிற அளவுக்குத்தான் தெரியும். Syllabus ஐயும் தாண்டிப் படிக்கிற இயல்புடைய மாணவர்கள் பள்ளிக்கூடத்திற்கு வெளியேதான் ரொம்பப்பேர் இருக்கிறார்கள். அவர்களில் சில பேர் தப்பித்தவறி உங்கள் பள்ளிக்கூடத்தில் வந்து சிக்கிக் கொள்ளும்பொழுது உங்கள் பள்ளியையும் பயன்படுத்திக்கொண்டு, வெளியேதான் அவர்கள் நிறையப் படிக்கிறார்கள்.

ஏதோ உங்கள் மரக்காலால் அளந்தது தான் மகாநதி என்று நினைத்து விடாதீர்கள். அது மரக்காலின் மமதையையே காட்டும். அநுபவம் கண்ணோட்டம் ஆழ்ந்த ஈடுபாடு, ஞான வேட்கை இவைதான் முக்கியம். இலக்கியப் படைப்புக்கு இவை இருந்தால் போதும்.

த. ஜெயகாந்தன்

முன்னுரை

கவிதை ஒரு மூட்டைப்பூச்சி
இரவில் என்னைத்
தூங்க விடாமல் கடிக்கிறது!
இலக்கணம் ஏதும்
கல்லாதவன்
என்று இதற்குத்
தெரியவில்லை.
இலக்கணம் படித்தவர்
வீட்டிலே இந்த
மூட்டையும் இல்லை.
நானோ ஒண்டுக்
குடித்தனவாசி!
வீட்டில் ஆளும் அதிகம்;
அழுக்கும் அதிகம்!
சுண்ணம் படிக்கிற பழக்கம்
சுத்தமாய் இல்லை!
இண்டுகள் இடுக்குகள்
எங்கும் உண்டு!
சந்துகள் பொந்துகள் சங்கதி
தெரியும்!
தூக்கம் ஒன்றுதான் துக்கம்
கெடுக்கும்
தூங்கவிடாமல் எனையிந்த
மூட்டை கடிக்கும்!
இலக்கணம் ஏதும்
படித்திலேன்
என் செய?
எழுதவா? வேண்டாமா?

குறள்

தாடிப் புகழா? தவக்கோலத்தின் தன்புகழா?
பாடும் திருக்குறள் பஸ்ஸின் புகழா?
முச்சந்திச் சிலைப் புகழா? முத்திரைத் தலைப் புகழா?
வீடுதோறும் நிற்கின்ற வெள்ளித் திரையின்
விளம்பரப் புகழா?
ஆடும் அரசியலார் ஆடம்பரப் புகழா?
கூடும்பெருங் கூட்டக் குருட்டுத்தனம் புகழா?
சூடும் கிரீடத்தைச் சுமந்த சுமைப்புகழா?
சாடும் விதிக்காவில் சாயும் இகழ் புகழா?
தோன்றிற் புகழொடு தோன்றுக வென்றது
ஊன்றி யறிந்து உணர்ந்திடு வீரே!

குளியல்

மீன்கடித்த மெல்லுடலை
நான் கடிக்க லாகாதா?
தேன்குடிக்கக் குவிந்த இதழ்
தேன் எனக்குத் தாராதோ?

மஞ்சள் பூசும் இடமெல்லாம் என்
மனம் பூச லாகாதா?
கொஞ்சமெனைத் தொட்டெடுத்துக்
குங்குமமாய் அணியாயா?

படித்துறையில் நீதேய்க்கும்
பாதத்தைப் பார்ப்பதற்குப்
படித்துறையின் இடையிலோர்
படிக்கல்லாய் மாறேனோ?

முக்காலும் திரையிட்டு
மூலையிலே போய்நின்று
சொக்காயை இடுகையிலே
சொக்காகி நானந்த
மூலைச் சுவராகி
முன் நின்று பாரேனோ?

உஷை

புகை படிந்த சித்திரம்போல்
புலர்பொழுதில் எதிர்வந்து
சிகையவிழ்த்துக் கூந்தலினால்
முகம் மறைத்து முலை மறைத்து
உடல் மறைத்து நிற்கின்றாளே!

சாவு

சாவுதான் விபத்தென்பார்
சாகாமல் இருப்பதுவும் விபத்தன்றோ—பிறவி
சார்ந்ததும் ஓர் விபத்தன்றோ.
நோவுதான் வியாதி என்பார்;
நோகாமல் இருப்பதுவும் வியாதியன்றோ
—வாழ்வை
நுகராமல் இருப்பதுவும் ஓர் வியாதியன்றோ.

தூக்கம்

தூண்டிலைப் போட்டுக் கரையிலிருந்து
நீண்ட மீனை நினைவில் வளர்த்தேன்;
தூண்டிலும் நீரில் அமிழ்ந்து கிடக்கத்
தூண்டிலைப் பிடித்தவன் தூங்கிப்போனேன்.
தூண்டில் என்னைத் துள்ளி இழுக்கவும்
தூக்கம் கலைந்தேன்.
துடித்தது எண்ணம்.
புழுவை விழுங்கிய மீனும் துடிக்கும்
பொய்யை விழுங்கிய நானும் துடிப்பேன்.

ஞானம்

ராஜகுமாரனைக் காணோமென்று
நாடுமுழுவதும் தேட,
நாடுமுழுவதும் உள்ள குமாரர்கள்—நான்
ராஜகுமாரன் என்றார்.

கள்வர் தலைவனைக் காணோமென்று
காடு முழுவதும் தேட,
கள்வர் தலைவன் நானே என்றிட—ஓர்
நல்ல மனிதனைக் காணோம்.

ராஜகுமாரனைத் தேடி அலைந்தது
நாடு கடத்திட வேண்டி;
கள்வர் தலைவனைத்தேடி அலைந்தது—ஊர்க்
காவலனுக்கிட வேண்டி!

ராஜகுமாரர்கள் வேஷத்தில் கள்ளர்கள்
நம்மிடம் சிக்கியே கொண்டார்—ஊர்க்
காவலைச் செய்திட உத்தம மானவன்
ஒருவனும் தென்பட வில்லை.

தீ

பட்டமரம் ஒன்று
பாலையிலே நிற்கிறது.
சுட்டமணல் நெருப்பாகிச்
சூறையாய்ச் சுழல்கிறது.
பச்சைமரத் துளிர்போல
பட்டமரக் கிளையில்—தீ
பற்றித் துளிர்க்கிறது.

ஒற்றைச் செருப்பு

ஒற்றைச் செருப்பு
ஒன்று கிடக்கிறது
இடமோ வலமோ
எதுவும் தெரியவில்லை
குப்புறக் கிடந்து
குமுறி அழுகிறது!

இணையைப் பிரிந்த
இலக்கியச் சோகம்
இதற்கு மட்டும்
இல்லையா என்ன ?

பொருள்வயின் பிறந்ததோ ?
போர்வயின் பிரிந்ததோ ?
உயிர்செலப் பிரிந்ததோ ?
ஊழ்வினை மேல்வந்து
உறுத்தலால் பிரிந்ததோ?

கவிதையின் சோகமிக்
காலணிக்கில்லையோ ?

ஒற்றைச் செருப்பு
ஒன்று கிடக்கிறது
இடமோ வலமோ
எதுவும் தெரியவில்லை
குப்புறக் கிடந்து
குமுறி அழுகிறது!

ரசனை

நமது சிந்தனை வெளியீட்டிற்கும், அனுபவ வெளியீட்டிற்கும் நாம் தேடிக்கொள்ளும் குறியீடுகள், நம் மன இயல்பைப் பொருத்தன. நம் பார்வையை, அனுபவத்தைப் பொருத்தன. நான் சற்று முன்னர் சொன்னேன்: நாம் ஒவ்வொருவரும் சஞ்சரிக்கும் வெவ்வேறு கிரஹங்கள் என்று; இதற்கேற்ப, நம் அனுபவங்கள், நம் உலகங்கள் மாறுபடுகின்றன என்று. என் உலகத்தில் நீங்கள் எல்லாம் அங்கங்கள். நீங்கள் என்றால், என் பார்வையில் படும் நீங்கள் மட்டும்தான். உங்கள் உலகம் அதில் சேர்ந்ததல்ல. அதேபோல, உங்கள் ஒவ்வொருவர் உலகத்திலும் உங்கள் பார்வையில் படும் நான் ஒரு அங்கம். ஒரு அணு. என் உலகம் அதில் சேர்ந்ததல்ல. ஆனால், பிறந்து அலறிய கணத்திலிருந்து என் வாழ்வு, என்னையும், என் உலகத்தையும் அறியும் தேட்டை (search) ஆகத்தான் எனக்குத் தோன்றுகிறது. என்னையும், என் உலகத்தையும் அறியும் தேட்டையில், உங்களையும் உங்கள் உலகத்தையும் பற்றிய என் அனுமானங்களும் சேர்ந்ததுதான். இல்லையெனில், என்னையோ என் உலகத்தையோ நான் அறிவதில்லை. நான், என் உலகம் என்று நான் சொல்லும்பொழுது இரு வேறுபட்ட பொருள்களை, அர்த்தங்களை நான் குறிக்கவில்லை. இவ்விரண்டு வேறுபட்ட வார்த்தைகளும் ஒரே பொருளின், ஒரே அர்த்தத்தின், இருவேறு ரூபங்கள், காட்சிகள். நான் அவ்வாறு ஆக்கிக் கொண்டிருக்கிறேன், செயல்முறை ஸௌகர்யங்களுக்காக. It is a pragmatic arrangement, a convenient division of a single conceptual whole.

எனவே, என் அனுபவங்களோ, உலகமோ, நான் உங்களுடன் கொள்ளும் பரிவர்த்தனைக்கு அளிக்கும் குறியீடுகளோ அல்லது அக்குறியீடுகள் என்ன அர்த்தத்தை வெளியிடுகின்றன என்று நீங்கள் அனுமானிக்கிறீர்களோ அந்த அர்த்தங்கள், அனுமானங்கள், இவையெல்லாம், உங்கள் உலக அர்த்தங்களுக்கு, உங்கள் அனுபவங்

வெ. சாமிநாதன்

களுக்கு ஒத்திசையாதவை. சில விஷயங்களில் ஒத்திசைவதாகவும், சில விஷயங்களில் ஒத்திசைவதில்லை என்றும் நீங்கள் நினைப்பது உங்கள் பழக்கத்தின் தவறு. உண்மை என்னவோ அவை என்றுமே ஒத்திசைவதில்லை.

இந்த ஒத்திசையாமை பல படிமாணங்களில் (in varying levels) பல வேறுபடும் உக்கிரங்களில் (in varying intensities) நிகழ்கிறது. உங்கள் நடைமுறை சௌகர்யங்களுக்குக் குந்தகம் இல்லாது, சிறிதளவு வேறுபடும் ஒத்திசையாமையை குறியீடு தன்னுள் கொண்டதானால், இவ்வனுமான வேறுபாட்டை நீங்கள் பார்க்க மறுக்கிறீர்கள்; அல்லது உங்களுக்குப் பார்க்கத் தோன்றுவதில்லை. ஆனால், இவ்வனுமானங்களின், வேறுபாடு, இடைவெளி அதிகரிக்குமானால், வேற்றுமையின் உக்கிரம் நம் நடைமுறை சௌகரியங்களை வெகுவாக மீறுமானால், அப்பொழுதுதான் ஒத்திசையாமை உங்கள் பார்வையில் படுகிறது. உண்மையில், ஒத்திசையாமை ஒவ்வொரு குறியீட்டுப் பரிவர்த்தனையிலும், சிறிய பெரிய அளவில் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. இந்த சிறிய பெரிய எனப்படும் அளவு விவகாரம், குறியீட்டிலோ, ஒத்திசையாமையிலோ உள்ளார்ந்ததல்ல. நம் நடைமுறை சௌகர்யங்களின் சார்பாகப் பிறந்தது.

இவ்வாறு நான் abstract ஆகவே சொல்லிக்கொண்டு போகும்பொழுது, என் கருத்துக்களைத் தெளிவாகச் சொல்கிறேனா என்ற சந்தேகம் எனக்குத் தோன்றுகிறது. என் முன் அமர்ந்திருக்கும் உங்களில் ஒருவர் என் பார்வையில் படுவதற்கும், அவரைப்பற்றி நான் அறிவதற்கும், அவர் பெயர் எனக்களிக்கும் அர்த்தத்திற்கும், பக்கத்தில் அமர்ந்திருக்கும் ஒருவர் கொள்ளும் பார்வை, அறிவு, பெறும் அர்த்தம் இவற்றிற்கும் நிறைய வேறுபாடு உண்டு. ஆனால் இவ்வேறுபாடுகள் அவ்வளவு தெளிவாக, நம் நடைமுறை காரியங்களில் குறுக்கிடுவதில்லை. இதனால் அர்த்தங்களில் வேறுபாடுகள் இல்லை என்றுவதில்லை.

மாறாக, ஒரு அநுபவத்தை எடுத்துக் கொள்ளுங்கள். கண்ணுக்கெட்டிய தூரம் வரை, நாலாபுறமும் நிச்சலனமாக, நிசப்தமாகப் பரந்து கிடக்கும் வெட்டவெளி. என்னைத் தவிர வேறு ஜீவனின் அசைவு இல்லை. அவ்வெட்டவெளியின் பரந்த மௌனம், சவ நிச்சலனம் பயங்கர ராக்ஷஸத்தனம்

கொண்டதாகத் தோன்றுகிறது. மனத்தின் பீதியில், மௌனத்தின் ராக்ஷஸத்தனம் அகோர இரைச்சல் இடுவதாக, மல்லாந்து படுத்துக் கிடக்கும் மோன வெளி எக்கணமும் எழுந்து நின்று, கைகள் பரப்பி என்னை விழுங்க ஆயத்தம் கொண்டது போன்ற பயம் எழுகிறது. அடிவானத்தின் தூரத்தில், பூமியின் வளைவு பார்வையை மறைக்கும் இடத்திலிருந்து ஒரு எருமையின் கதறல் எழும்பி அலையோடி மறைகிறது. ஒருமுறை மோனத்தைக்கிழித்துமறைந்த எருமையின் அக் கதறல் மௌனத்தை மடிக்கவில்லை. மௌனத்திற்கு ஒரு புது ஸ்வரூபம், ஒரு புது அர்த்தம் கொடுத்ததாகத்தோன்றுகிறது. ராக்ஷஸமாகப் பரந்து கிடந்து, எழுந்து நின்று என்னை பீதியடையச் செய்த மோனம் இப்போது சாத்வீகமாக, படுத்துறங்கும் குழந்தையாக மல்லாந்து கிடக்கிறது. இப்போது அதனிடம் எனக்குப் பயம் இல்லை.

இது கவித்வ கற்பனை அல்ல. அநுபவம். வேறு ஒருவர் அவ்வெளியில் இத்தடவை விளைச்சல் எப்படி, மாவுக்கு எத்தனை கலம் காணும். 15ஆ-18ஆ என்று கணக்குப் போட்டிருக்கலாம். இங்கு நம் அநுபவங்கள் ஒத்திசைவதில்லை. என் அநுபவம் உங்களுக்கு உண்மையாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், பிடித்திருந்தது என வைத்துக் கொள்ளுங்கள். பின், இது கற்பனை, கவித்வம் என்று பெயரிட்டு நான் வேறு எங்கேயிருந்தோ இறக்குமதி செய்தது போல் ஒதுக்கி விடுவீர்கள். பிடிக்கவில்லை என்றாலோ, புரியவில்லை என்றாலோ, என் தேக நிலை, மன நிலை பற்றி உங்களுக்குள் கேள்வி எழுப்பிக்கொண்டு ஒதுங்கி விடுவீர்கள். இங்குதான் சிக்கல்கள் பல எழுகின்றன.

அனுபவம்
EXPERIENCE

நம்மில் அநேகருக்கு, நெல் விளைச்சலின் கலக்கணக்கு அநுபவம் எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மை எனக்கு எருமையின் கதறல், மோனத்தின் பயங்கரத்தை சாத்வீகமாக்கியதும். இன்னும் ஒரு உண்மை; உங்கள் கலக் கணக்கு மதிப்பீடு தவறு என்று பின்னால் நீங்களே ஒப்புக்கொள்ளவேண்டி வரலாம். என் அநுபவம் தவறவில்லை. அது உண்மை.

இத்தகைய கணங்கள் என்னை இப்போதைய 'நான்'

ஆக ஆக்கியிருக்கின்றன. இந்த 'நான்' தான் நான் அறிந்த உலகம். உலகின் உறவில் தான் நான் என்னைக் காண்கிறேன். என்னுடைய 'நான்' -ல் தான் உலகத்தைக் காண்கிறேன். நான் இதை உணர்கிறேன். ஆனல் உங்களுக்குத் தெளிவாகச் சொல்ல முடிகிறதோ என்று எனக்குச் சந்தேகம். தெளிவிற்காக இதன் அர்த்தத்தைச் சிறிது நீர்த்து (diluting it) சிறிது மாற்றி (distorting it) சிறிது சுளுவாக்கி (simplifying it). The world is an extension of this 'I' - இவ்வுலகம் என் நான்' – இன் விஸ்தரிப்பு என்று சொல்லலாம். நான் உங்களோடு பேசுகிறேன். பழகுகிறேன். வெளியே செல்கிறேன். படிக்கிறேன். சங்கீதம் கேட்கிறேன். எவ்வளவோ, என்னென்னவெல்லாமோ, எல்லாம் என் வாழ்க்கையை, என்னை, இந்த 'நான்'-ஐ ஆக்கியிருக்கின்றன. அவ்வளவும் நான் என்னையும், என் உலகத்தையும் அறியும் முயற்சிகள். அதே சமயத்தில் அவை உங்களையும், உங்கள் உலகத்தையும் அறியும் முயற்சிகள். உங்களுக்கும்கூட, என்னையும் என் உலகத்தையும் தெரிவிக்கும் முயற்சிகள். நான் உணவு உண்ணும் காரியத்திலிருந்து, படிப்பதை வேருகப் பிரிப்பதில்லை. ஒரு குழந்தையைக் கட்டியணைத்துக் கொஞ்சும் நிலையிலிருந்து சங்கீதத்தை அநுபவிக்கும் காரியத்தை வேருகக் காண்பதில்லை. என் வீட்டு மாடியில் தனித்திருந்து எட்டி நீண்டு செல்லும் மோனத்தில் என்னை ஆழ்த்திக் கொள்வதிலிருந்து அகிரா குரஸவா(Akira Kurasawa)படம் பார்ப்பதைவேருக நினைப்பதில்லை. A. ராமச்சந்திரனின் சித்திரங்களைக் காணும் அநுபவத்திலிருந்து இலக்கியம் படிக்கும் அநுபவத்தை வேருகக் காண்பதில்லை. ப்ரெக்ட் (Brecht)-ன் நாடகத்தைப் பார்க்கும் அநுபவத்திலிருந்து ராம் லீலா மைதானத்தில் ராவணன் எரிக்கப்படுவதை வேருகக் காண்பதில்லை. ரஸ்ஸல் படிப்பதோ, ஜே. கிருஷ்ணமூர்த்தி பிரசங்கம் கேட்பதோ, ஸெக்கோஸ்லாவேக்கிய பொம்மலாட்டம் பார்ப்பதிலிருந்து வேறுபட்டதாக நான் நினைப்பதில்லை. வேதாந்தம் சத்ய நாராயணுவின் குச்சிபுடி நாட்டியம் பார்ப்பதிலிருந்து அலென் கின்ஸ்பர்க்கின் (Allen Ginsberg) கவிதைகளைப் படிப்பது வேருக எனக்குத் தோன்றுவதில்லை. இவையெல்லாம் ஒன்றுடன் ஒன்று உறவு கொண்டவை, ஒரு ஆழ்ந்த அடித்தளத்தில். வெளித் தோற்றத்தில் தான்

இவை வேறுபட்டவை. நான் அவ்வாறு நினைக்கவில்லை. இலக்கியம், தத்துவம், சங்கீதம், நாடகம், ஓவியம் நம் அன்றாட வாழ்க்கை எல்லாமே, அவற்றின் உக்கிர அநுபவத்தில்-மீண்டும் சொல்கிறேன்- அவற்றின் அடிப்படையான ஆழத்தில், உள்ளார்ந்த அர்த்தத்தில், அநுபவ உக்கிரத்தில் ஒன்றானவை. எப்படி என் உலகம் என் 'நான்'-ன் விஸ்தரிப்பு(extension) என்றேனோ அப்படியே இவையெல்லாம் என்னின், என் உலகத்தின், என் உலகத்தின் அங்கங்களான, அணுக்களான உங்களின், பின் மறுபடியும், உங்களின் விஸ்தரிப்பாக இருக்கும் உங்கள் உலகத்தின், உங்கள் உலகத்தின் அணுவாக இருக்கும் உங்களின், என்னின் வெளிச்சாயல்கள், வெளிப்பாடுகள். இவற்றில் எல்லாம் நான், என்னையும் உங்களையும் காண்கிறேன். இவையெல்லாம் நீங்கள் நினைப்பது போல வாழ்க்கையின் அலங்காரங்கள் அல்ல. சிறப்புக்கள் அல்ல. உல்லாச வசதிகள் அல்ல. பண்பாட்டுச் சின்னங்கள் அல்ல. இவைதான் வாழ்க்கை. என் வாழ்க்கை. உங்கள் வாழ்க்கை. நான் என் உலகம். பின் நீங்களும்கூட. இவையெல்லாம் வார்த்தைக் குவியல்கள் அல்ல. வெறும் விவரங்களின் பட்டியலாக உங்களில் ஒரு சிலர் இவற்றையெல்லாம் கேட்டு வரலாம். பின்னும் இங்கு குறியீடுகளாக நிற்கும் நம்மின், பல அர்த்தங்களின் வேறுபாட்டையும் நம் அநுபவங்களின் ஒத்திசையாமையையுமே இது குறிக்கும். என்னளவில் இவை என் உணர்வின், என் உண்மையின் வெளிப்பாடுகள். வெறும் விவரங்களாகவோ, வார்த்தைகளாகவோ நீங்கள் கேட்பீர்களானால் நீங்கள் எனக்கோ, உங்களுக்கோ கூட வே நியாயம் செய்தவர்களாக மாட்டீர்கள்.

வெளிப்பாடு
EXPRESSION

செக்காவ்-ன் ஒரு சிறுகதை படித்திருக்கலாம். நீங்கள் ஒரு குதிரை வண்டிக்கார கிழவன், அவன் குதிரை, பின் அந்திம வாழ்வின் ஆதாரமாக இருக்கும் ஒரு சிறுவன். இம்மூவரும் ஒரு தனி உலகம். ஒருவரை ஒருவர் அண்டி வாழ்பவர்கள். ஒரு நாள் அச்சிறுவன் இறந்து விடுகிறான். சிறுவனை இழந்த சோகம் கிழவனை அமுத்தி வதைக்கிறது. தன்னுடைய துக்கத்தை இழப்பை யாரிடமாவது அவன் சொல்லி அழ வேண்டும். தன் சகாக்கள்,

எதிர்ப்படுகிறவர் ஒவ்வொருவரிடமாக அவன் தன் துக்கத்தைப் பகிர்ந்து கொள்ள முயற்சிக்கிறன். தன் வண்டியில் சவாரி செய்யும் பிரயாணிகளிடமும் தன் துக்கத்தைச் சொல்லி அழ முயற்சிக்கிறன். ஆனல் அவரவர்களுக்கு அவரவர் வேலைகளில், வாழ்க்கை நிர்ப்பந்தங்களில் அக்கறை. அவர்களில் யாருக்கும் கிழவனின் சோகத்தைப் பகிர்ந்து கொள்வதற்கோ, ஏன், காது கொடுத்து கேட்பதற்கோகூட நேரம் இல்லை. மனம் இல்லை. வெளியிடும் வகையற்று, உள்ளத்தில் குமுறிப் பொங்கும் துக்கத்தைக் கடைசியில் அவன் தன் குதிரையிடம் சொல்லி அழுகிறன்.

என்ன கற்பனை! என்ன கற்பனை!! என்று நீங்கள் வியக்கலாம். உங்களில் சிலர் கண்ணீர் விடலாம். பிரமாதமான சிறுகதை என்று பாராட்டலாம். இவையெல்லாம் பலபடிகள். ஆனல் இவ்வளவுதான? இது வெறும் இலக்கியமா? இதை படித்தீர்களே, உல்லாச வேளையைக் கழிக்கவா? செகாவ்தான் எழுதினனே, பத்திரிக்கை சன்மானம் பெற்று வீட்டு வாடகை கொடுப்பதற்கா?

செகாவ், அவனையும் அவன் உலகத்தையும் இங்கு எனக்குச் சொல்கிறன். அவனிடமிருந்து இதை கேட்கும் நான், என்னையும், என் உலகத்தையும், செகாவ் உள்ளடங்கிய என் உலகத்தையும் நான் அறிகிறேன். இது அடிப்படையான உண்மை. பத்திரிகை, வாசகன், சன்மானம், இலக்கியம், சிறுகதை என்பதெல்லாம் இவ்வடிப்படை உண்மையின் முன் அர்த்தமற்றவை. இக்கதை அநுபவம் தான் 'நான்'. என் வாழ்க்கை.

தெய்வத்தின் முன் நின்று கைகூப்பி நமஸ்கரித்து வணங்குகிறீர்களே, கதறியழுகிறீர்களே அங்கு செகாவ் கதை அநுபவத்தை நான் காண்கிறேன். 'மலர்மஞ்சம்' நாவலில், பாலி கதவடைத்து தனித்து நாட்டிய சாதகம் செய்கிறளே, அங்கும் செகாவ் கதையைக் காண்கிறேன். தள்ளாத கிழ வயதில் தன்னை ஆசிரமத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்ட ஒரு முதுகிழவியிடம் "தாயே, உன் பேரக்குழந்தையிடம் உனக்குள்ள அன்பே பிரார்த்தனை, தவம். அக்குழந்தையைப் பூஜித்து வா. காளியை பூஜை செய்தவளாவாய்." என்று ராமகிருஷ்ணர் சொன்னபோது, அவர் சொன்னது செகாவ் கதை. ஆண்டாள் பாசுரங்கள், ஆழ்வார்களின் பிரபந்தங்கள் எல்லாமே செகாவ் கதைதான். "கண் கெட்ட பிறகு சூரிய

நமஸ்காரம்,'' ''சாகிற காலத்தில் சங்கரா! சங்கரா!'' என்னும் நம் நிந்தைகள், கேலிகள் எல்லாம் செகாவ் கதைகள். அப்பா கண்களால் விழித்து மிரட்டும்போது சமையலறைக்கு ஓடி குழந்தை தாயைக் கட்டியணைத்துக் கொள்கிறதே, அங்கு நடப்பது செகாவ் கதை. சந்தியா வந்தனம் செய்ய ஆற்றங்கரைக்குப் போகும் அவசரத்தில் வில்லையும் அம்பையும் விட்டெறிந்த ராமன், ஆசிரமத்திற்குத் திரும்பிய பொழுது, ஒரு தவளையின்மீது அம்பு தைத்திருந்ததைக் கண்டான். ''ராமா, மனிதர்கள் என்னைத் துன்புறுத்தினால் உன்னிடம் முறையிட்டுக் கொள்வேன். நீயே என்னைத் துன்புறுத்தினால் யாரிடம் முறையிட்டுக் கொள்வேன். ராமா?'' என்று அத் தவளை ராமனை நோக்கிக் கதறியதாம். வால்மீகியில் செகாவ் கதை நடக்கிறது. ஹைகோர்ட்டில் உங்கள் கேஸ் தோல்வியடைந்து விட்டால் சுப்ரிம் கோர்ட்டுக்குப் போகிறீர்களே அங்கு நடப்பது செகாவ் கதை. சுப்ரிம் கோர்ட்டில் கேஸ் ஜயிக்க வேண்டும் என்று திருப்பதி வெங்கிடாஜலபதிக்காகபணம் முடிகிறீர்களே மஞ்சள் துணியில், அது நீங்கள் படிக்கும் செகாவ் கதை. இடையிடையே ரயில் என்ஜின் புகையைக் கக்கித் தன்னைச் சுத்தம் செய்து கொள்கிறதே அது செகாவ் கதை படித்த புகை வண்டி. எங்கு நீங்கள் இலக்கியத்தையும், வாழ்க்கையையும், பக்தியையும், மனவியலையும், தெய்வீகத்தையும், சட்ட விதிகளையும், வெறும் கதையையும், உங்கள் மூட நம்பிக்கையையும் பிரிக்கிறீர்கள்? எங்கு பிரிக்க முடியும்? இவையெல்லாம் தனித்தனி என்கிறீர்களே. உங்கள் அநுபவம் எவ்வளவு உக்கிரம் கொண்டது? உங்கள் வாழ்க்கை எவ்வளவு அர்த்தம் கொண்டது? நீங்கள் உங்களை, யோ, என்னையோ, உங்களது எனது உலகங்களையோ, எங்கு புரிந்து கொண்டீர்கள்? குறியீடுகள் நீங்கள் பெறும் பொழுது, அக்குறியீடுகள் எவ்வளவு அர்த்தம் வாய்ந்தவை?

என் உலகம் ஏன் இப்படி இருக்கிறது? நான் ஏன் இவ்வாறெல்லாம் உணர்கிறேன்? ஏன் என் உலகமும் நானும் இப்படி உங்களுக்கு விசித்திரமானதாக, உங்கள் அனுபவத்துடன் ஒத்திசையாததாக

நவீன ஓவியம்
MODERN ART

இருக்கிறது? — என்றெல்லாம் கேள்விகள் எழலாம். அதற்கு நான் பதில் சொல்ல முடியாது. பதில்கள் ஏதும் இல்லை என்ற காரணத்தால். இந்தக் கேள்விகள் எல்லாம் அபத்தங்கள். எத்தனை அநுபவிக்கும் ஜீவன்கள் உண்டோ, அத்தனை அநுபவங்கள், அத்தனை பார்வைகள், அத்தனை உலகங்கள். அத்தனை 'நான்-கள்' அத்தனை 'நீ'-ங்கள் என்ருகிவிட்ட பொழுது உங்களிடமிருந்து வேறுபட்டவன் நான் என்று நீங்கள் கருதுவதோ, நீங்கள் என்னிடமிருந்து வேறுபட்டவர்கள் என்று கருதுவதோ, இவையெல்லாம் கேள்விக்குரிய விஷயங்களாக, ஏன் என்று ஆராயக்கூடிய பொருள்களாக நீங்களோ, நானே நினைப்பது, அவ்வாருன கேள்விகள், நினைப்புகள் எல்லாம் தன்னுடைய 'நான்'-க்கு, தன்னுடைய உலகத்திற்கு ஏதோ தெய்வ சாந்நித்யம் உண்டென்று நினைக்கும் அகங்காரம் (Arrogance) என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. அறியாமை விளைவிக்கும் மூர்க்கத்தனமான கர்வம் என்றும் எனக்குத் தோன்றுகிறது. என்னை நான் அறிந்து கொள்ளும் முறை, என் உலகத்தை நான் அறிந்து கொள்ளும் முறை, உங்களையும், உங்கள் உலகத்தையும் அறிந்து கொள்வதில்தான் இருக்கிறது. இம்முயற்சி, என்னையோ என் உலகத்தையோ பற்றிய அறிவிற்கு வளம் சேர்ப்பதாகவோ, செழுமை உண்டாக்குவதாகவோ நான் நினைக்கவில்லை. மாருக, நானே, என் உலகமே, உங்களையும் உங்கள் உலகங்களையும் அறிவதில்தான் இருக்கிறது. ●

(தொடரும்)

வீக்னஸ்

ஒரு சிகாகோ பெண்மணி அடிக்கடி டிக்கன்ஸ் எழுதிய புத்தகங்களையே வாங்கிக் கொண்டிருந்தாள். ஏன் என்று கேட்டதற்கு பதில் சொன்னாள்.

"எனக்கு டிக்கன்ஸ் என்ருலேயே ஒரு வீக்னஸ். முன்பு ஒரு தரம் அவர் எழுதிய புத்தகத்தில் ஓர் ஐந்து டாலர் நோட்டு எனக்குக் கிடைத்தது.

—வீக்லி

வாசகன் யார்?

நாவலாசிரியன் தன்னுடைய வாசகர்களுக்காகவே இலக்கியத்தைப் படைக்கிருன். பெரும்பான்மையான வாசகர்கள் ஒரு நாவலை விரும்பிப் படிக்கும் போதுதான் அதைப் படைத்த ஆசிரியனின் நோக்கம் முழுமையாக நிறைவேறுகிறது.

வாசகர்களில் இருவகையினர் உளர். ஆழ்ந்து படித்து, இருந்து சிந்தித்து, உணர்ந்து போற்றுபவர்கள் ஒரு சாரார். இவர்கள் கதையைப் படிக்கும் போதே கதைமாந்தரின் இன்ப துன்பங்களை யெல்லாம் தாம் அடைந்து, கதை முடிந்த பிறகும் ஒருநாள் இருநாள் வரையில் கதையின் உணர்ச்சி வயமாய் இருப்பார்கள். அவசரம் அவசரமாய்ப் புரட்டி, மேலோட்டமாய்ப் பார்த்து விட்டு, படித்ததும் மறந்துவிடுவோர் ஒரு சாரார். இவர்கட்குக் காலையில் வரும் செய்தித் தாளும் ஒன்றுதான்; காலத்தை வென்று வாழும் இலக்கியப் படைப்பும் ஒன்றுதான். உணர்ச்சி இல்லாமல் படித்து விட்டு, எந்தவிதமான நெகிழ்ச்சியும் இன்றி மூடி வைத்து மறப்பவர்கள் இவர்கள். இவ்விரு சாராரும் மொத்தத்தில் 'வாசகர்கள்' என்ற பெயருக்கு உரியவர்களே என்ருலும், நுகரும் தகுதியால் வேறுபட்டு நிற்கின்றனர். படைப்பதற்குத் தகுதி வேண்டுவது போலவே நுகர்தற்கும் பக்குவம் வேண்டும். இந்தப் பக்குவம் கொண்டவனே நல்ல வாசகன் ஆவான்.

வாசகனும் ஒரு வகையில் நாவலாசிரியனே ஆவன் என்று கருதுகிருர் பெர்சி லுப்பாக் (1) ஒரு நாவலைப் படித்து முடிகிறபோது அது

எழில்முதல்வன்

அந்த வாசகனை நிறைவு படுத்தலாம்; நிறைவு படுத்தாமலும் இருக்கலாம். ஆனுலும் படிக்

(1) The reader of a novel - by which, I mean the critical reader—is himself a novelist, he is the maker of a book which may or may not please his taste when it is finished, but of a book for which he must take his own share of the responsibility. The author does his part, but he cannot transfer his book like a bubble into the brain of the critic

கின்ற நேரத்தில் தன்னை மறந்து, சூழலை மறந்து, கதையோடு வாசகன் ஒன்றி விடுகிறான். இதன் காரணமாக நாவலாசிரியன் படைத்துக் காட்டும் அனைத்தையும், தன் உணரும் திறனால் தன் மனத்துள்ளே மீண்டும் தானாகவே படைத்துக் கொள்கிறான்.

எண்ணமும் உணர்ச்சியும் வீறு மிக்கன. அவற்றை அப்படியே பாஷையில் வடித்து விடுவது என்பதும் இயலாத ஒன்றேயாம். உணர்ச்சியோடு மொழியை ஒப்பிட்டுப் பார்க்கிற போது தான் முன்னதன் வலிவும், பின்னதன் பலவீனமும் தெரிகிறது. எனவே உணர்த்துதல் என்பது ஆசிரியனின் கடமை ஆனாலும் — அதை உணருகிற திறன் வாசகனுக்குக் கட்டாயம் வேண்டும். உணர்ச்சி என்பது உணர்வோன் வலித்தே.

உணர்வு நலம் மிக்க வாசகன் படைப்போடு தோய்ந்து விடுகிறான். இங்ஙனம் உள்ளம் கலந்து படிப்பதே ஒரு கலைதான். படிப்பதும் படைப்புக் கலையோடு ஒத்தது என்று கருதுகிறார் ஜாய்ஸ் கேரி (2) நல்ல வாசகன் ஒரு படைப்பாளியின் மனநிலையோடுதான் நாவலை அணுகுகிறான். அதனால்தான் நாவலாசிரியன் எழுத்தில் படைப்பதை—வாசகன் மனத்தில் மீண்டும் ஒரு முறை படைத்துக் கொண்டு நுகர முடிகிறது. தன்னுள்ளே ஒரு புது உலகத்தைப் பாவனையால் சிருஷ்டித்துக் கொள்ளும் இச் செயல் எல்லோரும் அறியப் புறத்தே புலனாவதில்லை. ஏன்—வாசகனுக்கே கூடத் தெரிவதில்லை. அவ

---

will possess his work. The reader must therefore become, for his part, a novelist, never permitting himself to suppose that the creaction of the book is solely the affair or the author.

—Percy Lubbock, The craft of Fiction:

(2) Reading is creative art, subject to the same rules, the same limitations as the imaginative process...The reader may believe that he is completely receptive and uncritical, he may and should attempt to expose himself to an experience without prejudice, but in fact he is performing a highly active and complex creative act. The reason he does not notice it is because of it takes place in the sub-conscious.

—Joyce cary, Art and Reality, P. 119-120

லையும் அறியாமல் தொழிற்படும் அடிமனத்தின் சித்து வித்தையே அது.

ஏற்புத்திறன் : (Receiptvity)

மனிதர்கட்கு விருப்பும் உண்டு; வெறுப்பும் உண்டு; சிலவற்றை அளவுக்கு மீறி போற்றுவதும், சிலவற்றை அளவுக்கு மீறி வெறுப்பதும் மனத்தின் போக்காக உள்ளது. ஒவ்வொரு வாசகனுக்கும் இங்ஙனம் தனிப்பட்ட பண்புகள் உண்டு.

ஒருவர் குறிப்பிட்ட ஒரு மாவட்டத்தை நிலைக்களனாகக் கொண்டு தீட்டப்படும் நாவல்களையே படிப்பார்; வேற்று மாவட்டத்தைப் பற்றிய கதையாக இருந்தாலும், வேற்று நாட்டில் நிகழும் கதையாக இருந்தாலும் அதை ஏற்றெடுத்தும் பாரார். ஒருவருக்குக் கடந்த காலத்தைப் பின்னணியாகக் கொண்ட வரலாற்று நாவல்களே பிடிக்கும்; சமகால வாழ்க்கையைச் சித்தரிக்கும் சமூக நாவல்கள் பிடிக்காது. சிலர் வீர சாகசங்களை விளக்கிக் காட்டும் அற்புத நாவல்களை விரும்புவர்; இன்னும் சிலருக்கு துன்பியல்தான் விருப்பம் தரும்; இன்பியலை வெறுப்பர். இதே போல கதை மாந்தர்கள் பற்றியும் கூட தீவிரமான விருப்பு வெறுப்புக்கள் உண்டு. என் நண்பர் ஒருவர்க்கு பாட்டாளி வர்க்க இலக்கியம்தான் பிடிக்கும்; கதையில் எங்கேனும் உயர்மட்ட பெருங்குடிச் செல்வர்கள் வருவார்களானால் 'இது பூர்ஷ்வா இலக்கியம்' என்று ஒதுக்கி விடுவார். மற்றொரு நண்பர் உயர் மத்தியதர வர்க்க வாழ்வை விளக்கும் நாவலையே போற்றுவார். நாவலில் தொழிலாளிகள், விவசாயிகள் முதலியோர் இடம் பெறுவாரானால் 'இங்கேயும் அரசியலா ? சீச்சீ ... இது குப்பை'' என்று கண்ணை மூடிக்கொண்டு புறக்கணிப்பார். உத்தி வகையிலும் வாசகர்கட்கு ரசனை பேதங்கள் உண்டு. படர்க்கைக் கூற்றாகக் கதை சொல்லிச் செல்லும் நாவலைக் கண்டால் 'இது பழைய முறை; கலையிலே புதுமை வேண்டாமா?' என்று கவலைப்படுவார்கள்; கதை மாந்தர்கள் மாறி மாறிச் சொல்லுவது போன்ற கதையையே 'ஆகா. புதுமை' என்று பாராட்டுவார்கள். இன்னும் சிலரோ புதுப் போக்கில் நாவல்கள் அமைத்தால், 'சீ! எழுதத் தெரியாதவன் எல்லாம் சோதனை செய்ய வந்து விட்டான்! சொல்வதற்குக் கதை இருந்தால் பேசாமல் எல்லோரையும் போல எழுதி விட்டுப் போவது தானே! புதுமை என்ன வேண்டிக் கிடக்கிறது' என்று புலம்புவர். இவ்வாறாக இடம், காலம், கதை

மாந்தர், செயல்கள், உத்தி, பார்வை நிலை ஒவ்வொன்று பற்றியும் தீவிரமான விருப்பு வெறுப்புக் கொண்டவர்களே வாசகர்களாக உள்ளனர். எது எவ்வாறுயினும், ஒரு நாவலைப் படிக்க ஆரம்பித்து விட்டால் எல்லா விதமான விருப்பு வெறுப்புக்களையும் தூர ஒதுக்கி வைத்து விட்டுக் கதையில் ஆழ்ந்துவிட வேண்டும். இதுவே நாவலை அனுபவிக்கும் வழி. தீவிரமான விருப்பு வெறுப்புக்கள் அமைந்த வாசகனுக்கு நாவல் காட்டும் உண்மையை அறிந்து கொள்ளும் ஏற்புத்திறன் நிச்சயம் இருப்பதில்லை.

படிப்பதில் இருமுறைகள்.

பொதுவாகப் படிப்பதில் இருமுறைகள் உண்டு. ஆழ உழுவது ஒரு முறை; நுனிப் புல் மேய்வது பிறிதொரு முறை.

பொறுப்புணர்ச்சி யோடும், அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வத் துடிப்போடும், உணர்ந்து படிக்கும் போது தான் நூலின் திறன் புலனுகும். 'நவில்தொறும் நூல் நயம்' என்று வள்ளுவர் குறிப்பிடுவதும் இதைத் தான். உணர்வால் ஒன்றி, உளத்தால் உவந்து படிக்கும் காலத்து நல்ல வாசகன் தன்னையே இழந்து விடுகிருன்; சுற்றுப்புறச் சூழ் நிலையை மறக்கிருன்; நிஜ உலகில் இருந்து விடுபட்டு, நாவல் காட்டும் கற்பிதமான உண்மை உலகில் புகுகிருன். நாவலாசிரியனின் அனுபவத்தைத் தன்னுடையதாய் ஆக்கிக் கொள்கிருன். அவன் வேறு நூல் வேறு என்ற நிலை மாறி இரண்டும் ஒன்றே என்னும் அனுபூதி நிலையை அடைகிருன். இதுவே ஆழ உழும் முறை.

ஓடுகின்ற ஓட்டத்தில் படிப்பதும், கருத்துக்களை வாங்கிக் கொள்ளாமல் பக்கங்களைப் புரட்டுவதும், இடை இடையே எண்ணற்ற பக்கங்களை விட்டு விட்டு தவளைப் பாய்ச்சலாகப் பாய்வதும் நல்ல முறை ஆகாது. இங்ஙனம் படிக்கும் வாசகர்கள் தழைதேடி அலையும் ஆடுபோல துன்பமே கொள்வர். விருந்துச் சாப்பாட்டை ரயிலுக்குப் போகும் அவசரத்தில் சாப்பிடுகிறவர்களைப் போன்றவர்கள் இவ் வாசகர்கள். இவர்களால் நூலையும் உணர முடியாது. தன்னிறைவும் பெறமுடியாது. இவர்கள் தான் நாவலாசிரியனின் எதிரிகள்.

திரும்பத் திரும்பப் படித்தல்:

வாழ்க்கையில் ஒரு முறை பெற்ற அனுபவத்தை இன்ெனரு முறை பெற முடியாது. ஆண்டாண்டு கோடி அழுது புரண்டாலும் மாண்டு விட்ட அவ்வனுபவத்தை மீண்டும்

அடைய முடியாது. ஆனால் நாவல் உலகில் இது முடியும். கலைத்துறையில் கிடைக்கும் ஆக்கம் இதுவே. எந்த நேரத்தில் வேண்டுமானாலும் - நாம் விரும்பும் ஒன்றை மீண்டும் எடுத்துப் படித்து நுகர முடியும்.

திரும்பத் திரும்பப் படித்தல் என்பது எல்லாவற்றிற்கும் பொருந்தாது; கவிதையைப் படிக்க முடியும்; நாவலைப் படிக்க முடியாது. பெரும்பாலான நாவல்களை ஒரு முறைக்கு மேல் படிக்க முடிவதில்லை. ஆயினும் விதிவிலக்காகச் சில நாவல்கள் எத்தனை முறை படித்தாலும் சலிப்பூட்டாமல் இருக்கும்; மேலும் மேலும் படிக்கத் தூண்டும். எந்த ஒரு நாவல் வாசகனை இரண்டாம் முறையும் படிக்கத் தூண்டுகிறதோ அது நல்ல நாவல் என்பதில் ஐயமில்லை. இங்கே ஒரு உண்மையையும் உணரவேண்டும். எவ்வளவு மகத்தான நாவலாக இருந்தாலும் முதல் முறையாகப் படிக்கும் போது ஏற்படும் ஆர்வம் இரண்டாம் முறைபடிக்கும் போது ஏற்படுவதில்லை. எனவே, விட்டு விட்டு, நினைத்து நினைத்தே இரண்டாம் முறை படிக்க முடிகிறது.

அளவுக்கு மீறி நெடிதாக அமைந்த நாவல்களைப் படிப்பதும் வாசகனுக்குச் சிரமத்தையே ஊட்டும். சில நெடிதாக இருந்தாலும், கட்டுக்கோப்பு குலையாமல் விறுவிறுப்பு மிகுந்து இருக்கும். இவ்வகை நாவல்களைப் படிப்பதில் சிரமம் இல்லை. நாவலில் கட்டுக்கோப்பு என்பது எண்ணு வழிப்பட்ட பக்கங்கட்கும், காலவரன் முறைப்படி அமையும் நிகழ்ச்சி கோவைக்கும் இடையே உருவாகும் இயைபே எனலாம்.

மொத்தத்தில் அனுபவ வேட்கையோடும், இன்ப நாட்டத்தோடும் படிக்கும் வாசகனே நல்ல வாசகன். இவனே நாவலாசிரியனின் எழுச்சிக்குத் தூண்டுகோல்.

உரிப்பு

இந்த நகரச் சுவர்கள்
நகராத பாம்புகள்

அடிக்கடி வால்போஸ்டர் தோல்
வளர்ந்து தடித்து விட,
நள்ளிரவில்
அவசரமாய் சட்டையுரித்துப்
புதுத் தோலில் விடிந்து
பளபளக்கும்
பட்டணத்துப் பாம்புகள்
இந்த நகராத சுவர்கள்.

—எஸ். வைதீஸ்வரன்

'சிவில் கான்ட்ராக்ட்'

1

நண்பன் கேசவ நம்பியாருக்குக் கல்யாணமாம்.

கட்டுப்படுத்த யாரும் இல்லாத இந்த ''ப்ரீ லேன்ஸர்'', இந்த சுதந்திரப் பறவை, தானாகவா கூண்டுக்குள் அடைபட்டுக் கொள்ளப் போகிறது.

இரண்டு ஆண்டுகள் இடைவெளிக்குப் பின் பம்பாயில் மத்திய அரசாங்க இலாகா ஒன்றில் வேலை செய்துகொண்டிருக்கும் அவனிடமிருந்து கடிதம் வந்தது.

பெண் அவனைப் போலவே கேரளாவில் பிறந்தாலும், பல ஆண்டுகள் தமிழ் நாட்டில் வாழ்ந்தாள் என்றும், திருமணம் பாலக்காட்டுக்கு அருகில் உள்ள கொல்லங்கோட்டில் நடக்கப் போகிறது என்றும், நான் கட்டாயம் முதல் நாள் இரவே வந்துவிட வேண்டும் என்றும் எழுதியிருந்தான்.

கேசவன் எனக்குப் பரிச்சயம் ஆனது முசௌரியில். எங்கள் வேலைக்கான அடிப்படைப் பயிற்சி அங்குதான். வட இந்திய 'சப்ஜி'களின் மேலிருந்த தீராத பகைமை நட்புக்கு அடிப்படை. அவன் தந்தை ஒரு பார்-அட்-லா. சென்னை ஹைகோர்ட்டில் தலைசிறந்த அட்வோகேட்களில் ஒருவராக இருந்து திடீரென மாரடைப்பால் இறந்தவர். தாயார் கொச்சியில் பிரபல்யமான மேனன் குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவர். இப்பொழுது அவரும் இல்லை. இருவரும் சீரும் சிறப்புமாக இருக்கும்பொழுது கிடைத்த கான்வென்ட் படிப்பும், பி.ஏ. பட்டமும் இவற்றை மூலதனமாக வைத்துக்கொண்டு ஒரு அதிகாரியாகிவிட்டான்.

முசௌரியில் இருக்கும்பொழுது 'டெய்லி பூஜ்ஜிங்' ஓரிரண்டு 'பெக்'களிலேயே 'அவுட்' ஆகிவிடுவான். பாத்ரூமில் தடுமாறி விழுந்து அங்கேயே படுத்துக்கொண்ட நாட்கள் பல உண்டு.

பயிற்சி முடிந்து எனக்கு சென்னையிலும் அவனுக்கு பம்பாயிலும் 'போஸ்டிங்' ஆயிற்று. ஒரு ஆண்டு கழித்து நான் ஈரோட்டுக்கு மாற்றப் பட்டேன்.

பம்பாயில் மது விலக்கைத் தளர்த்துகிறார்கள் என்னும் செய்தியைப் பத்திரிகைகளில் படிக்கும் பொழுதெல்லாம் நண்பன் நினைவுதான் வரும். அவனைப் போன்றோருக்கு அது ஒரு 'ஐடியல் ஸிட்டி'

2

நண்பன் கேட்டுக்கொண்ட படியே திருமணத்திற்கு முதல் நாளே ஈரோட்டிலிருந்து திருப்பூர், பொள்ளாச்சி வழியாக கொல்லங்கோட்டிற்குப் புறப்பட்டேன். பொள்ளாச்சியிலிருந்து கேரளா பஸ் ஒன்றில் கணக்கற்ற புளி மூட்டைகளில் ஒன்றாக நானும் கொல்லங்கோடு போய்ச் சேர்ந்தேன்.

முதலில் பெண் வீட்டுக்குச் சென்றேன். பெண்ணின் தந்தை தமிழ் நாட்டில் போலீஸ் அதிகாரியாக இருந்து நான்கைந்து ஆண்டுகளுக்கு முன் ரிடயரானவர். மதுரையில் கல்லூரிப் படிப்பின் பொழுதே அவரைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறேன். 'ராவ்சாஹிப்' பட்டம் வாங்குவதற்காகவோ என்னவோ, பிரிடிஷ்காரர்களிடமிருந்த அபரிமிதமான அபிமானம் காரணமாக, ஆகஸ்டு கலவரங்களின்பொழுது திராவக வீச்சால் முகத்தைக் கோரப் படுத்திக் கொண்டவர். அவர் மனைவிக்குத் தமிழ் தெரிந்திருந்தது. மணப்பெண்ணை எனக்கு அறிமுகப் படுத்தினார்கள்.

ஒடிந்து விழுந்து கொண்டிருக்கும் சோளத் தட்டைக்கா இந்தச் சிட்டுக்குருவி?

டிபனை முடித்தபின் மாப்பிள்ளை வீட்டார் தங்கியிருக்கும் இடத்துக்குச் சென்றேன். நண்பன் கேசவன் ஒரு மணி நேரத்துக்கு முன்புதான் வந்தானாம். விரல்விட்டு எண்ணக் கூடிய அளவிலேயே இருந்த உறவினர்களை எனக்கு அறிமுகப் படுத்தினான். மங்களூரில் ஏதோ ஒரு ஸ்தாபனத்தில் ரிஸர்ச் அஸிஸ்டண்ட் ஆக இருக்கும் தங்கை தந்தச் சிலைபோன்றிருந்தாள். கேசவனின் தங்கைதானா இவள். திருவெள்ளாவில் மாஜிஸ்ட்ரேட்டாக இருக்கும் அக்காவும் அவள் கணவரும், பென்ஷனராக இருக்கும் சித்தப்பாவும் அவர் மனைவியும், சென்னையில் ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி ஒன்றில் வேலை பார்க்கும் அண்ணன் உன்னிகிருஷ்ணன். இவ்வளவுதான் உறவினர்கள். நண்பன் என்ற முறையில் நான் ஒருவன் தான்.

பெண்ணின் தந்தையும் அங்குதான் இருந்தார். அவரைப் பற்றி நான் ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கிறேன்

— முத்து —

என்று கூறினேன். 'யூ ஆர் எ பிகர் லெஜண்ட் தேன் மதுரை வீரன்' என்றேன்.

கிழவருக்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. கேசவன் நமட்டுச் சிரிப்பொன்று சிரித்தான்.

சிறிது நேரத்தில் கிழவர் போய்விட்டார்.

உன்னியைப்பற்றி நானும் கேசவனும் மணிக் கணக்கில் பேசிக் கொண்டிருப்பதுண்டு. எல்லா வகையிலும் அவர் அவனுக்கு அண்ணன் தான். சுதந்திரமாகச் சிந்திப்பதற்கும் செயலாற்றுவதற்கும் இடையூருக இருந்த காரணத்திற்காக மனைவியைப் பிறந்த வீட்டிற்கே அனுப்பிவிட்டார். சட்டப்படியான விவாக ரத்துக் கோரிக் கோர்ட்டுக்கும் சென்றுவிட்டார்.

ஆங்கிலத்தில் அவர் எழுதிய நாவலின் 'மேனுஸ்கிரிப்ட்' கனை லண்டனில் ஒரு பப்ளிஷருக்கு அனுப்பியிருப்பதாக முன்னமே கேசவன் என்னிடம் கூறியிருக்கிருன்.

அவரை ஒரு தடவையாவது சந்திக்க வேண்டுமென்று எனக்கு ஆசை.

முதலில் அவருடைய நாவலைப் பற்றிக் கேட்டேன்.

பப்ளிஷர்கள் அதற்குக் கொஞ்சம் 'கோஸ்ட் ரைட்டிங்' தேவைப்படுகிறது என்று கருதுகிருர்களாம். அதற்குண்டான வசதி இப்பொழுது அவருக்குக் கிடையாதாம்.

'தே டோன்ட் டேக் எனி ரிஸ்க்ஸ் யூ நோ' என்ருர்.

பின்னர் ஆங்கிலத்தில் எழுதும் இந்திய எழுத்தாளர்கள் பற்றிய ஒரு விமர்சனம்.

'ஆர். கே. நாராயண் ஹேஸ் பிகம் ஸ்டேல். ஹி ஹேஸ் நாட் ஈவன் பீன் ஏபில் டு ரிபிட் ஹிஸ் கைட். கமலா மார்கண்டேயா இஸ் ஹைலி ஆர்டிபிஸியல். நீராட்சௌதிரி இஸ் டெர்ரிப்ளி ப்ரொ பிரிடிஷ். ஹி ஹேஸ் நோ டெப்த். மல்கோங்கர் இஸ் டு மச் ஆப்டர் ட்ராமா.'

சிறிது நேரமௌனத்திற்குப் பின்பு திடீரென்று 'அன்டர் மருமக்கள் தாயம் செட்டப், மேரேஜ் இஸ் எ ஸிவில் காண்ட்ராக்ட்' என்ருர். ஏன் எதற்காக இவ்வாறு கூறினுர்?

தான் கொடுத்துள்ள விவாக ரத்து சம்மந்தமான வியாஜ்யத்திற்கு ஒரு அபாலஜி.

எனக்குப் பதில் பேசத் தோன்றவில்லை.

பின்னர் மதுபானங்களின் பலவகைகளைப் பற்றிய ஒரு பிரசங்கம்.

உள்ளூர்ச் சரக்கான தென்னங் கள்ளில் ஆரம்பித்து, நேபாளியர்களின் தேசிய பானமான 'பங்'கில் முடிந்தது.

இரவு உணவுக்குப் பின் படுத்துக்கொண்டே கேசவன் கேட்டான்.

'நம்ம 'உட்பி' எப்படி மாப்பிள்ளே?' என்னை முசௌரியி விருந்தே மாப்பிள்ளே என்று தான் அழைப்பான்.

'வொண்டர்புல்' என்றேன்.

'யூ திங்க் ஐ டோன்ட் டிஸர்வ் ஹர்'.

உண்மையைக் கூறியிருந்தால் தயக்கமின்றி 'ஆம்' என்றுதான் கூறியிருக்க வேண்டும்.

'வெல்... ஷி இஸ் டு குட் பார் யூ' என்றேன்.

பின்பு வேலை விஷயங்களைக் குறித்துச் சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டுத் தூங்கிவிட்டோம்.

கேசவனின் பம்பாய் வாழ்க்கைபற்றிப் பேச அன்றிரவு நேரமில்லை. தூங்கும் பொழுது அவன் இருமிய சப்தம் பூகம்பம் போலிருந்தது.

அடுத்த நாள் காலை ஐந்தரை மணியளவில் கேசவனை நான்தான் எழுப்பிவிட்டேன். ஒன்பதிலிருந்து பத்து மணிக்குள் முகூர்த்தம்.

டிரஸ் பண்ணிக் கொண்டு ஹாலில் வந்து உட்கார்ந்தோம்.

பக்கத்திலிருந்த உன்னியிடம் பெண்ணின் தந்தைக்கு முன்பு தான் சிகரெட் பற்ற வைத்ததையும், அவர் 'நீ தினந்தோறும் எத்தனை சிகரெட் பிடிக்கிறாய்' என்று கேட்டதையும் கூறிக்கொண்டிருந்தான், கேசவன். 'அடுத்த தடவை அந்தக் கிழவர் என்னைப் பார்க்கும் பொழுது இரண்டு கைகளிலும் சிகரெட்டைப் பற்றவைத்துக் கொள்ளப் போகிறேன்' என்றான்.

ஆள் இன்னும் ஏறாத
குதிரை மீது
அமர்ந்ததன் வாயில்
நுரைகப்ப அடக்காமல்,
உதைக்கும் கால்களின்
உத்வேகம் தணிந்து
ஓய்ந்து துவண்டு
சலிக்க ஒடுக்காமல்,
முனகல் ஒலிகள்
சரணம் சரணம் என
கழுத்தில் இட்டுக்
கயிற்றைப் பிடிக்காமல்,

கண்ணென்றும்
மூக்கென்றும்
கண்ணுக்குள்
கனவென்றும்
உயிர்வாழும்
காலத்தின்
முழுமைக்கும்
பொருளென்றும்
முலைமீது நோக்கத்தை
உள்ளடக்கி,
வசீகர அசிங்கங்
களாய்
வாய்விட்
டெழுதி
எதையோ இழந்த
வருத்தத்துக் கென்செய்ய?...

—சந்திரமௌலி

உன்னி விழுந்து விழுந்து சிரித்தார்.

சில நிமிடங்களுக்குப் பின்பு கேசவன் என்னை வெளியே அழைத்தான்.

'இந்தப் பெண் எனக்கு நிச்சயம் செய்யப்படவில்லையென்ருல் நான் இந்நேரம் ஒரு மராத்தியப் பெண்ணை மணந்து கொண்டிருப்பேன்' என்ருன்.

'ஷி அல்லொட் மி டு டு எவ்வெரிதிங் எக்ஸெப்ட்... இப் ஐ ஹேட் டன் தேட் ஐ வுட் ஹேவ் மேரீட் ஹர். ஐ வாஸ் ஸென்டிமென்டலி அட்டாச்ட் டு ஹர்.'

என்ன சொல்வதென்று தெரியாது மீசையால் பாதிக்கு மேல் மறைக்கப்பட்டிருந்த அவன் சுண்டைக்காய் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தேன். சற்று மௌனத்திற்குப்பின் அவனே தொடர்ந்தான்.

'ஐ வாஸ் கேரீயிங் ஆன் வித் அனதர் கேர்ள் ஸைமல்டேனியஸ்லி.'

அவளுக்கு வயது பதினைந்து பதினாறுதான் இருக்குமாம். அவன் 'பேயிங் கஸ்ட்' ஆகத் தங்கியிருந்த வீட்டுக்குச் சொந்தக்காரரின் வளர்ப்புப் பிள்ளையாம். இரவு பனிரண்டு மணியானுலும் படித்துக் கொண்டிருக்கும் சாக்கில் அவனுக்காகக் காத்துக் கொண்டிருப்பாளாம்.

'நண்பர்களிடம் நிறையக் கடன் வாங்கிவிட்டேன். சில மாதங்களுக்கு முன்பு மஞ்சள் காமாலை வியாதியால் தாக்கப்பட்டு ஒன்றரை மாதம் ஆஸ்பத்திரியில் இருந்தேன். அதற்குப் பின்னர்தான் திருமணம் செய்துகொள்ள முடிவு செய்தேன்' என்ருன்.

கேசவன் என்னை ஏமாற்றிவிடவில்லை.

ஒன்பதேகால் மணிக்குப் பெண்வீட்டார் எங்களை வந்து அழைத்துச் சென்ருர்கள். பந்தலைச் சுற்றிப் படம் வரைந்து தொங்கவிட்டாற்போல் சலனமற்று நின்று கொண்டிருக்கும் பெண்கள்.

ஐந்து நிமிடங்களில் திருமணம் முடிந்து விட்டது.

'எங்கள் திருமணம் எப்படி இருக்கிறது?' என்ருர் மிஸ்டர் மேனன். பம்பாயில் தனியார் ஸ்தாபனம் ஒன்றில் உதவிச் செயலாளராக இருப்பவர் அவர். இந்தக் கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்ததே அவர்தான்.

'டிலைட்புல்லி சிம்பிள்' என்றேன்.

உண்மையும் அதுதான். மணமக்கள் நெல்லும் தென்னங் குருத்தும் வைக்கப்பட்டுள்ள கும்பத்தை மூன்று முறை வலம் வந்து, பாயில் அமர்ந்து மாலையும் மோதிரமும் மாற்றிக் கொள்கின்றனர். பின்பு மணமகன் சங்கிலி

ஒன்றை மணமகளுக்கு அணிவிக்கிறான். திருமணம் முடிந்து விடுகிறது.

கூட்டமெல்லாம்கலைந்தபின் பந்தலிலிருந்த ஹாலுக்குச் சென்றோம்.

சிறிது நேரம் சென்றபின் கேசவன் என்னிடம் வந்து, 'மாப்பிள்ளே, போரடிக்குதுடா. லெட் அஸ் ரிடயர் டு தி நியரஸ்ட் டாடி-ஷாப்' என்றான்.

பொங்கி வந்த சிரிப்பைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டேன்.

வாசலில் கார் ஒன்று வந்து நின்றது. பெரியவர் ஒருவர் கேரளீயப் பாரம்பரிய முறையில் உடையணிந்திருந்த அவர் மனைவியுடன் இறங்கி வந்தார். எல்லோரும் எழுந்து நின்றார்கள். கேசவனுக்கு அம்மா வழியில் நெருங்கிய சொந்தமாம் அவர். மணிப்பூரில் ஜுடீஸியல் கமிஷனராக இருந்து ரிடயரானவராம். தாமதமாக வந்ததற்கு ஏதேதோ காரணங்கள் சொல்லிக் கொண்டிருந்தார்.

கள்ளுக்கடைக்குப் போகும் திட்டம் கைகூடவில்லை.

மதிய உணவை முடித்துக் கொண்டபின் நானும் உன்னியும் கோயம்புத்தூர் வழியாக ஊர் திரும்ப ஆயத்தமானோம். பெரியவர், அவரும் கோயம்புத்தூர் செல்ல வேண்டியிருக்கிறது எனக் கூறினார். அவர்

நினைவுச் சின்னம்

நகரின் புறத்தேயொரு
நாற்கால் மணிமண்டபம்
அகன்ற சாலையின் நடுவில்
ஆளுயரத்திற்கோர் சிலை.
கடைத்தெருவில் காலத்தை
வெல்ல ஒரு தூண்,
அடைத்த சந்திலொரு
அழியா நினைவுச் சின்னம்.
மறைந்தவன தொண்டு
மாயாதின்றும் உண்டு.
வரைந்த மாடம்
நிலவின் ஒளியில் களிகூட
மாகும்
வழிகாட்டி நிற்கும் சிலை
சாலையில் ஊருக்குப்
புதியவர்க்கு.
கழித்த சுண்ணமும்
காமுறு நடிகை மேனி
வண்ணப்பொலிவும்
தாங்கிநிற்கும்
கடைத்தெருத் தூண்
ஏங்கித் திரியும்
நன்றிக்கொரு மிருகம்
அடைத்த சந்தில்
நீர்பெய்து முகரும் நறுமல
ராகும்
படைத்த நினைவுச்சின்னம்.

—புதுமைக்கூத்தன்.

காரிலேயே புறப்பட்டோம். வண்டிக்குள் ஏறுமுன் கேசவனைப் பார்த்து, 'ட்ரை டு கன்ட்ரோல் யுவர் டெம்பர் மாப்பிள்ளை. தி ஓல்ட் மேன் கான்ட் ஹெல்ப் ஹிஸ் பேஸ்' என்றேன். அவன் சிரித்துக் கொண்டே 'சரி' என்றான்.

கோவை ரயில்வே ஸ்டேஷனில் நானும் உன்னியும் இறங்கிக் கொண்டோம். நீலகிரி எக்ஸ்பிரஸில் சென்னைக்கு அவர் ஒரு டிக்கட் வாங்கிக் கொண்டார்.

கர்பகிரஹத்திற்குச் சென்றும் அம்மன் தரிசனம் கிடைக்காத வருத்தம் அவருக்கு. கேரளா சென்றும் கள் குடிக்க முடியவில்லையே.

மதுரையிலிருந்து
வாரந்தோறும்
மலர்கிறது

குறிஞ்சி

(தேசிய முற்போக்கு
வார இதழ்)

ஆசிரியர் :
ப. நெடுமாறன்

ஆண்டுச் சந்தா ரூ. 12/-
ஆறு மாதச் சந்தா ரூ. 6-50
தனிப்பிரதி 25 காசுகள்

48, மேலமாசி வீதி,
மதுரை-1.

விவாகரத்து சம்மந்தமான கோர்ட் நடவடிக்கைகள் என்ன ஆயின என்று உன்னியிடம் கேட்கக் கடைசி வரையிலும் எனக்குத் தைரியம் வரவில்லை.

கோயம்புத்தூர் ஈரோடு பேசஞ்சரில் அன்று இரவே ஊர் திரும்பினேன்.

3

சுமார் ஆறு மாதங்களுக்குப் பின் அலுவலக விஷயம் குறித்து சென்னை செல்ல வேண்டியதாயிற்று. பாரி முனையில் பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டிருக்கும் பொழுது உன்னி என்னைப் பார்த்துவிட்டார்.

இரண்டு மாதங்களுக்கு முன்பே கேசவனின் மனைவி கொல்லங்கோட்டிற்கு வந்து விட்டதாகவும், அவளைத் திரும்ப அழைத்துக் கொள்ள அவன் எந்த முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை என்றும் உன்னி கூறினார்.

'சிவில் காண்ட்ராக்ட்' நடைமுறையில் ரத்தாகி விட்டது போலிருக்கிறது.

நண்பன் கேசவனும் சட்டப்படியான விவாக ரத்துக் கோரி கோர்ட்டுக்குச் சென்றிருக்கிறானா இல்லையா என்ற விபரம் எனக்கு இன்னும் தெரியவில்லை.

*

கதை இல்லாத கதை

ஹிந்தியிலிருந்து தமிழில்

சரஸ்வதிராம்நாத்

பஸ்ஸிலிருந்து இறங்கியதுமே 'க' கேட்ட கேள்வி, என்னப்பா சர்தாஜீ! எங்கே இப்படி!'

'கீ' யிடமிருந்து வந்த பதில் 'தில்லி கேட் வரை'

'தில்லி கேட்டா! தாங்கள் எங்கே வேலைபார்க்கிறீர்கள்?'

'உணவு இலாக்காவில்'

'என்ன வேலையோ?'

'U.D.C.—தாங்கள்?'

'நான் பிரஸ் ரிப்போர்ட்டர். அதாவது நிருபர்.' 'க' கழுத்தில் தொங்கிய டையின் முடிச்சை இறுக்கியவாறே 'கீ' யின் முகத்தில் தோன்றி மறைந்த பாவத்தைக் கவனிக்கிறான்.

நிருபர்???

'ஆம் — சில தினசரிகளுக்கு செய்தி சேகரிக்கிறேன்'

'நல்ல சம்பளம் வரும்!'

'ஏதோ பிழைப்பு நடக்கிறது'

'இந்த நாளில் பிழைப்பு நடந்தாலே பிரமாதம் தான். எவ்வளவு உழைத்தாலென்ன பலன் ஒன்றுமில்லை. எனக்கு 200 ரூபாய் வருகிறது. ஓவர் டைம் வேறு செய்கிறேன். ஆனாலும் காசு இருக்குமிடமே தெரியவில்லை'

'கீ'-'க'வின் ஒரு மாத சம்பளத்துடன் தன் வரும்படியை ஒத்திட்டுப் பார்த்துக் கொள்கிறான். முகத்திலே லேசானதொரு திருப்தி.

இருவரும் பிரியும் இடம் வருகிறது. மிகுந்த ஆர்வத்துடன் 'க', 'கீ' யின் கரத்தைப் பற்றி குலுக்குகிறான். இருவரும் பிரிகின்றனர். தனது காரியாலயத்தை நோக்கி நடைபோடும் 'க' வழியெல்லாம்—தனது 'இமேஜ்' தனது மதிப்பு குறைந்து விடும்படி, 'கீ' யிடம் தான் ஏதும் சொல்லி விடவில்லையே என நினைத்தவாறே வழி நடக்கிறான். ராஜ்காட்டிலிருந்து தரியாகஞ்சிற்குச் செல்ல 10 நிமிடங்கள் போதும். அதிலும் பேச்சுக் துணைக்கு யாரேனும் கிடைத்து விட்டால் இந்த நேரம் பின்னும் குறைந்து விட்டதாகத் தோன்றும் 'க' பெரும்பாலும் தனியாகத்தான் செல்லவேண்டி இருக்கிறது. ஆனால் 'கீ' வந்ததிலிருந்து பேச்சுத் துணை கிடைத்து விட்டதால் வழி நடக்கும் சிரமமே தெரிவதில்லை. இருவருக்கும் பரிச்சியம் ஏற்பட்டு இன்னும் அதிக நாட்கள் ஆகவில்லை. ஒருவரையொருவர் நெருங்கிப் பழகும் வரையில் தான் அதிகாரி

மொழிபெயர்ப்பு

தயக்கமெல்லாம். அதன்பின் இந்தக் குறுக்குச்சுவர் தானுக விழுந்து விடும். இது முதல் அறிமுகத்திலேயே 'க' கண்டறிந்த உண்மை.

'க', 'கீ' இருவரும் ஒரே வட்டாரத்தில் வசிப்பவர்கள். பெரும்பாலும் ஒரே பஸ்ஸில் தான் செல்லுவார்கள். 'க' தினசரி செய்தித்தாளின் நிருபர். நாள் முழுவதும் காகித கத்தைகளுடன் போராட்டம் தான். 'கீ' டிவிஷனல் குமாஸ்தா. நாள் முழுவதும், விரல்கள் டைப்ரைட்டரில் நர்த்தனமாகும். 'க' வியட்நாம் யுத்தத்தைப் பற்றிய செய்தியை பத்திரிகையின் முதல் பக்கத்தில் ப்ளாஷ் (flash) செய்தால் 'கீ' விவசாய சாகுபடி சம்பந்தமாக அமைச்சரகத்தின் பதிலை டிராப்ட் செய்கிருன். 'க' ஏதோ ஒரு ஊரில் அனல் காற்றினுல் இறந்தவர்களைப் பற்றிய செய்தியை விருவிருப்புடன் கொடுக்க, தயார் செய்து கொண்டிருந்தால், 'கீ' தனது இலாக்கா யின் புதிய திட்டத்தைப் பற்றி அவர் சொல்ல, குறிப்பெடுத்துக் கொண்டிருப்பான். பஸ் ஸ்டாப்பிலிருந்து வீடு திரும்பும் வரை—இதே பேச்சுத்தான். அவரவர் வேலையைப் பற்றிய பரஸ்பர பரிமாற்றம்.'

'கீ'—'க' விற்கு போன் செய்கிருன்.

'வருகிருயா? மோனுவிசாவில் லஞ்ச் சாப்பிடலாம்.'

'நான் சாப்பிட்டாயிற்று' என்கிருன் 'க'

ஓ...அப்படியானுல் இன்று மாலை—கனுட் பிளேஸ் புரோக்கிராம் உண்டா?'

'என்ன அது?'

'ஒன்றுமில்லை. 'ரிவோலி' யில் புதுப்படம். நல்ல படம் ஓடுகிறது. போகலாம்''

'சரி. நீ இங்கே வந்துவிடு. இருவரும் போகலாம்!'

மாலையில் இருவரும் ரிவோலிக்குச் செல்லுகின்றனர். டிக்கட் வாங்க 'கீ' புக்கிங் கவுண்டரை நோக்கி விரைகிருன். 'க' வேண்டாமெனத் தடுக்கிருன். சில நிமிடம்வரை இருவரும் தான்தான் டிக்கட் வாங்குவேன் என முரண்டு பிடிக்கின்றனர். முடிவில் 'கீ' தான் டிக்கட் வாங்கப் பணம் தருகிருன் 'கீ' மட்டும் பணம் தந்திராவிடில், தான் வெறுங் கையுடன் கவுண்டரின் முன்னே நின்று தவித்திரும்

போமே என 'க' மனதில் எண்ணிக் கொள்கிருன். ஒவ்வொரு நிமிடமும் எத்தகைய திகில். எத்தனை தவிப்பு, உயர் வகுப்பு என்ன? சாதாரண வகுப்பு டிக்கட் வாங்கக் கூட அவனிடம் ஏது பணம்? பையிலிருந்தது இரண்டே ரூபாய். 'கீ'யிடம் பணம் கேட்டிருந்தால் அல்லது தான் வாங்க அவன் அனுமதித்திருந்தால் சீச்சீ...... அது எத்தனை அவமானம்.

இடை நேரத்தில் இருவரும் எழுந்து ஸ்டாலை நோக்கி நடக்கின்றனர். 'கீ' தான் கேட்கிருன். "டீயா! காப்பியா?"

'ஒன்றும் வேண்டாம்' இப்பொழுது ஏதாவது சாப்பிட்டால் அவன் தான் பணம் தர வேண்டியிருக்கும். அதுதான் நியாயமும்கூட. பையில் இருக்கும் பணம் அதற்குக் கூடப் போதாது. தியேட்டர் ஸ்டால்களில் எல்லாமே விலை அதிகம். இருவரும் ஒன்றும் சாப்பிடுவதில்லை. இங்குமங்கும் நின்றுவிட்டு திரும்பி விடுகின்றனர்.

படம் முடிந்தபின் இருவரும் கூட்டத்திலிருந்து வெளியே வருகின்றனர். படிகளிலிறங்கியவாறே 'க' சுற்றுமுள்ள கூட்டத்தைப் பார்க்கிருன். பார்வை இங்குமங்கும் அலைபாய்கிறது. ஒவ்வொரு முகத்தையும் பார்த்து எதை எதையோ அறிந்து கொள்ள விரும்புகிருன். சிலர் உயர்வாக, அவனைவிட நேர்த்தியாக உடை உடுத்து வந்திருக்கின்றனர். ஏனே திடீரென அவனுள்ளத்திலே ஒரு பயம்- ஒரு திகில்.

இதென்ன பயம்! இதென்ன திகில், அவனுக்கே புரியவில்லை. மற்றவர்களை, உயர் தரமான உடையில் நேர்த்தியான முறையில் காண்கையில் அவன் தனக்குள்ளே தனக்கே அன்னியமான யாரையோ காண்பது போலிருக்கிறது. திகிலாய், அச்சமாய் இருக்கிறது. தோளைப்பற்றி அணைத்த வண்ணம், ஜோடி, ஜோடியாய் இறங்கி வருபவர்களைக் காணும் போது மனைவியின் நினைவு வருகிறது. அவளுடன் இதேபோல், ஜோடியாய், தோளைப்பற்றி, இறுக அணைத்தவாறு அவன் படிகளில் இறங்கி வந்ததுண்டா? இல்லையே! அவளைத் தன்னருகே அமர்த்திக் கொண்டு 'ரொமாண்டிக்' பிலிம்களைப் பார்த்திருக்கிருனு? இல்லையே! அவன் மனைவிக்கு நாள் முழுவதும் சமைக்கவும், பாத்திரங்களைக் கழுவவுமே சரியாகப் போய் விடுகிறது. அண்டை அயலார்களுடன் கூட உரத்த குரலில் அவளுக்குப் பேசத்தெரியாது. பேசவும் மாட்டாள்.

'பஸ்ஸா' — ஆட்டோவா!' இது 'கீ'யின் குரல்.

'பஸ்ஸிலேயே போகலாம்' எத்தனை நேரம் நிற்பது!

'பரவாயில்லை. கூட்டம் அதிகம் இராது. சுலபமாகக் கிடைக்கும்'.

இருவரும் நடக்கிறார்கள்.

'கீ' - டிக்கட்டிற்குப் பணம் எடுப்பதற்குள் 'க' 30 பைசா டிக்கட்கள் இரண்டு வாங்கி விடுகிறான். இப்பொழுதுதான் நிம்மதி. ஆறுதல். உறுத்தல் கூட கொஞ்சம் கரைகின்றது.

பஸ்ஸிலிருந்து இறங்கியதுமே 'க' - கீ'யைப் பார்த்து– 'வாயேன்! வீட்டில் சாப்பிடலாம், என அழைக்கிறான்.

'வேண்டாம் - பிறகு எப்பொழுதாவது பார்த்துக் கொள்ளலாம்.'

'வாயேன்-வீட்டையாவது பார்த்துக் கொள். பிறகு வரலாம் அல்லவா!'-'க' வற்புறுத்துகிறான். இருப்பினும் மன ஆழத்தில் - அடித்தளத்தில் இனமறியாததொரு பயம். அது என்ன பயம் என்பது அவனுக்கே புரியவில்லை.

'வேண்டாம். வீட்டிலே காத்துக்கொண்டிருப்பார்கள். கீ - நடந்து விடுகிறான். 'க' மேலும் கட்டாயப் படுத்துவதில்லை.

வீட்டை நோக்கி நடக்கும் 'க'வின் மனத்திலே ஒரே சிந்தனைக் குழப்பம். 'கீ' மட்டும் அவனது அழைப்பை ஏற்றுக் கொண்டு வந்திருந்தால் என்ன நடந்திருக்கும்? ரொம்ப மோசமாகப் போயிருக்கும். உடைந்த நாற்காலி கண்ணிலே பட்டிருக்கும். தொய்ந்து கிடக்கும் நாடா கட்டிலிலே அவன் உட்கார வேண்டி இருக்கும். மனைவியின் கிழிந்த, அழுக்குத் துப்பட்டாவைப் பார்த்திருப்பான்—நிலைமையைச் சமாளிக்க 'கீ'யின் எதிரேயே அவன் தன் மனைவியிடம் 'பீனு! உன் துப்பட்டா இப்படி எப்பொழுது கிழிந்தது?' எனக் கேட்கும்படி நேரிட்டிருக்கும். பீனுவின் துப்பட்டா கிழிந்து வெகு நாட்களாயிற்று என்றோ மாற்றுத்'துப்பட்டா அவளிடம் இல்லையென்றோ அவனுக்கா தெரியாது! தெரியும் தெரியும் ஆனால் தன் ஐந்து வயதுக் குழந்தையைக் கொஞ்சும் போது பொத்தான் இல்லாத சட்டையைப் பார்த்து "ஏண்டா—டைனி! பொத்தானை எப்பொழுது பிய்த்தாய்? என்று கேட்காமலிருக்க முடியுமா என்ன? அந்தச் சட்டைக்கு பொத்தானே கிடையாது. பொத்தான் அடையும் பாக்கியம் அந்தச் சட்டைக்கு ஏது?

'கீ' பஸ்ஸிலிருந்து இறங்கும் போதே ஒரு புகைப் படத்தைக் காட்டினான். ஒரு பெண்ணின் படம்.

'யார் இது?'

''சொல்! பெண் நன்ருக இருக்கிருளா?'

'ப்யூடிபுல்'

'இவள் எனது வருங்கால மனைவி.'

'ஓகோ!—அப்படியா! நல்லது— 'க' வின் குரலில் மகிழ்ச்சி. நண்பனுக்குத் திருமணம் என்பதில் சந்தோஷம். இன்னெரு விஷயம் 'அழகான பெண்'

என் அக்காவும் அம்மாவும் நேற்று இப் பெண்ணைப் பார்த்துவிட்டு வந்தார்கள். அவர்களுக்குப் பிடித்திருக்கிறது.

'உனக்கு?'

'எனக்குந்தான். இண்டர் படிக்கிருள். நல்ல உடற்கட்டு. வாளிப்பான அங்கங்கள்'

'க'விற்கு உடனே தன் மனைவியின் நினைவு. கிராமத்துப் பள்ளியில் படிப்பு 8வது வரை. இப்பொழுது வீட்டிலே படித்து மெட்ரிக் எழுதப் போகிருள்.

கீ — தன்பாட்டில் பேசுகிருன்! முந்தாநாள் அவனுடைய அக்கா 'நிதி' என்னை வீட்டிற்கு வரும்படி அழைத்தாள். போனேன். அவள் தங்கையைப் பார்க்கத்தான். என்னை முன்னறையில் உட்கார வைத்துவிட்டு தேநீர் எடுத்துவரப் போனுள். தங்கையிடம் கொடுத்தனுப்பினுள். நாணிக் கோணிக் கொண்டு வந்த அந்தப் பெண் டிரேயை மேஜையின்மீது வைத்துவிட்டுப் போனுள். ஆனல் அக்கா விட்டால்தானே? எனக்குத் தேநீர் தயாரித்துத் தரும்படி மீண்டும் விரட்டி விட்டு விட்டாள். பாவம் தலையைக் குனிந்து கொண்டு; முகம் மலர ..அவள் வந்து.

'க'விற்கு அதற்குமேல் தாளவில்லை.

'திருமணம் எப்பொழுது?. என்ருன்.

'எனக்கொன்றும் அவசரமில்லை. ஆனல் பெரியம்மா தான்.'

'தானிருக்கும்போதே—கண்ணுல் பார்க்க வேண்டும் என்றிருக்கலாம்.'

'இன்று 'வோல்கா'விற்கு அவள் வருவாளாம். நிதி சொன்னுள். ஆனுல்கூட அவளுடைய மன்னியும் வருவாளாம். நீயும் வருகிருயா?

சே...நான் வருவது நன்ருய் இருக்காது—'க' சொல்லிவிட்டானே தவிர நண்பனுக்கு வாய்க்கப் போகிற அழகிய மனைவியைக் காண வேண்டும் என மனம் பறக்கிறது. ஒருகால் தன்னுல் சகித்துக் கொள்ள முடியாமல் போய் விடுமோ என்ற அச்சம் வேறு தலை நீட்டுகிறது? அது அச்சமா? அல்லது லேசான பொருமையா? சீ...'கீ'யின் வருங்கால மனைவியும், மைத்துனியும், முன்பின் அறியாத

தன்னைப் பார்த்து என்ன நினைத்துக்கொள்வார்களோ?

“அதெல்லாம் முடியாது. நீயும் என்னுடன் வரவேண்டும்” ‘கீ’யின் குரல் உரிமையுடன் ஒலிக்கிறது.

‘க’ வின் பார்வை தனது அழுக்குப் படிந்த நலுங்கிய உடையின் மீது படிகின்றது. சட்டையை மாற்றிப் பல நாட்களாகி விட்டன. பாலீஷ் ஏருத பூட்ஸ். காரியாலயத்திலிருந்தே-“நான் வரவில்லை-வெளியே ரிப்போர்டிங் வேலையிருக்கிறது” என்று சொல்லிவிடலாமா என்று நினைத்தான். ஆனால் ஒரு முடிவிற்கு வர முடிந்தால் தானே! குழப்பம், குழப்பம்தான். மணி 5 அடித்ததும் காரியாலயத்தை விட்டு வெளியேறியதும் கால்கள் தாமாகவே ‘கீ’யின் காரியாலயத்தை நோக்கி நடந்தன.

‘வோல்கா’வில் ஓர் மூலையில் தனித்த இடத்தில் ‘கீ’யின் வருங்கால மனைவியும் மைத்துனியும் அமர்ந்திருந்தனர். இருவரில் யார் நண்பனின் வருங்கால மனைவி என்பதை இனம் கண்டு கொள்வதில் ‘க’விற்கு அதிக நேரமாகவில்லை; அருகில் சென்று அமரப் போனவன் சட்டென என்ன தோன்றியதோ – கீயின் பக்கத்தில் அமர்ந்து கொள்கிறான்.

இவர்-என் நண்பர் மிஸ்டர் ‘க’ பத்திரிகை நிருபர். கவிதைகள் கூட இயற்றுவார்’. ‘கீ’யின் அறிமுகம் துவங்குகிறது.

‘க’ பேசுவதில்லை. லேசான புன்னகையை வரவழைத்துக் கொண்டு அமர்ந்திருக்கிறான்.

அவர்கள் பேசுகிறார்கள். ‘க’ குனிந்து மேஜையின் கண்ணாடிக்கு அடியே வைக்கப்பட்டிருக்கும் மெனுவைப் படிக்க ஆரம்பிக்கின்றான். மலிவான பண்டங்களை கண்கள் கண்டு மனதிற்கு குறிப்பு அனுப்புகிறது. சட்டென்று ஒரு பயம். ஓர் திகில். அவன் மெனுவைப் படிப்பதைப் பார்த்து அந்தப் பெண்கள், எதிரே அமர்ந்திருக்கிறார்களே அவர்கள் என்ன நினைத்துக் கொள்கிறார்களோ? கண்கள் மெனுவை விட்டுப் பிரிகின்றன. புரிந்ததும் புரியாமலுமிருக்கிற அவர்களுடைய பேச்சுக்கு இடையிடையே தலையாட்டுகிறான்.

அவனும் - கீயும் வோல்காவை விட்டு வெளியே வரும் பொழுது நன்றாய் இருட்டி விடுகிறது. க, கீயிடம் கேட்காமலேயே ஆட்டோவை அழைக்கிறான். இருவரும் ஏறி அமர்கின்றனர். தடதடவென ஓடும் வண்டியில் அவனது சிந்தனை எங்கெங்கோ தாவுகின்றது. மனம் வோல்காவில் நடந்த பேச்சுக்களை அசை போடுகிறது. ‘கீ’ தன் வீட்டிற்குச் செல்லும் வழியை

டிரைவரிடம் கூறுகிறான். 'க' தெரு முனையில் இறங்கிக் கொள்ள விரும்புகிறான். ஆனால் 'கீ' விடுவதில்லை.

இருவருமாய் 'கீ'யின் அந்த வீட்டிற்குள் நுழைகின்றனர். 'க'வின் மனது ஒரு நிலையில் இல்லை. பெரிய அறை. விசாலமானதுதான். இடையே மரத்தினாலான ஓர் தடுப்பு அதாவது அறையின் ஒரு பகுதி சமையல் அறை. மற்ற பகுதிதான் உட்காருமிடம், படுக்குமிடம். அதாவது வரவேற்பறை, சயன அறை, எல்லாம். இரண்டு நாற்காலிகள். ஒரு மேஜை, வார்னீஷ் மங்கி பழமையைக் காட்டும் தேய்வு. அருகிலே ஒரு கட்டில். அதன் மீது குவியலாக அம்பாரம் துணிகள். படுக்கைகள். காலண்டரைக் கிழித்து பிரேம் போட்ட சாமி படம் ஒன்று சுவற்றில் தொங்குகிறது. கணப்பின் மீது ஏதோ திருவிழாவில் வாங்கிய மலிவான இரண்டொரு பொம்மை சாமான்கள். அவை கூட இரைந்துதான் கிடக்கின்றன. அதனருகே-பழைய மாடல் ரேடியோ. 'கீ'யின் அப்பாவின் படமாம் ஒன்று. கண்ணாடி விரிசலுடன் காட்சி தருகிறது. அறையின் இன்னொரு மூலையை ஒட்டி இரண்டு கட்டில்கள். அவற்றில் ஒன்றில் கீ-யின் தங்கை-'டிரிக்னுமெட்டிரி'யின் கேள்வியொன்றுக்கு விடை கண்டு பிடிப்பதில் மும்முரமாய் ஈடுபட்டிருக்கிறாள். மற்றொரு கட்டிலில் இரண்டு குழந்தைகள் ரஜாயிக்குள் பதுங்கி கிடக்கின்றன.

'கீ'யின் அம்மா... ரொட்டியை எடுத்து வருகிறாள். சூடாக இருக்கிறது. தொட்டுக் கொள்ள பருப்பு. இருவரும் பருப்புடன் ரொட்டியைச் சாப்பிடத் துவங்குகின்றனர். வெங்கலத் தட்டு ஒன்றில் நறுக்கிய வெங்காயம் வருகிறது.—

சாப்பிட்ட பின் 'க' விடை பெறுகிறான். 'கீ' தெரு வாசல் வரை வந்து விடை கொடுக்கிறான். இருவரும் ஆர்வத்துடன் கை குலுக்கிக் கொள்கின்றனர்.

'க' ?? 'க'வின் மனம் இப்பொழுது லேசாக இருக்கிறது. பஞ்சுப் பொதிப்போல் மிதக்கின்றது. கனம், பயம், திகில் ஒன்றுமில்லை. இனிச் சற்றும் தயக்கமில்லாமல் 'கீ' தன் வீட்டிற்கு அழைக்கலாம். அழைக்கத்தான் போகிறான். கிழிந்த துப்பட்டாவைப் போர்த்திக் கொண்டு கரி அடுப்பில் ரொட்டி வாட்டும் இல்லத்தரசி, இரைந்து தாறுமாறாய் கிடக்கும் சாமான்கள், பித்தானில்லாத சட்டையுடன் காட்சி தரும் குழந்தை—எதைப் பற்றியும் இனி 'க'

விற்குக் கவலையில்லை. - 'வோல்கா' - அது ஒரு இனிமையான கனவு. நிஜமல்ல. இனி 'கீ'யை தாராளமாய் இழுத்து வரலாம்.

'க' தெருவில் நடந்தான். நடந்தானா? இல்லை. எங்கோ வானத்தில் சற்றும் அச்சமற்று, தயக்கமற்று, நிம்மதியாய் சஞ்சரிப்பது போலிருந்தது. அப்பப்பா... இதில்தான் என்ன சுகம்? எதில்???

புறப்படல் தேவை

1. தன்னலம் என்னும் பேயின்
   தாண்டவம் எங்கும் கண்டோம்
எண்ணமும் செயலும் எல்லாம்
   எதினிலும் இலாபம் தேட
வண்ணமும் பலவாய்க் காட்டி
   வாழ்ந்திடும் ஓந்தி போன்றார்
பண்பினை மரபை எல்லாம்
   பாழ்படச் செய்வா ரன்றோ !

2. அரசியல் ஆட்டந் தன்னில்
   அடைந்திடும் சொர்க்க மாக
வரம்தரும் பதவி கண்டு
   வளைத்திடும் நோக்கம் கொண்டார்
இரவினில் திட்டம் தீட்டி
   இழிசெயல் செய்து விட்டுத்
திறமுடன் கொள்கை பேசல்
   சிறுசெயல் ஆகு மன்றோ!

3. பொதுநலம் மறந்த தீமை
   பொலிவுடை நாட்டின் வாழ்வை
மதுகுடி மடையன் கையில்
   மாலையாய் மாற்று மன்றோ!
புதுவழி அமைத்துக் கொண்டு
   பொய்மையை அடித்து வீழ்த்த
பொதுநல இளைஞர் கூட்டம்
   புறப்படல் தேவை யாகும்!

1

எழுத்தை - காதலிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்

இன்றைய தமிழின் தேவைகள் பற்றி வல்லிக்கண்ணன் மதிப்பீடு செய்திருக்கிறார். பல்வேறு எல்லைகளையும் அதில் தொட்டுக் காட்டிய போதிலும் எல்லா வற்றையுமே மேலெழுந்தவாரியாக மட்டுமே குறிப்பிட்டுவிட்டுச் சென்றிருக்கிறார் வல்லிக்கண்ணன். பரப்பு விரியும்போது எல்லாவற்றையும் பற்றி ஆழமாக விவாதிக்க முடியாமல் தான் போகிறது. அதனால் தமிழில் இல்லாததைப் பற்றிய இந்த பரிசீலனையில் ஒரு குறிப்பிட்ட எல்லையை மட்டும் நான் எடுத்துக்கொண்டு பார்க்கப்போகிறேன்.

தமிழில் இல்லாதது ரசனைத் திறன் தான் என்று எனக்குத் தோன்றுகிறது. ரசனை என்றால் என்ன என்பது பற்றியும் ரசனைகள் எப்படி எல்லாம் அமைய முடியும் என்பது பற்றியும், ரசனை உணர்வை வேறு எந்தெந்த உணர்வுகளெல்லாம் சாதகமாகவோ, பாதகமாகவோ பாதிக்க முடியும் என்பது பற்றியும் ஒரு தெளிவுகூட இன்று வரை நமக்கில்லை. அதன் விளைவு? ஒவ்வொருவரும் எழுதப்பட்ட எந்த இலக்கியத்தையும் தத்தம் ஆளுமைகளைக் கொண்டு அளந்துவிட்டு தனக்கும் நிறைவின்றி, எழுதப்பட்ட இலக்கியத்துக்கும் நியாயமின்றி நிற்கிறார்கள்—ஐயோ!

என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதை முதலில் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும் என்றால் எந்த உணர்வின் ஆளுமையினால் அந்த எழுத்தும் இலக்கியமும் உருவாக்கப் பட்டிருக்கிறதோ, அந்த உணர்வில் நின்று

சித்ரபாரதி

கொண்டு அதைப் பார்க்க முடிந்தால் மட்டுமே அந்த எழுத்தை ரசிக்க முடியும்.

கசாப்புக் கடைக்குத் தான் கத்தியுடன் வேலைக்குப் போக வேண்டும். இலக்கிய ரசனை என்பது நிச்சயமாகக் கசாப்புக் கடை வேலையல்ல. ஆனால் இன்றைய வாசகர்களில் பாமரத்தனமானவர்கள் எதையும் பார்க்க மட்டுமே முடிந்தவர்களாக இருக்கிறார்கள் — படிக்கத் தெரிந்தில்லை. படிக்கத் தெரிந்தவர்களிலும் பிஞ்சிலேயே பழுத்து முதிர்ந்து உதிர்ந்து விடத் தான் துடிப்பவர்கள் அநேகம். அதிலும் சிலதேறி நின்றால், காசாப்புக் கடைக்காரன் மாதிரி கையில் கத்தியுடன் கிளம்பி ''மதிப்பீடு'' செய்யக் கிளம்பி விடுகிறார்கள்.

மனித வாடையே அற்ற எத்தனையோ இடங்களில் இயற்கை தனது மகத்தான கலைப் பொக்கிஷத்தை விரித்து விளையாடி நின்ற போதிலும், அதன் மகத்துவத்தைப் புரிந்து மதிக்க ஒரு மனிதன் அங்கு வேண்டும். அல்லாதவரை கொடுமையும் அழகும் எந்த வகையிலும் பேதப்பட்டவைகளாகி விடுவதில்லை. மனித மனம் தான் ஒன்றைக் கொடுமையாகவும், மற்றொன்றைக் குளுமையாகவும் உணர்ந்து எதிரொலிக்கிறது. கொடுமைக்கும் குளுமைக்கும் வேறுபாடு தெரியாத ஜடமாக அந்த மனிதன் இருந்து விட்டானே...

அப்படித்தான் இருக்கிறது இன்றைய தமிழில் ரசனை. ரசனை இல்லாத நிலையில் எழுதப்படுவது எந்தத் தனிச்சிறப்புடன் இருந்தால் என்ன? ஒன்றுமே இல்லாமல் போனால் தான் என்ன? தங்களுக்குப் புதிதாக ஒரு பத்திரிகை இரையாகக் கிடைத்திருப்பதாக கழுதைகள் பேசிக் கொள்வதாக 'சோ' தன் பத்திரிகையிலேயே அட்டைப் படக் கார்ட்டூன் போட்டிருப்பதைப் பார்த்துப் பலருக்குக் கோபம். அதில் பொதிந்துள்ள உண்மையும், நியாயமான கோபமும் எனக்குப் பளிச்செனப் புரிந்தது. என்ன எழுதப்பட்டிருக்கிறது என்பதை, தன்னோக்கை விலக்கி வைத்துவிட்டு முதலில் ஒரு வாசிப்பை முடிப்பது வரை கூட வாசக நாணயத்தைக் காத்துக்கொள்ள முடியாதவர்களுக்கும், காகிதத்தைக் கண்டவுடன், தங்களின் தேவைக்கு புதிய இரை கிடைத்திருப்பதாக அதே மாதிரிப்பட்ட தன்னோக்குடன் அதை எதிர்பார்க்கும் கழுதைகளின் நிலைக்கும்

வேறுபாடு ஏதும் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

எனவே இன்றைய எழுத்துக்கு-தமிழுக்கு, மிக மிக அடிப்படையான தேவை ரசனை உணர்வு தான். ரசிகன் தான். வாசக நாணயம் உள்ள வாசகன் தான். ஒரு முதல் சற்று வாசிப்பையாவது, தானாக நின்று வாசிக்காமல், என்ன உணர்வால் அந்த எழுத்து உருவாகியிருக்கிறதோ அதாகி நின்று படித்துப் பார்க்கும் வாசக நாணயமே முழு முதல் தேவை என்று படுகிறது.

இப்படி எழுதும்போது காசு கொடுத்து வாங்கி, தத்தம் நோக்கிற்கு இசைந்தவர்களின் பத்திரிகைகளைப் படிக்கும் சாதாரண வாசகனை மட்டும் நான் குறிப்பிடுவதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. வாசகன் என்று நான் குறிப்பிடுவது சாதாரண வாசகன் முதல் சட்டாம்பிள்ளை விமர்சகன் வரையான எல்லோரையும் உள்ளடக்கித் தான். யாருடைய எழுத்தையும், எந்த இலக்கியத்தையும், எடுத்த எடுப்பிலேயே தன்னோக்குடன் அணுகாத—கழுதைகள் போல — முன்னே இருக்கும் எழுத்தின் நோக்கைப் புரிந்து கொள்ளவேண்டும் என்ற பிரக்ஞையுடன் எதையும் படிக்கும் நாணயமான வாசகன் இன்று தமிழுக்கு இல்லை.

இதுவே இன்றைய தமிழின் அடிப்படையான தேவை என்று எனக்குப்படுகிறது. இது புரிந்தால் குறைந்த பட்சம், இம்மாதிரி தங்களை எதையும் வாங்கும் நிலைக்குத் தயார் படுத்திக் கொண்டவர்கள் மட்டுமாவது "கழுதைகளின் ரசனை" நிலையிலிருந்து தங்களை மீட்டிக் கொண்டவர்களாகலாம்.

இதைப் பழக்கப்படுத்திக் கொள்ள கூட்டு ரசனை முறை ஓரளவுக்கு கை கொடுக்கும் என்பது என் நம்பிக்கை. ஒரு எழுத்தை தானாக உட்கார்ந்து படிப்பதற்கு தனக்கே மேற்சொல்லப்பட்ட பிரக்ஞை இருக்குமேயானால் கவலை இல்லை. தன்னோக்கை விட்டு விட்டு, முதலில் எதையும் அந்த எழுத்தின் உணர்வில் நின்று படித்துவிட்டு, பின்னர் வேண்டுமானால் அதைத் தன்னோக்கில் நின்று அசை போட்டுப் பார்த்து ஏற்கத் தக்கதை, ரசிக்கத் தக்கதை ஏற்று கழிக்கத் தக்கதைக் கழித்து அப்படிப்பட்டவர்களுக்குச் சுயமாகவே கூட இயலும்.

இந்நிலை கைவரப் பெறுதவர்களுக்கும், கூட்டு ரசனை தான் ஒரே வழி. பத்துப் பேர்கூடி ஒன்றைப் படித்து, பின் தத்தம் நோக்கில் அதைப் புரிந்து

கொண்டுள்ளபடி பத்துப் பேர்கள் கூடி உட்கார்ந்தே கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டால், மற்ற ஒன்பது பேரின் தன்னுணக்கங்களும் கூட பத்துப் பேர்களுக்கும் கிடைக்கும் வாய்ப்பாவது கிட்டும். இதன் மூலம் ஒரு தன்னுணக்கோடு தனித்துப் போய் விடாமல், குறைந்தபட்சமாக தன்னைப்போன்ற இன்னும் ஒன்பது தன்னுணக்கர்களின் அணுகுதலையாவது தெரிந்து கொள்ள வாய்ப்பு இருக்கும். அந்த ஒன்பதில் ஏதாவது ஒன்றுவது அந்த எழுத்தின் உணர்வாக இருந்து விட வாய்ப்பு உண்டு அல்லவா!

அதனால், தான் எத்தனை பெரிய மேதை என்று தன்னைப் பற்றித் தானே சரியாகவோ, தப்பாகவோ கணித்து வைத்திருப்பவர்களும் கூட, தான் ஒரு எழுத்தை தன்னுணக்கோடு மட்டும் படித்து விடவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக வாவது அடிக்கடி தன்னையொத்தவர்களுடன் கூடி அந்த எழுத்தைக் கூட்டு ரசனையாகவும் ரசிக்க வழி ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் நல்ல ரசனை-சரியான ரசனை—முதலில் தமிழுக்குக் கிடைக்கும்.

ரசிகன் சரியான பார்வையோடு தன் எழுத்தைப் புரிந்து கொள்வான்-புரிந்து கொள்கிருன் - என்ற உண்மையை விட ஒரு படைப்பாளிக்குக் கிடைக்கக் கூடிய ஊக்கம் வேறு இருக்க முடியாது. ஒரு மொழியின் பொற்காலம் இப்படிப்பட்ட ரசிகர்கள் அமையும்போதுதான் அடைய முடியும்.

ஒரு வாசகனுக்கு, தான் ஒரு நாணயமான வாசகன் தான் என்று உறுதி இருந்தால் தான் அவனுக்குத்தான் படித்துக் கொண்டிருக்கும் எழுத்தையே முதலில் காதலிக்க முடியும். காதலித்தல் என்ற வார்த்தையை பொருளோடு தான் இங்கு பயன்படுத்துகிறேன். தன் சுகம், தன் இன்பம், தன் பூரிப்பு என்றிருப்பது ஆசை. தன் துணையின் நலன், தன் துணையின் இன்பம், தன் துணையின் சுகம் என்று மட்டுமே பார்ப்பதுதான் காதல். அதனுல் ஒரு நல்ல வாசகன் முதலில் எழுத்தைக் காதலிக்கக்கற்றுக்கொள்ளவேண்டும். அந்த எழுத்து தகுதியானதாக இருந்தால் அதே நலன்களை, அதே சுகத்தை, அதே இன்பத்தைத் தன் 'காதலனுக்கும்'' கூட அளிக்கத் தான் செய்யும். இந்த எழுத்துக் காதலில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற வரையறை இல்லை! ஒருவனுக்கு ஓராயிரம் எழுத்துக்களையும் அதற்குரிய சின்சியரிட்டி'யுடன் அணுகமட்

டும் தெரிந்திருந்தால் இதையும் ரசித்து அதையும் ரசிக்கின்ருயே என்ற பிரச்சனை எழுத்துலகில் இல்லை.

திறனுய்வாளர்களுக்கு ஒரு வார்த்தை. தமிழைத் தத்தம் கையில் இருக்கும் கத்தியைக் கொண்டு அறுத்துக் கூறு போட்டுப் பார்த்ததுபோதும். இனி கத்தியைக் கசாப்புக் கடைக்காரர்களுக்குக் கொடுத்துவிடுங்கள். உங்களுடைய நோக்கங்களுக்கு ஏற்ப ஒரு எழுத்து இருக்கிறதா இல்லையா என்று சொல்வது உங்கள் பிரச்சனையே. அது எழுதப்பட்ட எழுத்தின் பிரச்சனையாகாது. முதலில் எழுதப்பட்ட எழுத்தில் நீங்கள் ரசிக்கத்தக்கதாக என்ன இருக்கிறது என்பதைச் சொல்லக் கற்றுக்கொள்ளுங்கள். ரசிக்க ஒன்றுமே இல்லை என்ருல் கூட, அதைக் குப்பையில் தூக்கி எறிந்துவிட்டு வேறு தகுதியானதைத் தேடிச் செல்வதுதான் வாசகன் வேலை-விமர்சகன் வேலை. தகுதியற்றவைகளை எடுத்துக்கொண்டு கத்தியும் கையுமாகத் திரியாதீர்கள். கத்தி கசாப்புக்காரனுக்கே சொந்தமாக இருக்கட்டும். எழுத்துக்கு ரசனை மட்டுமே இருந்தால் போதும்.

*

2

திரு. வல்லிக்கண்ணன் அவர்களின் 'சிந்தனைச் சிதறவி'ல் மிக முக்கியமான ஒன்று விடுபட்டுப் போயிருக்கிறது என்று எனக்குத் தோன்றுகிறது. அவருடைய வரிசைப்படி ஐந்துக்கும் ஆறுக்கும் இடையில் '5-அ' என்று இதனை வைக்கலாம். 'பரஸ்பரம் இலக்கியச் சிந்தனைப் பரிமாறிக்கொள்ள விழைகிற ஒரு சங்கம்.' இந்தச் 'சங்கம்' என்பது ஒரு பதிவு பெற்ற அமைப்பாக இருக்கவேண்டுமென்று சொல்ல வரவில்லை. நல்ல இலக்கிய உணர்வுள்ள நாலு ரசிகர்கள் ஒன்று கூடி அவ்வப்போது வெளிவரும் கவிதை, கதை, கட்டுரைகளைப்பற்றி விவாதிப்பது, எல்லோரும் எல்லாவற்றையும் படிப்பதென்பது முடியாத ஒன்ருகையால் இந்தச் சங்கம் பெரிதும் பயன்தரும். தண்டத்தனமான அரசியல் விமர்சனத்தையும், அந்த நடிகனுக்கு மீசை முளைத்தது, இந்த நடிகைக்குக் குழந்தை பிறந்தது என்பன போன்ற கவைக்கு உதவாத செய்தி

விமர்சனத்தையும் விட இந்த நியாயமான இலக்கிய விமர்சனம் 'இ. த. இ' மேம்பாடுறுவதற்குப் பெரிதும் துணை நிற்கும். அதே நேரத்தில் இப்படி இலக்கிய விமர்சனத்தில் ஈடுபடுகிற சிறு கூட்டத்தால் சமுதாயத்தில் தரமான பண்பாட்டுணர்வு அமையவும் உதவமுடியும்.

அடுத்து, எழுத்தாளர்கள் தாங்கள் எழுதிய கவிதை, நாவல் பகுதிகளைத் தாங்களே பிறர் மத்தியில் படித்துக் காட்டும் வழக்கம் பற்றியது. ரஷ்யா, ஐரோப்பிய நாடுகளில் உள்ளதுபோல் இல்லையென்றாலும் ஓரளவுக்கு வானொலி அந்தப் பங்கை ஆற்றுகிறது. 'கவிச் சொல் கேளீர்' பகுதியில் இளம் கவிஞர்கள் தாங்கள் எழுதிய கவிதைகளைத் தாங்களே படிக்கிறார்கள். அவ்வாறே புகழ்பெற்ற கதாசிரியர்கள் கூடத் தங்கள் சிறுகதைகளைத் தாங்களே படித்து மகிழ்விக்கவும் செய்கிறார்கள். நெடு நாட்களுக்கு முன் மேதை 'லா. ச. ரா' அவர்கள் எழுதிய 'பாற்கடல்' சிறு கதையை அவர்களுக்கே உரிய தனிப் பாணியில் அவர்கள் சொந்தக் குரலில் படிக்கக் கேட்டேன். இன்னும் என் செவிப் புலனை விட்டு அந்த 'இசை' அகலவில்லை. அவ்வளவு ரம்மியமான சிறு கதை அது. குரலும் கூடத்தான்.

இந்த வழக்கம் வானொலிப் பெட்டியில் மட்டும் அத்தி போல் மலர்கிறது. இந்நிலை மாறி, பொது இடங்களிலும் 'இலக்கிய உணர்வுள்ள' உபன்னியாசங்கள் மாதிரி கூட அடிக்கடி நிகழவேண்டும். எழுதிய படைப்பாளிகள்தான் படிக்க வேண்டும் என்பதுகூட இல்லை. அந்த எழுத்தைப் பூரணமாக அனுபவித்துப் புரிந்து கொண்ட எவரும் இந்தப் பணியை ஆற்றலாம்.

மொத்தத்தில் படித்தவர்களிடையே கூடக் காணப்படாத இலக்கிய மனப்போக்கு இது போன்ற நிகழ்ச்சிகளால் பரவி, ஒவ்வொருவனும் ஒரு இலக்கிய ரசிகன் என்ற நிலை முதலில் உருவாக வேண்டும். அப்படி உருவாகும் இலக்கிய உணர்வால் மட்டுமே இ.த.இ. செம்மையுற வளரமுடியும்.

ரமணீயன்

அறிவாளிகளிடமிருந்து முட்டாள்கள் கற்றுக்கொள்ளும் பாடத்தை விட முட்டாள்களிடமிருந்து அறிவாளிகள் கற்றுக் கொள்ளும் பாடமே அதிகம்.

— காட்டோ

உரத்த சிந்தனை

[பலதரப்பட்ட கேள்விகளை, எது பற்றியும், மனம் விட்டுக் கேட்கலாம். அதே போலவே பதில்களும் அமையும்.] — ஆசிரியர்

கே: உங்களுடைய 'அந்தரங்கம் புனிதமானது' என்ற கதையை மனதில் நினைத்துக் கேட்கிறேன். கணவன் மனைவிக்கிடையே கூடத் தனித் தனி அந்தரங்கம் இருக்கவேண்டியது அவசியமா?

ராமனுதன், சென்னை-17

ப: அவசியமா இல்லையா என்பது பிரச்னையல்ல. இருந்தால் அதைக் கவுரவிக்க வேண்டும் என்பது நாகரீகம். இருக்கும் என்று எதிர்பார்த்து அதைக் கவுரவித்து, ஒரு எல்லை வகுத்துக்கொண்டு வாழ்வதில் நஷ்ட மேதுமில்லை. மாறாக, எங்களிருவருக்குள்ளும் தனித் தனியான அந்தரங்கங்கள் ஏதுமில்லை என்ற பொய்மைப் போர்வையில் புகுந்து கொண்டு, அது பொய் என்று பரஸ்பரம் ஒவ்வொருவரின் அந்தராத்மாவிற்கும் புரிவதால் வாழ்க்கை முழுவதும் ஊனமாகிப் போவதையே நாம் பெரும்பாலும் சந்திக்கிறோம்.

இந்தக் கேள்விக்கான பதில் அந்தக்கதையிலேயே வருகிறது:

"புருஷன், மனைவி, மகன், தாய், தகப்பன் எல்லாருமோர் உறவுக்கு உட்பட்டவங்கதான். ஆனால் ஒவ்வொருவரும் ஒரு 'செப்பரேட் இண்டிவிஜுவல்', தனியூனிட் இல்லையா? ஒவ்வொரு தனி மனுஷாளுக்கும் ஒரு தனிப்பட்ட அந்தரங்கம் உண்டு. அதைக் கவுரவிக்கணும்"

எந்த உறவுக்கும் இன்னொருவரின் அந்தரங்கத்தில் பிரவேசிக்கும் உரிமை கிடையாது. அந்தரங்கம் என்பது இன்னொருவரிடமிருந்து எதையோ மறைத்து ஏமாற்றுகிற காரியம் என்று நினைக்கலாகாது. அந்தரங்கம் என்பது

சுயமரியாதை. இந்தச் சுயமரியாதை கணவன் மனைவியருக்கிடையேயும் அவசியந்தான்.

கே: உரைநடைத் தமிழோடு தஞ்சை மாவட்டப் பேச்சுத் தமிழ் வேறுபாடு இன்றி இருப்பதேன்?

ந. கண்ணன், சென்னை-5

ப: நீங்கள் தஞ்சை மாவட்டக்காரர் போலிருக்கிறது. மதுரை மாவட்டக்காரர்களும் இப்படித்தான் சொல்லிக் கொள்கிறார்கள்.

கே: எழுத்தாளனுக்கு மரபுகள்—எல்லா மரபுகளுமே — தொல்லை தருவதை உணர்கிறீர்களா?

ப: இல்லை. எழுத்தாளன் புதிய மரபுகளை உருவாக்குகிறவனேயல்லாமல், பழைய மரபுகளை எதிர்த்துப் பயனற்ற போராட்டம் நடத்திக் கொண்டிருப்பதில்லை. மரபுகளை எதிர்ப்பதையே ஒரு மரபாகக் கொண்டுவிட முடியாது.

கே: உங்கள் ரிஷி மூலம் கதைக்கு வந்த எதிர்ப்பு மரபு சம்பந்தப்பட்டது தானே?

ப: இல்லை. அது Taboo சம்பந்தப்பட்டது. நம்முடைய மரபுப்படிப்பார்த்தால் இது மாதிரிக் கதைகள் உண்டு. எல்லா மரபு இதிகாசங்களிலும் உண்டு. புராதன இந்திய, கிரேக்க இதிகாசங்களிலும், நவீன இலக்கியங்களிலும் இது மாதிரிப் பிரச்னைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்று யாருமே சொன்னதில்லை. எந்த மரபும் அறியாதவர்கள், தங்களுடைய பாமரத்தனமான மனக் கூச்சத்தால் (Inhibition) காட்டிய எதிர்ப்பே ரிஷி மூலத்திற்கு அதிகம் வந்தது.

கே: (Taboo) என்றால் என்ன?

ப: Taboo என்பது அறியவும், அணுகவும் தகாதது என்று சமூகத்தால் அங்கீகாரம் செய்யப்பட்டதாகும். எனவே அறிவாளிகளுக்கு எப்பொழுதுமே Social taboos ஒரு பிரச்னை.

கே: இலக்கியத்தில் ஆபாசம் என்றால் என்ன?

ப: ஆபாசம் வாழ்க்கையில் தான் உண்டு. இலக்கியத்தில் கிடையாது. ஆபாசமாக இருப்பது இலக்கியமும் ஆகாது.

கே: நவீன பாணி ஓவியங்களை உங்களால் எப்படி ரசிக்க முடிகிறது. என்னால் ரசிக்க முடியவில்லையே. ஏன்?

ப: எல்லா நவீனபாணி ஓவியங்களையும் நான் ரசிக்கிறேன் என்று சொல்ல முடியாது. என்னாலும் சிலவற்றை ரசிக்க முடியவில்லைதான். இதற்கு அந்த ஓவியத்தில் குறைபாடு என்று அர்த்தம்

அல்ல. என் ரசனையிலும் குறைபாடு இருக்கலாம்.

ரசனை என்பது பழக்கத்தால் மட்டும் வருவதல்ல. தேர்ந்த ரசனை என்பது பெரும்பாலும் பயிற்சியினுல் வருவதே. பழக்கத்துக்கு மாருனவற்றை ரசித்துப் பயிலாத அனுபவமே, புதிய ரசனைக்குப் பயிற்சி பெறத் தடையாக நிற்கிறது. அந்நிய மோகம் என்கிற விஷயத்தைவிட அந்நியப் பகை மிகவும் கேடானது.

நாம் பார்த்துப் பழகாதது என்பதனுலேயே, நமக்கு அதோடு ஒரு வகையான (Unconscious) பகைமை ஏற்பட்டு விடுகிறது. இது ஏதோ நம்மை ஏமாற்றுகிற முயற்சியோ என்ற மயக்கம் வந்து விடுகிறது. அதற்கு மேல் அந்தக் கலைஞனின் (Integrity) அந்தரங்க சுத்தியையே கேள்விக்கு இலக்காக்குகின்ற பாமர ரசனைக்கு அறிவு பலியாகின்றது. தான் அறியாத ஒன்றுக்கு, தான் ஏமாந்து விடலாகாது என்ற Ego—தன்னகந்தை—எழுந்து நிற்கிறது.

பக்தி இல்லாதவனுக்கு எப்படிக் கடவுளை உணர முடியாது என்று ஆஸ்திகர்கள் சொல்கிருர்களோ அதுமாதிரி, கலைஞனின் மீது நம்பிக்கை இல்லாதவர்கள் படைப்பை ரசிக்க முடியாது. இவர்கள் ரசிக்காததற்காக இவர்களை யாரும் அடிக்க வரவில்லை. ரசிப்பவர்களுக்கும் அந்தப் படைப்புக்களுக்கும் குறுக்கே வந்து தடுக்காமலிருந்தால் சரி.

கே: ஹிப்பிகளால் மனித நாகரீகத்துக்குக் குந்தகம் ஏற்படாதா?

ப: நாகரீகம் என்பதற்கு நீங்கள் என்ன அர்த்தம் வைத்திருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தது அது. ஹிப்பிகள் அல்லாத அமெரிக்கர்களால் தான் வியத்நாமிலும் கொரியாவிலும் மனித நாகரீகத்தின் 'செழுமை' கொடி கட்டிப் பறந்தது. சுத்தமான உடலும், நலுங்காத உடையும் நாசூக்கான நடத்தையும் உடைய பிரபுக்களும் துரைமார்களும் மனித நாகரீகத்துக்கு இழைத்த கொடுமையைச் சரித்திரம் உள்ள வரை உலகம் மறக்க முடியாது.

மனித வாழ்வில் உலகெங்கணும் இந்தப் புற-நாகரீகமும், போலிக் கலாச்சாரமும் ஒரு அரணுகி, அதன் நடுவே ஒவ்வொரு மனிதனின் உள்ளும் சுயநலமும் ஆதிக்க வெறியும் பொய்யான உணர்ச்சிகளின் போர்க்கோலமும் ஒரு கொதிநிலை எய்திய அந்தக் கோடீஸ்வர நாட்டில் அதன் விளைவாக எழுந்த பரிணும வளர்ச்சியே ஹிப்பிகள் என்று நான் கருதுகிறேன்.

எந்தச் சமுதாயமும் எப்படிப்பட்டது என்பதை அறிய அந்தச் சமுதாயத்தின் ஒரு சிறந்த தனி நபரை—Better individual - உரசிப் பார்க்க வேண்டும்.

ஹிப்பிகள் என்று அழைக்கப்படுகிற இவர்களில் எவரையேனும் எங்கேயாவது சந்தித்து நீங்கள் உரையாடியிருக்கிறீர்களா?

அவர்களை வெறுப்பதற்கு முன்னால், அவர்களைப் பற்றித் தீர்ப்பு வழங்குவதற்கு முன்னால், இதைச் செய்ய வேண்டாமா? அமெரிக்கச் சமுதாயம் அவர்களை வெறுக்க முடியாமல் இருப்பதன் காரணம், அவர்களை அழிக்க முடியாமல் இருப்பதன் ரகசியம் அவர்கள் அமெரிக்கர்கள் பெற்றெடுத்த பிள்ளைகள் என்பது மட்டுமல்ல. சுயநல வேட்கையாலும், ஆதிக்க வேட்கையாலும் உலகத்தையே கொள்ளையடித்துக் கொண்டிருக்கிற அமெரிக்காவின் மனச்சாட்சி அவர்கள்.

விஞ்ஞானமும் இயந்திர நாகரீகமும் மனிதத்துவத்தை சூரையாடப் புறப்பட்டுவிட்டபொழுது, தான் என்றும், தனதென்றும் பல்லிளிக்கும் சுயநலம், எங்கள் தேசம் என்றும் எங்கள் கண்டம் என்றும் பெரிய திரையில் தன்னைப் பகட்டிக் கொண்டு அதனை ஒரு நியாயமாக வரிக்கிறபொழுது, தன்னுடைய சந்தோஷங்களையும், இன்பங்களையும், தன்னை ஒரு உயிர் என்கிற அளவிலே சுருக்கிக் கொண்டு மனித இன்பங்களின்மீது ஆழ்ந்த நேசம் கொண்டு எழுந்த ஆன்ம சொருபமே இவர்கள் என்றும் எனக்கு எண்ணத் தோன்றுகிறது.

இவர்களிடம் போட்டியில்லை, பொறாமையில்லை. பூசலில்லை. வன்முறையின் மீது இவர்களுக்கு நம்பிக்கையில்லை. உயர்வு தாழ்வு இல்லை. சேமிப்பு இல்லை. நாளையைப்பற்றிய பயமில்லை. ஒழுக்கங்கள் என்ற பம்மாத்துக்கள் இல்லை. துயரம் இல்லை. கண்ணீரில்லை. பற்று இல்லை.

இவர்களிடம் குறை என்று நாம் கருதுகிற அம்சங்கள் எவ்வளவு இருந்தபோதிலும் மனித நாகரீக வளர்ச்சியில் இவர்கள் ஆற்றவிருக்கும் பங்கு மகத்தானதாகவும் இருக்கும்.

கே: புதுக் கவிதை சகதியில் ஞானரதமும் இறங்கிவிட்டதா?

ப: ஞானம் எதைக் கண்டும் அஞ்சி ஒதுங்குவதில்லை.

கே: விமர்சனத்தினால் படைப்பாளிக்கு ஏதாவது பிரயோஜனம் உண்டா?

ப: ஒரு படைப்பாளிக்குப்

பிரயோஜனப்படாத எதுவுமே பிரபஞ்சத்தில் இல்லை. ஒரு படைப்பை விடவும் விமர்சனம் படைப்பின் ஆக்கம் நிறைந்ததாக இருக்கும் பொழுது, அந்தப் படைப்பாளி முதிர்ச்சி அடையாதவன் என்கிற முறையில் அந்த விமர்சனத்தினால் பயனடையலாம். இதனை ஒரு பொது விதியாக, மரபாக ஆக்குவது படைப்பிலக்கியத்திற்கு அதிகப் பலனைத் தராது. விமர்சனத்தின் நோக்கம் ரசனைக்கு உதவுவதுதான்.

கே: இலக்கியத்தில் சோதனையைச் சோதனைக்காகவே செய்ய முடியாது என்ற கருத்து நிலவுகிறது. இலக்கியப் பிரக்ஞையினால் ஏற்பட்ட தனித் தன்மையுள்ள ஒரு எழுத்தாளன், பழக்கத்தில் இருப்பதினின்றும் வேறுபட்ட முறையில் தன் படைப்பு இருக்க வேண்டும் என்கிற பிரக்ஞையோடு எழுதுவதுதான் சோதனை என்று படுகிறது. அப்படி என்றால் சோதனையை சோதனைக்காகவே செய்வதாக மறைமுகமான ஒரு அர்த்தம் வந்து விடுகிறதில்லையா?

ப: சோதனை என்பது ஒரு Relative term. இலக்கியத்தில் இது உருவம் பற்றிய வார்த்தை. இதனை ஒரு விளையாட்டாகச் செய்து பார்ப்பதும் உண்டு. ஒரு விஷயத்தைச் சொல்வதற்காக வேறு வழியின்றிப் புதிய சோதனைகளைக் கையாள வேண்டிய நிர்ப்பந்தம் படைப்பாளிக்கு ஏற்படுகிறது. ஒரு காலத்துச் சோதனை இன்னொருகாலத்துப் பழக்கமாக மாறி விடுகிறது. எனவே சோதனை முயற்சிகளின்றி, வளர்ச்சிகள் இல்லை என்றாகிறது. ஆனால் ஒரு கலைப் படைப்பாளி, படைக்கிறபொழுது இதை வளர்ச்சிக்காகத் தான் செய்கிறோம் என்ற பிரக்ஞையில்லாமல், தான் சொல்லவந்த விஷயத்திற்கு வலுக் கொடுப்பதற்காகவே இந்தச் சோதனைகளைக் கையாள்கிறான்.

இதில் குழம்புவதற்கு ஒன்றுமில்லை. வளர்ச்சி வாழ்க்கைக்காகவா அல்லது வளர்ச்சிக்காகவேவா என்று கேட்பது மாதிரி இது இருக்கிறது. எது வாழ்கிறதோ அது வளரவும் செய்கிறது. நான் வாழ்வதற்காகச் செய்யும் காரியங்களில் வளரவும் செய்கிறேன். வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டமும் சோதனை மிகுந்ததுதான்.

அடுத்த இதழில் :

பின்னோக்கு — **பிக்காஸோ**

கல்லறை அழைக்கிறது

முடிந்த கதைகள் முற்றுப்
புள்ளியாய்
முடியாத் தொடர்கள்
கேள்விக் குறியாய்
சிதைந்த கனவுகள் கண்ணீர்க்
கறையாய்,
சாகா நினைவுகள் பூவாய்
நிலவாய்
மலர்ந்த முகங்கள் உலர்ந்த
சருகாய்
மாறிய உயிர்களின் மரணப்
படுக்கை
நிறைந்த இன்பம் நித்தமும்
சுகந்தான்
நடந்த கதைதான் நடந்திடும்
கதைதான்.

காலம் தொடங்கிய யாகமா?
ஏனோ
கல்லறை யருகே கனல்
தெரிகிறதே!
காலதேவன் கவியிசைக்
கின்றான்
காற்றுடன் கலந்த உயிர்க்
குரல் கேளாய்!
பாழாய்ப் போன பழைய
ஏடுகள்
பொறுக்கி எடுத்துத் தீயிடு
கின்றான்.
வேளை வந்தது! நாளும் வந்தது!
விரைந்து வந்து
அமைதிகொள் வீரே!

—வழிப்போக்கன்.

ஒழுக்க வியாக்கியானம்

ஒழுக்கத்தைப் பற்றி எனக்குத் தெரிந்ததெல்லாம் இதுதான். எந்தக்காரியத்தை நீங்கள் செய்கிறீர்களோ அதற்கு அப்புறம் நீங்கள் நிம்மதியடைந்தால் அது ஒழுக்கம். எதைச்செய்த பிறகு ரொம்ப மோசமாக உணர்கிறீர்களோ அது ஒழுக்கக் கேடு.

—எர்னெஸ்ட் ஹெமிங்வே.

செத்தபாம்பு

'என்ன கேட்கிறாய்?' என்று எந்த பீடிகையுமில்லாமல் கேட்டுக் கொண்டே அவள் இடுப்பில் தன் கையை வளைக்க முடியும் என்று அது வரை கதிர்வேலுவுக்குத் தெரியாது. அவனுக்கு இருபத்தேழு வயதுதான். உடம்புக்கும் மனசுக்கும் தேவைப்பட்ட ஒரு பெண்ணின் சம்பந்தத்தை இத்தனை வருஷங்களாக அவன் எதில் எதிலோ புதைத்து மூடிக் கொண்டிருந்தான்.

ஆமை ஓட்டிற்குள் அடங்கி ஒரு தனி உலகத்தை சிருஷ்டித்துக் கொள்வது போல, கனவுகளிலும், கக்கூஸ்களிலும், நூற்றுக் கணக்கான பேர் சுற்றி அமர்ந்திருக்கும் சினிமாக் கொட்டகைகளிலும் எதிரில் திரையில் தோன்றும் அழகியுடனும் மானசீகமாக பக்கத்து வீட்டுப் பெண்ணுடனும் அவன் 'டேட்' வைத்துக் கொண்டிருந்தான்.

நிஜமான இடுப்பும் மார்பும் கண்ணுமாக ஒரு பெண்ணைத் தான் கூட முடியும் என்று அவன் நம்பியதில்லை. ஒரு பெண்ணோடு பேசும் வேளைகள் அவனுக்கு அதீதமான நரம்புக் கோளாற்றை உண்டாக்கியதுண்டு.

அப்படிப்பட்டவன் அன்று அந்த ஊரை மூன்று தடவைக்கு மேல் சுற்றி அலுத்துவிட்டு ஒரு டீக்கடை எதிரில் அமர்ந்திருப்பது தெரியாத மறைவில் உட்கார்ந்திருக்கும் போது சற்றுக் குள்ளமாக, பரட்டைத் தலையோடு ஆண்மை நிரம்பிய முகத்தோடு சாயம்போன நைலான் சேலையில் அவள் டீ குடிக்க வந்தபோது பெரிய நிம்மதியை அனுபவித்தான்.

கடைசியாக ஒரு பெண். தோற்றத்திலேயே தெரிந்தது அவள் பஸ் ஸ்டாண்டு வர்க்கம் என்று. கிளீனர்கள்.. டிரைவர்கள், மூட்டை தூக்கும் கூலிகள் சிபிலிஸ், கொனோரியா...என்று அவன் மனம் வாயு வேகத்தில் கற்பனை செய்த போதிலும் ஒரு பெண் ...ஒரு பெண் என்று உடம்பும் உள்ளமும் நெருப்பாகத் தகித்து தாகத்துக்குத் தண்ணீரைத் தேடும் வாயைப் போலத் துடித்தன.

எம். எஸ். பி.
முருகேசன்

வீட்டில் கலாய் பூசுவதற்குக் கலாய்க்காரனோடு வந்த அவனுடைய மகள் தூண்டி

விட்ட நெருப்பு இது. அவனுடைய ஆண்மையை கௌரவிக்கிற மாதிரி, ஏன்...அதை உசுப்பி விடுகிற மாதிரி அவனைப் பார்த்து அவள் சிரித்தாள். அப்படிச் சிரித்த முதலாவது பெண் அவள் தான். அவர்கள் புறப்பட்ட போது அவன் தொண்டையை விழுங்கிவிட்டு அவள் பின்னாலேயே வெகு தூரம் போய் நூறு பேர் பார்க்கலாம் என்ற பிரக்ஞையில் பட்டும் அதைப் பொருட்படுத்தாமல் நடந்து போய் கையை ஆட்டி நாளைக்கு வரச்சொன்னான். அவள் மறுநாள் வரவில்லை. பெண்களைக் குறித்து அவனுக்கு அதிகம் தெரியாது. ஆண் ஓரடி முன்வைத்தால் சும்மா ஒரு ஸ்போர்ட்டுக்காக பெண் ஓரடி பின் வாங்குவாள் என்ற விஷயம் தெரியாது.

அவள் வராமற் போகவே அவனுக்குத் திக்திக் கென்று அடித்துக் கொண்டது. சேரியிலிருந்து தடியும் கம்புமாக ஒரு பட்டாளம் தேடிக் கொண்டு வரப் போகிறது என்று நடுங்கினான். அப்படி எதுவும் நடக்கவில்லை. அதோடு அன்று இரவு அவனுக்குத் தூக்கமும் பிடிக்கவில்லை.

போக்குக் காட்டி போக்குக் காட்டி ஏய்க்கப்பட்ட உடம்புத் தீ அன்றைக்கு ஒரு ஸ்வயக் கூட்டில் அடங்கி அணைந்து போவதை அவமானமாகக் கருதிற்று.

அவன் வெளியே ஜேபியில் சில்லறையோடு ஒரு பெண்ணைத் தேடிப் புறப்பட்டான். அனுபவமின்மை என்பது ஒரு மனிதனை மேலும் அனுபவமற்றவனாகவே வைத்திருக்கிறது. அதனால் பெண்ணே தெரியவில்லை. சமூகம் அவன் கற்பிழந்துவிடுவதை அனுமதிக்க இஷ்டமில்லாததுபோல், எங்கும் பெண்களைக் காணவில்லை.

நல்ல நிலா வெளிச்சம். மெதுவான காற்று. அந்த ஊரின் கீழ்க் கோடியிலிருந்து மேற்குக் கோடிக்கு நடந்தான். அங்கிருந்து ரயில்வே ஸ்டேஷன்; அது ஒரு மைல், அங்கிருந்து பஸ் ஸ்டாண்ட், எங்கெல்லாம் நண்பர்கள் அந்தத் தொழில் நடப்பதாகத் தெரிவித்தார்களோ அங்கெல்லாம் சுற்றினான்.

ஒரு பெண் கிடைக்க வேண்டுமே?

ஒழுக்கமான பேர்வழிகள் விஷயத்தில் உலகத்துக்கும் ஓர் உஷார் உண்டல்லவா?

கடைசியாக டீக்கடையில் அவளைக் காணும்போதுதான் மனசில் எல்லையற்ற நிம்மதி தோன்றியது. எப்படி அணுகுவது? பார்த்தால் அவள் இன்னமாதிரி என்று தெரிகிறது! அது மட்டும்

போதுமா? அதற்கு முன்னே தன்னை அவளுக்கு அடையாளம் காட்டி, அவளை அதற்கு இசையச் செய்து அதற்கெல்லாம் ஒரு தோரணை இருக்குமே! அதை எப்படித்தான் அனுஷ்டிக்கப் போகிறோம் என்று அரைகுறையாகப் பயந்துகொண்டே வேகமாக விளக்கு வெளிச்சத்தின் கீழே தலை குனிந்து மறைந்துபோய் அந்தச் சந்தில் நுழைந்தான்.

ஏரிக்கோடியில் அந்த ஈரச் சதசதப்பில், சாக்கடைகள் சங்கமிக்கும் ஓரத்தில் அந்தச் சந்து முடிந்தது. அருவறுப்பு ஒரு மூலையில் தோன்றி மனசில் கரகரத்தது.

எத்தனை காதல் கதைகளை அவன் ரசித்திருக்கிறான்? காவியமயமான எத்தனை கனவுகளில் அவன் மூழ்கித் திளைத்திருக்கிறான்? பெரிய இண்டலக்சுவல் மாதிரி... உன்னதமான லட்சியங்கள் கொண்ட மனிதன் மாதிரி அவன் எத்தனை உணர்வுகளை அனுபவித்திருக்கிறான்? இப்போது ஒரு மிருகத்தை இன்னொரு மிருகம் தேடித் திரிவதைப் போன்ற பசியோடு நடந்து கொண்டிருப்பது அவன்தானா? இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொண்டே, அவன் நடந்தான்.

குடிசைக்கு வெளியே அவள் சிகரெட் பிடித்தவாறு நின்றிருந்தாள். அவளுடைய வாழ்க்கையின் அக்கறையற்ற அனுயாசத்துக்கு அதுவே ஒரு விளம்பரம் போலிருந்தது.

'கிளீனர் முத்து வீடு எங்கே இருக்குது?' தொண்டை கரகரக்க ஒரு பொய்யை அவிழ்த்தான். உடம்பு ஜிவுஜிவுவென்று ஜுர வேகத்தை அனுபவித்தது.

அவள் சிகரெட்டை வாயிலிருந்து எடுத்து 'கிளீனரா... இந்தப்பக்கம் யாரும் கெடையாது.' என்று பதிலளித்தாள். அந்தப் பதிலுக்காக வராதவன் போல் அவன் நின்றான். அவனைப் பார்த்துக்கொண்டே அவள் சிகரெட்டை மறுபடியும் வாயில் வைத்து இழுக்கத் தொடங்கினாள். சிகரெட்டை உறிஞ்சிக் கொண்டே அவனைப் பார்த்தாள்.

'ப்பூ' என்று பின்பு புகையை அவன் முகத்தை நோக்கி ஊதுவது போல ஊதிவிட்டு மீண்டும் அவனையே உற்றுப் பார்த்தாள் அவள். அது கதிர்வேலுவுக்கு ஒரு தைரியத்தைக் கொடுத்தது. கனவிலே நடப்பது மாதிரி உணர்வின்றி அவளை நெருங்கி ரொம்ப நாட்கள் சர்வீஸானவன் மாதிரி அவளது இடுப்பில் கை கொடுத்து அவளை அணைத்தவாறே 'என்ன கேட்கிறாய்?' என்றான்.

அவள் சிகரெட்டைக் கீழே

போட்டு காலில் மிதித்து அணைத்தவாறே ஒரு வியாபார உஷாரோடு சொன்னாள்.

'ரெண்டு ரூபா'

'எடம்?'

'இதோ உள்ளத் தான்'

உள்ளே குடிசையில் சிறு காடா விளக்கு எரிந்து கொண்டிருந்தது. யாரோ படுத்திருந்தார்கள்.

'யாரோ படுத்திருக்காங்களே''

'எழுப்பிடறேன்'

'சரி, நட'

'மொதல்லே, காசு கொடுக்கணும்'

அவன் ஒரு படபடப்போடு ஜேபிலிருந்து இரண்டு ஒற்றை ரூபாய் நோட்டுக்களை உருவினான். அதை வாங்கி சேலை முந்தானையில் அவள் முடிந்து கொள்ளும் நேரத்தில், மனதில் கனன்ற அக்னியும், ஒரு பெண்ணின் அருகாமையைக் குறித்து அவன் கொண்டிருந்த காவியக் கனவுகளும் முயங்க, அவளது கன்னத்தில் பரவசத்தோடு அவன் ஒரு முத்தமிட்டான்.

அந்த உணர்வுகளின் உச்ச கதியைப் பற்றி அவள் சிறிதும் அக்கறைப்படாதவள் மாதிரி, காய்கறிச் சந்தையின் ஜனக் கூட்டத்தில் யாரோ இடித்துச் செல்வதைப் பற்றி என்ன அசிரத்தையைக் காட்ட முடியுமோ, அவ்வளவு சாதாரணமாக உள்ளே படுத்திருந்தவளை எழுப்பினாள்.

'ஆயிமா, ஆத்மீ ஆயா. தூ அந்தர் சலோ'

'நீ முஸ்லீமா?' என்று ஆவலோடு கேட்டான் கதிர்வேலு.

'உம்' என்று முனங்கிவிட்டு படுக்கையிலிருந்து அந்தக் கிழவி முணு முணுத்துக் கொண்டே எழுவதைக் கவனித்தான். கிழிந்த பாய்க்கு மேலே போட்டிருந்த சேலையைச் சுருட்டிக் கொண்டு அந்தக் கிழவி நகர்ந்தபோது, அருகிலே கட்டியிருந்த ஆனையிலிருந்து குழந்தை விழித்துக்கொண்டு விசும்பத் தொடங்கியது.

சேலையைக் கக்கத்தில் இடுக்கிக் கொண்டே அந்தக் கிழவி குனிந்து ஆனையை ஆட்டினாள்.

'ரோரோ ... ரோரோ ... சோரே முன்னு ... சோ ..' என்று அவள் உடைந்த குரலில் கூறியவாறே குழந்தையை ஆட்டினாள். கதிர்வேலுவுக்கு நறநற வென்று நெருஞ்சிப் புதரை மிதித்த மாதிரி இருந்தது. அந்த உணர்வு நீடிக்கவில்லை. எல்லாம் ஒரு கணம்தான்.

கிழவியின் முதுகு அந்தப் பக்கமாகத் திரும்பி இருந்ததால், அந்தக் காட்சிக்குத் தான் பார்வையாளனாக நேர்ந்த மனக் கரிப்பை மரத்

துப் போகச் செய்வதற்காக அருகிலே நின்ற அவளை இரண்டு கைகளாலும் தழுவிக் கொண்டே தனது ஏங்கும் உதடுகளை அவளது கழுத்திலே பொதித்தான் கதிர்வேலு.

'சீ...விடுய்யா, ரெண்டு ரூவா கொடுத்துட்டா பொண்டாட்டி ஆயிடுவேனு? பூனைக் குட்டி ஓராயற மாதிரி வந்து மேலே விழறியே' என்று அவள் சீறி விழுந்தாள்.

கதிர்வேலுவுக்கு கன்னத்தில் அடித்த மாதிரி இருந்தது. சுபாவத்தில் அவன் மிகவும்கோபக்காரன். ஆனால் இப்போது கோபம் வரவில்லை. அவள் சொன்னதிலிருந்த நியாயம் சாணியைக் கரைத்து அவன் முகத்தில் ஊற்றிய மாதிரி இருந்தது. அவன் அனுபவிக்கும் அவமானத்தைக் குறித்து எதையும் பொருட்படுத்திக் கொள்ளாமல் இன்னும் அழுது கொண்டிருந்த குழந்தையை கவனித்துக்கொண்டே 'முன்னுனே அந்தர் லே ஜாவ். வாம் தூத் ஹை. உன்கோ பீ தால்' என்று கடுகடுப்பாகக் கூறினாள் அவள்:

கிழவி குழந்தையை ஆனையிலிருந்து எடுத்துக் கொண்டு இருட்டாக இருந்த குடிசையின் உள்ளே மறைந்தாள்.

அடுத்து என்ன செய்வதென்று புரியாமல் கதிர்வேலு நின்றான். அவள் சுவற்றோரமாக நகர்ந்து சென்று பாயை இழுத்து நேர் செய்துவிட்டு நிமிர்ந்தாள்.

ஆணுக்குரிய ஆளுமை குறித்த பிரக்ஞை யின்றி, மனசு தோய்ந்த, நைச்சியமான விண்ணப்பம் போன்ற அந்த விண்ணப்பத்திலிருக்கிற அசட்டுத்தனத்தை உணர்ந்துகொண்ட குரலில், அவளது முரடேறிய கையைப் பிடித்துக் கொண்டே அவன் சொன்னான்.

'இது எனக்குப் புதுசும்மா. சீக்கிரமா என்னை ஓட்டிடாதே'

அவள் மரக்கட்டைபோல் நின்று அவனைப் பார்த்தாள். அவனை அந்த எதிரெர்பியற்ற தோற்றத்தில் காண்பது சங்கடமாக இருந்தது. என்றாலும் தனது இடக்கரத்தைஅவளது பிருஷ்டத்தைச் சுற்றி வளைத்து, சுவற்றின் மீது அவளைச் சார்த்தி, சிகரெட் நாற்ற மடிக்கின்ற அவளுடைய பெரிய உதடுகளை, முதன் முதலாக பெண் உதடுகளை உயிர் தோய்ந்த ஆவேசத்தோடு அவன் முத்தமிட்டான். ஒரு முறை, இரண்டு முறை. அந்த உதடுகளிலேயே ஒடுங்கி விடுவது போன்ற ஆவேசத்தோடு அடுத்த முறை.

அவனது கறை படியாத யௌவனத்தின் நேர்மை சரே

லென்று அவளைத் தாக்கிற்றே என்னமோ அவள் கண்களை மூடிக்கொண்டு உதடுகளை அவனுக்கு ஒப்புவித்து விட்ட அயர்ச்சியில் முகத்தை ஏந்தி நின்றுள்.

சில கணங்கள் வேகமாக... புயல் வேகமாகக் கடந்தன.

அந்த அனுபவத்தின் உச்ச கதியை அந்த ஆவேசத்தில் வெகு துரிதமாக எட்டி விட்டான் கதிர்வேலு. தேகமெங்கும் பரவியிருந்த மின்சார வேகம் ஒரு பொறி கடந்த புள்ளியில் குத்தி நின்று, துள்ளித் துள்ளி எங்கோ எங்கோ ஓர் எல்லையில் குபீரென்று இறங்கி ஓடத் தொடங்கி, இறங்கிவிட்டது. அந்த வெள்ளம் தணியத் தணிய உயிர்த் தணல் மங்கி வேகமாக உடல் முழுதும் சாம்பலாகக் குவிந்து கொண்டே வருவது போல உணர்ந்தான். ஒரு லிஃப்டில் கீழிறங்குவது போல் துடிப்பு தாழ்ந்துகொண்டேயிருந்தது.

கதிர்வேலு...அவன் எப்பேர்ப்பட்ட மனிதன்! அவனது நண்பர்கள். அந்த சொஸைட்டி...சீ, கேவலம். இப்படி ஏரிக்கரையில், ஒரு குட்டிச் சுவர்க் குடிசையில், ஒரு பஸ் ஸ்டாண்ட் 'கிராக்கி, யோடு என்ன கேவலம்?"

அவள் கண் திறந்தாள். அதே சமயம் கூரைச் சார்பிலிருந்து பொத்தென்று ஏதோ உள்ளே வந்து விழுந்தது. காடா விளக்கு வெளிச்சத்தில் பளபள வென்று நீளமாக மின்னியது.

'யோவ் ... பாம்புய்யா ... பாம்பு'

அவன் பதறிக் கொண்டே நகர்ந்தான்.

'ஓரமா நில்லு. ஆயிமா, ஏக் பாணு லோ' என்று கிறீச்சென்று அவள் கத்தினுள்.

கிழவி அழுகின்ற குழந்தையைக் கீழே போட்டு விட்டு அவசர அவசரமாக ஒரு தடியைத் தூக்கிக் கொண்டு ஓடி வந்தாள். கதிர்வேலு பயந்து தூரத்தில் நின்றுன். கிழவியின் கையிலிருந்த தடியை வாங்கி படார் படார் என்று ஓங்கி அவள் அடிக்கத் தொடங்கினுள்.

துள்ளாமல், துடிக்காமல், சீருமல் அடியை வாங்கிக் கொண்டு அந்தப் பாம்பு நைந்தது.

இரண்டு மூன்று அடி அடித்ததுமே அவளுக்குப் புரிந்து விட்டது. சிரித்துக்கொண்டே 'செத்த பாம்புய்யா...செத்த பாம்பு. பருந்து பட்சிங்க துண்றதுக்காக மேலேகொண்ணுந்து போட்டிருக்கும். குடிசை ஓட்டையிலேருந்து நழுவிக் கீளே வுளுந்துட்டிருக்கு'

கதிர்வேலு முகத்தில் அசடு வழிந்தது.

அவள் கோலால் பாம்பைத்

தள்ளிக் கொண்டே போய் வெளியே எறிந்தாள்.

தான் நிற்பதா திரும்பிப் போவதா என்று புரியாமல் கதிர்வேலு யோசித்துக் கொண்டே நின்ருன்.

அவள் பாயைக் கிழக்கு மூலைக்குத் தள்ளிப் போட்டு விட்டு உட்கார்ந்தாள்.

"வாய்யா...வந்து படு! நல்ல டமாஷ் செத்த பாம்பை?'

'இங்கேயா?' என்று முன கினுன் கதிர்வேலு.

'ஜல்தி ஆவட்டும், செகண்ட் ஷோ வுட்ற நேரம்! மச மசண்ணு நீ முளிச்சிக் கிட்டு நின்னியானு எனக்குக் கொராக்கி கெட்டுப் போவும்'

'எப்படி..உம்...?' என்று அவன் தயங்கியவாறே முன கினுன்.

'இந்த மாதிரி பச்சைப் புள் ளைங்கள்ளாம் எதுக்குய்யா வர்றீங்க?' என்று கேட்டுக் கொண்டே மல்லாந்து படுத்து சேலையை வழித்துக் கொண்டே அவள் அவனை வரவேற்ருள்.

கதிர்வேலுவுக்கு ஏதோ வரட்டுச் சவாலுக்காக, உடம்பு சாம்பலாகக் கனிந்து விட்ட அந்தத் தருணத்தைப் பயன்படுத்த வேண்டும்போலி ருந்தது. அவன் அவளுக் குள் பிரவேசித்தான்.

எல்லாம் புதிராக இருந்தது. எங்கே எப்படிப் போய்க் கொண்டிருக்கிருேம் என்று அவனுக்கு விளங்கவில்லை.

அவள் அவனுக்கு வழி காட்டினுள்.

மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் திடீ ரென்று கவனம் வந்த பௌரு ஷத்தோடு, அதற்கு ஒத்து ழைக்காத உடம்போடு, அவன் போனுன். வந்தான். போனுன். வந்தான். போய்ப் போய் வந்தான்.

'அவளுக்குத் தெரிந்து விட் டிருக்குமா?'

'தெரிந்தால் என்ன, அற்ப மாக, அற்பத்திலும் அற்ப மான இந்த மிருகத்திற்குத் தெரிந்தால் என்ன, தலையா போய்விடும்?'

அவனுக்கு இந்த உப்பு சப் பற்ற செத்த பாம்பு விளை யாட்டு அருவறுப்பாக இருந் தது. இதை ஏன் செய்கிருேம் என்று விளங்கவில்லை. கொஞ்ச நேரத்திற்கு முன் அவன் நெகிழ்ச்சியோடு விலங்கு விலங்கைத் தேடும் வேட்கைக்கு மேலாக, ஓர் உயிரின் ஆழத்தில் இன் னெரு உயிர் மூழ்கி ஒரு சரணுகதியையோ இரண்டு மழிந்த ஆனந்த லயத் தையோ போன்று—ஒன்றை ஒரு காதலன் போல் அவன் அவனுக்குள் தேட முயன் ருனே! அந்த ஞாபகம் வந்த தும் அவனுக்குத் திடீரென்று கோபம் வந்தது.

அதை அவள் எவ்வளவு

அலட்சியமாக முகத்தில் எறிந்து பேசினுள். அதற்கு என்ன பதில் சொல்ல முடிந்தது அவனுல்? இது தான் சந்தர்ப்பம்! அவனை அவமானப்படுத்த, அவள் எவ்வளவு இழிவான ஈனப் பிறவி என்று திருப்பித் திருப்பி ஞாபகப் படுத்துவதற்கு இதுதான்வழி. இதுதான். இதுதான்.

'யோவ் ஏந்திரிய்யா..'

கதிர்வேலு தனது பிரயாணத்தை மேலும் மேலும் மேலும் தொடர்ந்து திரும்பிக் கொண்டிருந்தான்.

'யோவ்... டயமாச்சு, எழுந்திருய்யா' அவள் அவனைப் பிடித்துத் தள்ளினுள். அவன் சற்று சோர்ந்து கீழே விழுந்தான்.

'சுத்த ஹராத் புடிச்ச மனுசன்...' என்று கோபமாகத் திட்டிக் கொண்டே எழுந்தாள். அவசரத்தில் குடிசைக் கூரை தலையை இடித்து விட்டது. தலையைத் தடவிக் கொண்டே குனிந்துபோனுள்.

வெளியே பக்கெட்டிலிருந்த தண்ணீரைச் சள சளவென்று இறைத்து அவள் சுத்தம் செய்து கொள்வது காதில் விழ, கதிர்வேலு பிரமைபிடித்தது போல் அங்கேயே எழுந்து உட்கார்ந்தான்.

சற்று கழித்து அவள் திரும்பி வந்தாள். அவன் உட்கார்ந்திருப்பதைப் பார்த்து 'வெளியே தண்ணி இருக்குது–போய்க் கழுவிக்கோ' என்ருள்.

நடைப்பிணம் போல, யந்திரம் போல அவன் தலை குனிந்து, குடிசைக் கூரைக்கு அடிபடாமல் தாழ்ந்து வெளியே வந்தான்.

'ஏங்கோ..' என்று திடீரென்று அவள் பன்மையில் அழைத்தாள். அந்த ஆச்சரியமே அவனைத் திடுக்கிட வைத்தது. அப்படி அழைக்கப்பட்டதில் பெரிதும் லஜ்ஜையாக கூட இருந்தது.

'நாளைக்குப் பகல்லே வாங்கோ...கொஞ்ச நேரமில்லே.. எவ்வளவு நேரம் ஒங்களுக்கு இஷ்டமோ அவ்வளவு நேரம் நிம்மதியா இருந்துட்டுப் போகலாம். இது ராவு. செகண்ட் ஷோ வுடற நேரம், எனக்குத் தொழில் நடக்கிற வேளை' அவள் தயங்கித் தயங்கி எதற்கோ வருத்தப் படுகிற மாதிரி சொன்னுள்.

அதைத் கேட்கும்போது 'இவள் வாடிக்கை பிடிக்கப் பார்க்கிருள்' என்றுதான் கதிர் வேலுவுக்குத் தோன்றிற்று.

'நானுவது — மறுபடியும் இந்தப்பக்கம் வர்றதாவது' என்று திடமாகத் தீர்மானித்துக் கொண்ட மாதிரி ஓர் உறுத்தலோடு 'உம்ம்' என்று முனகினுன்.

வாசலில் நின்ற அவள் திடீரென்று குழந்தை அழவே, உடனே உள்ளே திரும்பிப் போனுள்.

கதிர்வேலு நச்சென்று எதையோ மிதித்தான். கால் கூசிற்று. பீதியும் திகீரென்று உறைத்தது. பாம்பு. அவன் வெளியே வீசிப் போட்டிருந்த செத்த பாம்பு. பக்கெட்டில் மிஞ்சியிருந்த தண்ணீரைக் கொட்டி சுத்தம் செய்து கொண்டு, கவனமாகக் கால்களையும் கழுவினான்.

●○●

சீட்டுக்கட்டு ராஜா

கம்யூனிஸ்ட் சீனாவில் தயார் செய்யப்பட்ட சீட்டுக்கட்டுகள் சிட்னியில் விற்பனைக்கு வந்தன. வாங்கியவர்கள் நாற்பத்தெட்டு சீட்டுக்கள் மட்டுமே இருக்கக் கண்டார்கள். எல்லா ராஜாக்களையும் காணோம், அதற்கு சிட்னி மார்னிங் ஹெரால்ட் ஒரு குறிப்பு எழுதிற்று. ராஜாக்களை சீட்டுக் கட்டில் சேர்ப்பது தலைவர் 'மா' வின் சிந்தனையை அனுசரிக்காமல் எங்கோ சற்று, தூரம் இழுத்துச் செல்கிறது.

—ரீடர்ஸ் டைஜஸ்ட்

ஓர் இலக்கிய முத்திங்கள் ஏடு!

நடை

கவிதை, கதை, கட்டுரை, நாடகம், விமர்சனம், இவற்றிலெல்லாம் சோதனைகளுக்கு இடமளிக்கிறது நடை. முதன்முதலாக, தொடர்ந்து தற்கால பாணி ஓவியங்களுக்கு இடமளித்து விளக்குகிறது.

இது தீவிர இலக்கியப் படைப்பாளிகளின்—ரசிகர்களின் ஏடு.

சந்தாதாரர்களுக்கு மட்டுமே நடை கிடைக்கும்.

ஆண்டுச் சந்தா
இலங்கை உள்பட ரு. 3/-
வெளி நாடுகள் ரு. 7/.
தனி இதழ் ரு. 1/-

ஆசிரியர்:
கோ. கிருஷ்ணசாமி
40, நத்தமர் தெரு,
சேலம் - 3

ஞானரதம்

ஏஜண்டுகள், சந்தாதாரர்கள், வாசகர்கள் கவனத்திற்கு :

ஜெயகாந்தனின் கீழ்க்காணும் எல்லா நூல்களையும் செட்டாகவோ, தனித்தனியாகவோ பின் கண்ட சலுகைத் திட்டத்தில் ஞானரதம் மூலமாகவே பெறலாம்.

1. ஆர்டருடன் பணம் அனுப்பு-வோர்களுக்கு	20 சதவிகிதம் கழிவு அளிக்படும்.
2. இரண்டு தவணையில் பணம் செலுத்த விரும்புவோர்களுக்கு (உள்ளூர் ஞானரதம் ஏஜண்டு மூலமாக ஆர்டர் அனுப்புவோர்களுக்கு மட்டும்)	ஏஜண்டுக்கு 10 சதவிகிதமும் வாங்குவோருக்கு 10 சதவிகிதமும் அளிக்கப்படும்.

உங்கள் ஆர்டர்களை உரியபணத்துடன் நேரடியாகவோ, உள்ளூர் ஏஜண்டு மூலமாகவோ அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி : ஞானரதம், சக்தி இல்லம், சென்னை-36

ஜெயகாந்தன் நூல்கள்

நாவல்		சிறுகதைத் தொகுதி	
பாரிசுக்குப் போ	ரூ. 6 25	யுகசந்தி	5 00
ரிஷி மூலம்	3 25	இறந்த காலங்கள்	3 50
உன்னைப்போல் ஒருவன்	3 50	உண்மை சுடும்	3 00
கோகிலா என்ன செய்து விட்டாள்	3 25	தேவன் வருவாரா	3 00
வாழ்க்கை அழைக்கிறது	3 00	சுய தரிசனம்	2 75
பிரளயம்	2 75	புதிய வார்ப்புகள்	2 75
யாருக்காக அழுதான்	2 00	சுமைதாங்கி	2 75
பிரம்மோபதேசம்	1 75	மாலைமயக்கம்	2 50
கைவிலங்கு	1 75	இனிப்பும் சிரிப்பும்	2 50
கருணையினால் அல்ல	1 50	ஒரு பிடி சோறு	2 50

யுக சந்தி

இந்த சந்திப்பு ந. சிதம்பர சுப்ரமணியம் அவர்களினுடையது. மணிக்கொடியிலிருந்து எழுத்து வரை நான் எழுத நேர்ந்த பத்திரிகைகள் எல்லாம் இரண்டாயிரம் பிரதிகளுக்குள் விற்ற சின்ன பத்திரிகைகள் தான். கலைமகள் தான் நான் எழுதிய பத்திரிகைகளுள் பெரியது என்று நினைக்கிறேன் என்று கூறும் ந. சிதம்பர சுப்ரமணியத்தின் வாசகர்களே அவருடைய எழுத்தின் வலிமைக்கு நல்ல சாட்சிகளாய் இருக்கிறார்கள்.

—நிர்வாக ஆசிரியர்.

ந. சிதம்பர சுப்ரமணியம்

வாசகர் 1

அன்பரே 20-2-44

பல வருஷங்களாக தங்கள் கதைகளை ஆர்வமுடன் படித்தநுபவிப்பவருள் ஒருவன் நான். அடிக்கடி என் நண்பர் ஸ்ரீமான் த.நா. குமாரஸ்வாமி அவர்களுடன் பேசும் பொழுது தங்கள் கதைகளைப் பற்றி பேச்சு நிகழும். சுமார் 2 மாதங்களுக்கு முன் ஸ்ரீ குமாரு ரேடியோவில் பேசுகையில் வெகு அழகாகச் சொன்னார் தங்கள் கதைகளின் பண்புகளைப்பற்றி. தங்களை நேரிற்காண சில சமயம் கோடித்தும் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை. வேளை இன்னும் வரவில்லை என்று தான் நான் எண்ணுகிறேன்.

முக்யமாக இந்த லிகிதம் வரையத் தூண்டிய காரணம் தங்கள் ஸமீப ஸ்ருஷ்டிகளில் படர்ந்தோடும் துக்க ரேகை தான். 'சக்தி' பொங்கல் இதழும், 'புவனேச்வரி'யும் சான்று. 'கொல்லைப்புற கோழி'யின் garb வெகு நேர்த்தியாக இன்னும் நுகர்கிறேன்.

அடுத்த மாதம் சென்னை வர உத்தேசம். அவசியம் என் உள்ளத்தில் அள்ளிய தங்கள் ரசனைகளின் அலைகளைப் பற்றி அளவளாவுவேன். தங்கள் எழுத்துக்கள் தந்த இன்பத்திற்கு நன்றி நேரிற் செலுத்தியதில் ஒரு மகிழ்ச்சியும் அதனூடே.

அன்பன் வேங்கடராமன்.
Installn. Supdt.

வாசகர் 2

நமஸ்காரம்,

'இதயநாதம்' என்னை மிகுந்த மனச் சாந்தியில் ஆழ்த்திவிட்டது. அருமையான நாவல் என்பதில் ஐயமில்லை. நூற்றுக்கு ஒரு புத்தகம் இக்காலங்களில் இவ்வளவு பண்பாட்டின் சின்னமாய் விளைகின்றது. வெறும் வாழ்க்கைக் குப்பையை நோண்டி எழுதும் தற்கால எழுத்தாளர்களின் இடையே ஒருவராவது நல்ல உயர்ந்த மன நிலையை உண்டாக்கப் பாடுபட்டிருப்பதை மெச்சுரது ஒன்றே நியாயம்.

அரசாங்கம் இந்த நூலை உயர்தரப்புத்தகமெனக் கருதுவார்கள். பரிசும் அளிப்பார்கள். எனக்குச்சந்தேகமில்லை.

சந்திரசேகரன்,
மயிலை.

வாசகர் 3

மதிப்பிற்குரிய ஸ்ரீ சிதம்பர சுப்பிரமணியம் அவர்களுக்கு அநேக நமஸ்காரம். முன்பின் அறிமுகம் இல்லாதவன் எனினும் 'ஆசை பற்றி அறையலுற்றேன்'—என்கிற மாதிரி ஆவலால் உந்தப்பெற்று இக்கடிதத்தை எழுதுகிறேன்.

பாராட்ட வேண்டுமென்பதற்காக மட்டும் இக்கடிதத்தை எழுதவில்லை. உங்களுடைய கதைகளைப் பாராட்டுகிற அளவுக்குக் கூட அடியேன் தகுதி உடையவன் அல்லன்.

கோவில்களில் கற்பூர தீபாராதனை நடக்கும் போதும், காலை நேரத்தில் விகஸிக்கும் புஷ்பங்களைக் காணும்போதும், கீதை, உபநிஷதங்களை, உணர்ந்து படிக்கும்போதும், ஏற்படுகின்ற புனிதமான தெய்விக உணர்ச்சி அடியேனுக்கு உங்கள் சிறுகதைகளைப் படிக்கும்போது உண்டாகிறது.

வேறு சிலருடைய சிறுகதைகளைப் படிக்கும்போதும் இதேமாதிரி உணர்வு ஏற்படுகின்றது. அவர்களுடைய பெயர்களை இங்கே எழுதுவது அநுசிதமாகாது, எனவே கீழே எழுதுகிறேன்.

ஸ்ரீ கு.ப.ரா. ஸ்ரீ பு. பித்தன் ஸ்ரீ தி. ஜானகிராமன், ஸ்ரீ லா. ச. ராமாமிருதம், ஸ்ரீ ந. பிச்சமூர்த்தி, ஆகியோர் கதைகளிலும் இதே தன்மையைக் காண்கின்றேன். இந்த மூவரைவிடத் தத்துவக் கருத்துக்களை அமைப்பதிலும், கதை முழுவதும் பரவிநிற்கும் அமானுஷ்யமான 'சாந்தியை' உருவாக்குவதிலும் நீங்கள் ஈடு இணையற்று விளங்குகிறீர்கள். கொல்லைப்புறக் கோழி, பூஜையும் போதையும். போராட்டம், இக்கதைகளை இன்னொரு பிறவியிலும் மறக்கமுடியாது. நீங்கள் ஏன் தற்போது அதிகம் எழுதுவதில்லை என்பதைக் 'கதையும் கதாசிரிய

ரும்'–'ஐந்து நிமிஷம்'–ஆகிய சிறு கதைகளில் தெரிந்து கொண்டேன். 'சூரியகாந்தி', 'வருஷப் பிறப்பு', 'இதய நாதம்', ஆகிய உங்களுடைய மூன்று புஸ்தகங்களையும் சோர்வு ஏற்படும்போதெல்லாம் எடுத்துப் படித்து மனத்தைப் புனிதமாக்கிக் கொள்கின்றேன். காவேரியைப் போன்ற ஓர் புண்ணிய நதியில் நீராட இறங்கும்போதோ, சிதம்பரம் கோவிலைப் போன்ற ஒரு பேராலயத்தினுள் நுழையும்போதோ, எத்தகைய சாந்தமும், தூய்மையும், மிகுந்த எண்ணங்கள் உண்டாகுமோ, அந்த எண்ணங்கள் உங்கள் கதைகளைப் படிக்கத் தொடங்கும் போதே எனக்கு உண்டாகி விடுகின்றன. எப்படிப் புகழ்வதென்றே தெரியவில்லை. திரும்பத் திரும்ப ஒரே மாதிரி எழுதுகிறேன்.

போலியை, எப்படி வேண்டுமானாலும் உயர்த்திப் புகழலாம். சத்தியத்தைப் புகழப் பாஷை கிடையாது. புகழ்பவனும் 'மூங்கையனுகி' விடுகிருன். உங்கள் கதைகளைப் புகழ நினைக்கும் போது—புகழும்போது, எனக்குச் சொற்கள் க்டைக்கவில்லை. நான் தடுமாறுகிறேன். காரணம் நீங்கள் சத்திய இலக்கியத்தை—புகழ்பவனைத் திணறச் செய்யும் புனித இலக்கியத்தைப் படைத்திருக்கிறீர்கள். அது வாழ்க. வளர்க!

நீங்கள் எழுதியதாக விளம்பரம் செய்யப்பட்டிருப்பவற்றில் 'சக்கர வாகம்', 'ஊர்வசி'—என்ற இரண்டுமே நான் எங்கு விசாரித்தும் கிடைக்கவில்லை. அந்த இரண்டும் படிக்கப் பெற்ருலொழிய எனக்கு நிம்மதி இல்லை. இங்குள்ள கடைகளிலும் இல்லை. நூல் நிலையங்களிலும் இல்லை. சென்னைக்கும் எழுதினேன். பதில் இல்லை. எங்கே கிடைக்கும்? என்று தெரிவித்தால் நன்றி யுள்ளவனுக இருப்பேன். புஸ்தகக் கடைகளில் கிடைத்தால் வி. பி. பி.யில் அல்லது எம். ஓ. அனுப்பிப் பெறுவேன். அவசியம் விவரம் அறிய ஆசை.

மீண்டும் நமஸ்காரம்

18-3-57 தங்களன்புள்ள,

நா. பார்த்தசாரதி

22, தமிழ்ச்சங்கம் ரோடு,

மதுரை.

வாசகர் 4

அன்புள்ள சிதம்பர சுப்ரமண்யம் அவர்களுக்கு வணக்கம்.

தங்கள் எழுத்தை நெடு நாட்களுக்குப் பின் 'எழுத்து' மூலம் தரிசிக்க முடிந்தது. 'விண்ணும் மண்ணும்' எனும் பொருளின் கீழ் பலநாள் பலர் பேசியும் விளங்காத விரி பொருளைப் பற்பல அறிஞரின் மேற்கோள்களுடன் அற்புத

முறையில் தெளிவுடன் எழுதியுள்ளீர்கள்.

ஒவ்வொரு மனிதன் வாழ்விலும் எழும்பும் வினுக்களுக்கும் பிரசினைகளுக்கும் நல்ல முறையில் பதில் கொடுத்திருக்கிறீர்கள்.

நம் மாவட்டத்தைச்சேர்ந்த எழுத்தாளர்கள் சிறப்பானவர்கள் இல்லையே எனும் பெருங் குறையைத் தங்கள் மூலம் தீர்த்துக் கொள்கிறோம். மறுமலர்ச்சி இலக்கியத்தின் ஆழமான, கனமான சோதனை செய்பவர்களின் முன்னோடி என்பதிலும் ஈடற்ற பெருமை எங்களுக்கு! 'இதய நாதத்'தின் இனிய கீதம் தமிழ் இலக்கிய உலகில் என்றும் இசைத்துக் கொண்டிருக்கும். 'சூரிய காந்தி'யின் அழகு மனதை நாளும் கவர்ந்து கொண்டிருக்கிறது. இன்னும் ஒரு நாவல் வெளிவர இருப்பதை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். தங்கள் இலக்கிய சேவை இன்னும் வளர, இறைவனை வேண்டுகிறேன்.

23-3-59 அன்புள்ள,

சுப. கோ. நாராயணசாமி,
நாச்சியார்கோவில், P.O.
ஸ்ரீவில்லிபுத்தூர் (வழி)

வாசகர் 5

க்ஷேமம்

அன்புள்ள சுப்ரமணியய்யர் அவர்களுக்கு,

தங்கள் கட்டுரை 'நாவல் பிறக்கிறது' என்ற தலைப்பில் வந்துள்ளதை இன்று வாசித்தேன். என்ன அழகாக எளிய தமிழில் எவ்வளவு பெரிய அரிய தத்துவங்களை எல்லோரும் அறியும் வண்ணம் எழுதியிருக்கிறீர்கள்.

'எழுத்தாளனின் மனம் நல்லதோர் எண்ணத்தில், தூய சிந்தனையில், உள்ள உயர்வு என்ற அனுபவத்தில் நிலைத்தால் அவரது எழுத்து, சிறந்து நிரந்தர இலக்கிய சிருஷ்டியாகும்' என்று எழுதியிருக்கிறீர்கள். உள்ளத் தூய்மையுடன் எக்காரியத்தையும் உண்மையோடு செய்ய முற்படின், உலகத்தின் பல கஷ்டங்கள் தோன்றவே தோன்று. தோன்றினுலும் தோன்றிய அளவிலே அழிவுறும். 'நெஞ்சிலே உண்மை ஒளி உண்டானுல் அது தானே எழுத்திலே ஒளி வீசும்' எழுத்தில் மாத்திரமா, எச்செயலிலும். அவர் செய்யும் எச்சிறு செயலும் உலகை உய்விக்க செய்யும் என்பதில், சந்தேகமில்லை; இந்திய அரசியல் வாதிகளை இக்கண் கொண்டு பார்க்கும்போது மனம் நோகின்றது. வலிமை குன்றுகிறது. ஒரு வேளை நமது சுதந்திரமும் பறிபோய் விடுமோ என்ற பீதிகூட எழுகிறது. கடன் பட்டவன் நெஞ்சம்போல் கலங்குகிறது. எல்லா வல்ல இறைவன் உண்மையான இலக்கிய கர்த்

தாக்களை உடனேயே நமக்கிடையில் அதிகம் சிருஷ்டித்து அவர்களைக் கொண்டு அரசியல் வாதிகளின் அறியாமையைப் போக்கி ஆக்க வேலையில் உண்மையோடு உழைக்கும் தொண்டர்களாக்கி இந்தியாவை முன்னேற உலகமே மேன்மையுற அருள் புரிவாராக. வாழ்க உங்கள் எழுத்தும் லட்சியமும்.

17-8-61 அன்புள்ள
வெங்கட்டராமன்

வாசகர் 6

க்ஷேமம்
'அன்பர் அவர்களுக்கு,

அநேக நமஸ்காரம் உபய குசலம். இன்று கிடைத்த 'கல்கி'யில் 'நாவல் பிறக்கிறது' என்ற தலைப்பில் நீங்கள் உங்கள் குடும்ப வரலாற்றைப் பற்றி எழுதிய ஸ்வாரஸ்யமான பகுதியை வெகு மகிழ்ச்சியுடன் படித்தேன். மழவை சிதம்பர பாரதியாரவர்களின் பேரனாகிய ஸங்கீத கலாநிதி மழவராய நேந்தல் ஸ்ரீ சுப்பராம பாகவதரவர்கள் எனது ஆப்த நண்பர். உங்கள் பெரிய தகப்பனுர் என்று குறிப்பிடப் பட்டிருக்கும் ஸங்கீத வித்வான்களான பெரியய்யா அவர்களையும் சின்னய்யா அவர்களையும் எனக்கு நன்ருக நினைவிருக்கிறது.

ஹரிகதா காலக்ஷேப கலைக்கோர் மார்க்கதரிசியாக விளங்கி 1903இல் காலஞ்சென்றவரும் எனது தகப்பனுர் தஞ்சாவூர் ஸ்ரீபஞ்சாபகேச பாகவதரவர்களுக்கு பரமாசாரியாளாயும் விளங்கின ஸ்ரீ தஞ்சாவூர் கிருஷ்ண பாகவதரவர் அவர்களின் ஸெட்டில் (ஜமாவில்) எனது தகப்பனுர் சுமார் 16 வருஷகாலம் பின் பாட்டாகப் பாடிவந்தார்.

தனது குரு அவர்கள் காலமான பிறகு 1903 முதல் 1920 இவரை எனது தகப்பனுர் காலக்ஷேபத் துறையில் பணியாற்றிப் பிரகாசித்து வந்தார். ஆரம்ப காலத்தில் அவருக்கு தகுந்த பின் பாட்டுக்காரர்கள் கிடைக்கவில்லை. அந்த சமயத்தில் ஸ்ரீ பெரியய்யா அவர்களும் ஸ்ரீ சின்னய்யா அவர்களும் என் தகப்பனுருக்கு சகாயமாய் அமர்ந்திருந்தார்கள். அந்த சமயம் நான் 10வயதுள்ள பையனுக இருந்தாலும் அவர்கள் இருவரையும் நான் இன்னும் மறக்க இயலாது. அந்த சமயம் சின்னய்யா அவர்கள் கதையில் மிருதங்கம் வாசித்திருக்கிருர். பெரியவர் பின்பாட்டாக இருந்து வந்தார். இந்த உயர்ந்த ஜமா வெகு காலம் நீடிக்கவில்லை. எனது தகப்பனுர் நோய் வாய்ப்பட்டு இரண்டு வருஷங்களுக்குப் பிறகு மறுபடியும் கதைசெய்ய ஆரம்பித்தார். இந்த இடைக்

காலத்தில் தான் ஊர் சென்ற சின்னய்யா அவர்கள் காலகதியடைந்தார் என்ற சோகச் செய்தி எட்டியது. இதனால் பெரியய்யா அவர்களும் மறுபடியும் தஞ்சைக்குத் திரும்பி வர சம்மதிக்கவில்லை. இந்த விவரங்களை வெகு வருஷங்களுக்குப் பிறகு நண்பர் மழவராய நேந்தல் சுப்பராம பாகவதரவர்களுடன் பேசிக் கொண்டிருக்கையில் அவர் ஊர்ஜிதம் செய்தார். ஆகவே சங்கீத உலகில் வித்வான்களான எவரும் ஸ்ரீ சுப்பராம பாகவதரவர்களைப் பற்றியோ சின்னய்யா பெரியய்யா அவர்களைப் பற்றியோ மறக்க இயலாது. ஆகவே உங்கள் கட்டுரையின் மூலம் நீங்கள் மேன்மையான ஸங்கீதப் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்பதை நான் அறிந்ததுடன் சின்னய்யா பெரியய்யா அவர்களைப் பற்றிய பற்பல சிந்தனைகளையும் கிளரி ஜ்வலி பெறச் செய்து அனுபவித்தேன். உங்களை நான் நேரில் பார்த்ததில்லை யானாலும் உங்கள் எழுத்துக்களின் மூலம் கண்டனுபவித்திருக்கிறேன். இன்று உங்கள் பூர்வீக வரலாறுகளையும் அறிந்தேன். நாம் இருவரும் இவ்வளவு நெருங்கியவர்கள் என்பதையும் உணர்ந்தேன். ஈசனருளால் நாம் நேரில் சந்திக்க நேரும் போது இன்னம் பற்பல விஷயங்களையும் அறிந்துகொள்ள வாய்ப்பு நேரலாம்.

உண்மையில் நாதானுஸந்தானம் செய்பவர்கள் முழுத் தேர்ச்சியை யடையும்போது அந்த நாத வெள்ளத்தின் ஒலியை தனக்குள் தானே அநுபவிக்கலாம் என்ற ஒரு கருத்தை காலஞ் சென்ற வீணை ஸ்ரீமதி தனம் அம்மாள் அவர்கள் அடிக்கடி சொல்வது வழக்கம். அந்தத் தத்வமும் உங்கள் கட்டுரையின் பிற்பகுதியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இன்று ஒரு நன்னாள்.

இங்ஙனம் தங்கள்,

பி. துரையப்ப பாகவதர்

17-8-61

X X X

ந. சிதம்பர சுப்ரமணியம்.

சாதாரணமாக முன்பு சங்கீதக் கச்சேரிகளில் பாடுவோர்கள் இன்று சதஸ் நன்றாக இருந்தது, அதனால் கச்சேரியும் நன்றாக இருந்தது. என்பார்கள். அதனால் சதஸுக்கு ஒரு முக்கியவத்துவம் உண்டு. ரேடியோ சங்கீதத்தில் இப்போது அந்த வாய்ப்பு இல்லை.

ஆனால் நமக்கு, எழுத்தாளர்களுக்கோ, அப்படி

வாய்ப்பே இல்லை. எங்கேயோ இருந்து எழுதுகிறோம். அதை எங்கோ இருந்துகொண்டு வாசகர்கள் ரசிக்கிறார்கள். இது எழுத்தாளனுக்கு ஒரு வசதிக் குறைவுதான்.

ஆனால் இதற்காக எழுத்தாளன் வாசகனைத் தேடிக் கொண்டு போய் எழுதிக் காட்ட முடியாது. பவ-பூதி என்ற கவிஞனும், நாடகாசிரியரும் "உலகம் மிகப் பெரியதாக இருக்கிறது. காலம் முடிவற்றதாக இருக்கிறது. இவ்வளவு பெரிய உலகத்தில் என்றைக்காவது யாராவது ஒருவனாவது இதை ரசிக்காமலா போய்விடப் போகிறான் என்று தான் இதை எழுதுகிறேன்" என்று கூறுகிறான். அதனால் என்றோ யாரோ ரசிக்கத்தான் போகிறார்கள். நமக்குத் தெரியாவிட்டாலும் இது நடக்கத்தான் போகிறது. அப்படியே இல்லாது போனாலும் நாமாவது நம் எழுத்தை ரசிக்கத்தான் செய்கிறோம்.

ஒரு கவியை ரசிப்பதற்கு இன்னொருவரும் கவியாக இருக்க வேண்டும் என்பார்கள். எந்த ஆழம் அல்லது உயரத்திற்கு அவன் போய் இருக்கிறானோ அந்த உயரத்திற்கும், ஆழத்திற்கும் போக முடிந்தால் தான் அதை ரசிக்கவே முடியும். லைட்-ஹவுஸ் மேலே இருந்து பார்த்துச் சொல்வதை அதன் அடியில் இருந்து கொண்டு புரிந்து கொள்ள முடியாது. இதைத் தான் 'ஸஹ்ருதயா' என்பார்கள். பக்தியைப் பற்றி நான் எழுதியதை யார்வேண்டுமானாலும் படிக்கலாம். ஆனால், அனுபவிக்க முடியாது. அதை அனுபவிக்க வேண்டும் என்றால் பக்தி செய்யவும் அவனுக்குத் தெரிந்திருக்க வேண்டும். எழுத்தாளனுக்கும் ரசிகனுக்குமிடையே இப்படி ஒரு மீட்டிங் கிரவுண்டு இருந்தாக வேண்டும். இல்லையென்றால் சந்திப்புக்கு இடமே இல்லை.

இவர்கள் எல்லாம் ஒரு அன்பால் ஆகர்ஷிக்கப்பட்டு மனதில் பட்டதை எனக்குச் சொல்ல வேண்டும் என்று எழுதியிருக்கிறார்கள். என்னை முகஸ்துதி பண்ணி அவர்களுக்கு ஆக வேண்டியது ஒன்றுமில்லை. இவர்களில் சிலர் இப்போது நல்ல புகமுடன் பரிட்சயமானவர்களாக இருந்தபோதிலும் இதை எழுதிய காலத்தில் எனக்கு ஒரு பரிட்சயமும் இல்லாதவர்களே.

இதுமாதிரி ரசித்து எழுதுவது ஒரு தூண்டுதல்தான். ஆனால் இது ஜனநாயக யுகம். நல்லதுக்கும் இப்படி எழுதப்படுகிறது. மட்டரகமானதுக்கும் இதைவிட அதிகப் பாராட்டுக்கள் கிடைக்கின்றன. பத்திரிகைகளிலும் எழுதப்படுகின்றன. அதனால்

விளம்பரம் கூச்சல் அதிகமாக இருக்கிறவைகளுக்கு அதிகமான மௌசு இருந்துகொண்டிருக்கிறது. இதனுல் எது நல்லது எது கெட்டது என்ற குழப்பத்தையும் உண்டு பண்ணி விடுகிறது.

சொல்பவர்களை வைத்துத்தான் இதற்குள்ளிருந்து நல்லதையும் கெட்டதையும் கணித்து அடையாளம் காண வேண்டியிருக்கிறது. ஒரு விஷயத்தை விநோபா சொல்வதற்கும் ஒரு மந்திரி சொல்வதற்கும் புரிந்துகொள்ளும் விலைவில் வித்தியாசம் உண்டு.

இப்போது இக்கடிதம் எழுதியவர்களுக்கு வருகிறேன். இவர்கள் எல்லாம் நன்கு படித்தவர்கள் (Equipped) நல்ல ரசிகர்கள். முதல் கடிதத்தை எழுதிய திரு வெங்கட்ராமன் இலக்கிய ருசி காரணமாகவே ஒரு பதிப்பகத்தையே நடத்தும் அளவுக்கு இன்று வந்திருப்பவர். இலக்கியத்தை நன்கு ரசிக்கத் தெரிந்தவர்.

இரண்டாவது கடிதம் எழுதிய சந்திரசேகரனைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். அவர் சிறந்த எழுத்தாளர்.

விமரிசனத்தைப் பற்றி அவரைப் போலச் சொல்லக்கூடியவர்கள் இல்லை. அவர் விமரிசித்துப் பேசினுல் அந்த ரசானுபாவத்தை இன்னும் கொஞ்சம் கேட்கமாட்டோமா என்றிருக்கும். அவர் வீட்டுக்கே 'ஸஹ்ருதயா' என்று பெயர் வைத்துக்கொண்டிருப்பவர். வால்மீகி, காளிதாசன், தாகூர் ஆகியோரின் இலக்கியத்தில் ஊறித் திளைத்தவர். சங்கீதத்தில் நல்ல பழுத்த ஞானம் உடையவர். இதனுல்தான் இதய நாதத்தின் உண்மையான தாத்பர்யத்தை அறிந்து அனுபவிக்க முடிந்திருக்கிறது.

'தீபம்' ஆசிரியராக நா. பார்த்தசாரதி இருக்கிருர். ஏராளமான புத்தகங்கள் எழுதியிருக்கிருர். என்னை விட நிறைய இப்போது எழுதியிருக்கிருர். சமீபத்தில் நானும் காந்தியுக நாவல் எழுதினேன். அவரும்கூட காந்தியுக நாவல் எழுதியிருக்கிருர்.

ஒரு கவிதான் இன்னொரு கவியைப் புரிந்து அனுபவிக்க முடியும் என்பதற்கு நா. பா. வின் இந்த ரசனைக் கடிதம் ஒரு உதாரணம். இவ்வளவு சிருஷ்டிகளையும் தன் கர்பத்தில் வைத்துக் கொண்டிருந்த ஒருவருக்கு அன்றே என் எழுத்தை ரசிக்க முடிந்திருக்கிறது.சொல்லப்போனுல் அதனுல்தான் முடிந்திருக்கிறது. எழுத்தாளனுக்கும் வாசகனுக்கும் இடையே உள்ள வேறுபாடு மிகவும் குறுகியது என்பதை இது காட்டுகிறது.

சுப. கோ. நாராயணசாமி

அவரே ஒரு எழுத்தாளர். நல்லது எங்கிருக்கிறது என்று தேடிப்பார்க்கும் பக்குவம் அவருக்கு 'இருக்கிறது. நல்லது என்று தோன்றுவதை சொல்லணும்கிற ஆர்வமும் இருக்கிறது. உலகத்தையே சேர வேண்டும் என்று நான் பார்க்கிறேன். ஆனால் அவருடைய ஆசையினால் என்னை இராமனுதபுரம் மாவட்டத்துக்குள் பிடித்து வைத்துக் கொள்ளப் பார்க்கிறார் அவர்.

துரையப்ப பாகவதர் ஒரு பெரிய கோட் வாத்ய வித்வான். அத்துடன் ஹரிகதை பண்ணுபவர். நன்றாகப் படித்தவர். பழைய நூல்களில் ஆழ்ந்த புலமை மிக்கவர். இவர் 'இதய நாதத்தை' படித்தாரோ படிக்க வில்லையோ அந்தக் கருவை, ஜீவஸ்தானத்தை நன்றாக அனுபவித்துப் புரிந்து கொண்டிருக்கிறார்.

என்னுடைய பெரிய தகப்பனாருடைய பிள்ளைகள் பெரியய்யா சின்னய்யா என்று இரண்டு பேர் இருந்தார்கள். அதில் சின்னய்யாவின் குரல் மிகவும் இனிமையாக இருந்ததாம். ஒரு சமயத்தில் அந்த பாக்கியத்தை இழக்கும்படி ஆகிவிட்டது. அது எங்கள் குடும்பத்துக்கு மிகப்பெரிய நஷ்டம் போலாகி விட்டது. அந்தக் குரல் இருந்திருந்தால் உலகத்திலேயே பெரிய பாடகராக இருந்திருப்பார் என்று சொல்வார்கள். அந்தக் குரலை இழந்த பிறகு மிருதங்க வித்வானாகப் பயின்று தேர்ந்தார், ஆனாலும் அவர் குரலை இழந்ததை ஒரு சோகக் கதையாகவே என் குடும்பத்தில் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். அந்த சோகம்தான் என் உள்ளத்தில் தைத்து இதய நாதத்தினுடைய மூலக் கருவை உருவாக்கியது.

அந்த எங்கள் குடும்ப வரலாறுகளைத்தான் இவர் குறிப்பிடுகிறார். இவர் இந்தக் கடிதம் எழுதிய சில மாதங்களுக்குப் பின் காலமாகி விட்டார்.

திரு. வெங்கட்ராமன் ஒரு ஹையர் ஸெகண்டரி ஸ்கூல் ஆசிரியர். ரிடயர்டு ஆனவர். High desciplinarian. பெரிய பெரிய ஆபீஸர்களை எல்லாம் உருவாக்கிய அனுபவம் மிக்கவர். இதெல்லாம் பின்னால் எனக்குத் தெரிய வந்த தகவல்கள். Character Building கல்வியில் மிக மிக அவசியம் என்று நினைப்பவர். அப்படிப்பட்டவர் என் எழுத்தை ரசித்திருக்கிறார் என்பது எனக்கு வாஸ்த்தவமாகவே பெருமைதான்.

இதை யார் யார் சொல்லியிருக்கிறார்கள் என்பதை நான் விளக்கியதற்கு காரணம் இதைச் சொல்ல இவர்

கள் தகுதியானவர்கள் என்பதைக் கூறத்தான். இலக்கியத்தை ரசிக்கத் தெரிந்த வாசகர்கள். பின்புள்ள வாசகர்கள். இவர்களைப் பற்றிச் சொல்லும் படியான ஒரு சந்தர்ப்பம் இப்போதுகிடைத்தது எனக்கு மிகவும் திருப்தியாக இருக்கிறது. எழுதியதற்கே இவர்களுக்கு நான் நன்றி கூறியிருக்க வேண்டும். இப்போது வெளிப்படையாக நன்றி சொல்லிக்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்தது எனக்கு திருப்தியாக இருக்கிறது.

பொதுவாக தமிழ் வாசகர்களின் கிரஹித்துக் கொள்ளும் நிலைபற்றி எனக்கு அவ்வளவாக திருப்தி இல்லை. லட்சக் கணக்காக பத்திரிகைகளை படிக்கும் அளவுக்கு வளர்ந்திருக்கிறார்கள் என்பது ஒரு திருப்தியான அம்ஸம் தான். ஆனால் இந்த லட்சக் கணக்கானவர்களில் ஒரு சதவிகிதமாவது தரமான வாசகர்களாக எதையும் புரிந்து படிக்கும் வாசகர்களாக உருவாகி விட்டால் போதும்.

அடுத்தபடியாக வாசகர்களிடையே உள்ள Hero Worship பற்றியது. இது நம் தேசத்துக்குரிய பரம்பரைச் சொத்து. 'We Can't help it, சினிமா அரசியல் இலக்கியம் கலைகள் அனைத்திலும் இது இருப்பதால் இலக்கியத்திலும் இருப்பதனால் ஒன்றும் குடி முழுகிப் போகப் போவதில்லை. எதற்கெடுத்தாலும் கு. ப. ரா. புதுமைப்பித்தன், என்று சொல்லிக் கொண்டிருப்பதும் கூட இது மாதிரி ஒரு 'Cult'தான் தனக்கு ஏதும் தெரியாதபோது ஒப்புக்கொள்ளப்பட்ட கேள்விப்பட்ட பெயர்களை திரும்ப ஒப்புவித்து சொல்ல நினைப்பதாலேயே இப்படி நேருகிறது. அதனாலே தான் தமிழ் இலக்கியத்தைப் பற்றியே தெரியாதவர்கள் கூட கு. ப. ரா, புதுமைப்பித்தன் பேர்களைக் கூறுகிறார்கள்.

தமிழ் வாசகர்களிடம் புத்தகம் வாங்குவதற்கென்று பணம் செலவிடும் பழக்கம் இல்லாமல் போனது ஒரு துரதிர்ஷ்டம்தான். சினிமாவுக்கு மாதம் 25 ரூ. செலவிடுகிறார்கள். ஐந்து ரூபாய் கொடுத்து தீபாவளி மலர் என்று போட்டால் கூட வாங்குகிறார்கள் ஆனால் வருடத்திற்கு ஐந்து ரூபாய்க்குக்கூட புத்தகம் வாங்க மாட்டேன் என்கிறார்கள். இதுவும் தமிழ் இலக்கிய உலகத்தை பிடித்துள்ள துரதிர்ஷ்டம்தான். ★

அடுத்த இதழில்

புகழ் பெற்ற படைப்பாளிகளின் சிய தரிசனம் துவங்குகிறது

குக்ஞுஞ்ல

சில வார்த்தைகள் :

சென்ற நூற்றுண்டில் தமிழிலே ஒரு பெரிய அதிசயம் நடந்திருக்கிறது. ஆரவாரமில்லாமல், தாரை தப்பட்டைகள் இல்லாமல், தமிழ்த் தாயே! ஓ, தமிழ்த் தாயே! என்று மாரடித்துக் கொண்டு சன்னதம் வந்தமாதிரி கூப்பாடு போடாமல் மௌனமாக அந்த அதிசயம் நடந்துவிட்டது.

நானும் பார்க்கிறேன்; நம்மவர்கள் தமிழை வளர்த்த குற்றத்திற்காக தொல்காப்பியன் கழுத்தில் துண்டுபோட்டு இழுத்து வந்து அடிக்கடி அவனை ஆஜர் பண்ணுகிருர்கள். அங்கு பிடித்து சங்கத்தில் வந்து நின்று ஆஹா தமிழ், ஓஹோ தமிழ் என்று சிலம்ப விளையாட்டுக் காரனைப் போல எட்டு வீடு கட்டி ஆடிவிட்டு அங்கிருந்து ஒரு லாங்ஜம்ப். திரு.வி.க., மறைமலை அடிகள் என்று ஆளாளுக்கு ஒரு லட்சார்ச்சனை. அவ்வளவுதான். விழா முடிந்தது. தமிழை வளர்த்தாகிவிட்டது. தமிழ் வாழ்க என்று ஆயாசமாகப் பெருமூச்சு விடுகிருர்கள்.

எல்லாம் ரொம்பச்சரி. இன்றைக்கு எழுதுகிருேமே தமிழ் வசனம், அது எப்படி திடீரென்று முளைத்தது? அதை யோசித்தோமா? அதற்குக் கூட பரிமேலழகர், மணக்குடவர், மறைமலை அடிகள், திரு. வி. க. என்று சகலைக் காச் சிங்கங்களான நமது பண்டிதர்களும், மாடர்ன் பண்டிதர்களும் ரெபரன்ஸ் கொடுக்கக் கூடும்.

பைபிள்

ஆனுல் தமிழின் ஜீவவேகம், இந்த பாஷையின் தூரத்து சங்கீதம் போன்ற நினைவுகளை எழுப்பும் சக்தி, காதலனின் குழைவுபோல் நெஞ்சை லாவும் மோகனம், போர் முரசம் போன்று ஆணித்தரமாகக் கட்டளையிடும் ஆக்ஞை, நுட்பமான சித்திரங்களைப் பதிந்து தரும் கலைத்திறன் இவைகளை இங்கே மதத்தைப் பரப்ப வந்த பாதிரிமார்கள் புரிந்து கொண்டிருப்பது நம்மை பிரமிக்க வைக்கிறது.

பைபிளைத் தமிழில் மொழிபெயர்த்து நம் பாஷைக்கு எவ்வளவு சக்தி இருக்கிறது என்று அவர்கள் நிரூபித்துக் காட்டியிருக்கிருர்கள். நமது முறுக்கேறிய தமிழ் வெறி அந்தப்பாதிரி மார்களுக்கு என்னவாவது நன்றி செலுத்தியிருக்கிறதா என்று பார்த்தால் எனக்குத் தெரிந்தவரை அப்

படி ஒன்றும் காணோம்.

ஆழமாகவும் நிதானமாகவும் யோசித்துப் பார்த்தால் பாதிரிமார்கள் கல்வியைக் கொடுத்த மாதிரி, ஆஸ்பத்திரியைத் திறந்த மாதிரி, தமிழுக்கு ஜீவன் மிக்க வசனத்தையும் பெற்றுத் தந்திருக்கிறார்கள் என்பதை மறுக்க முடியாது. இங்கே தொகுக்கப் பட்டுள்ளவை இரண்டு அதிகாரங்களிலிருந்து திரட்டிய சாம்பிள்கள். எழுதுவது என்று ஆரம்பித்து தலையை நுழைத்துப் பார்த்தால் பைபிளின் மொத்தப் பக்கங்களையும் புரட்டி தமிழ் வசனத்தில் அவர்கள் செய்திருக்கிற தட்டார வேலை குறித்து ஒரு தீஸிஸ் அளவுக்கு சங்கதி இருக்கிறது.

நமக்கேன் அந்த விவகாரம்! நமது பாஷையின் சுகந்தத்தையும், மின் வீச்சையும், நெஞ்சை நனைக்கின்ற தித்திப்பையும் ஒரு ரசிகன் போல், ஒரு பார்வையாளன் போல் நாம் அனுப்பவிப்போம்.

உங்கள் மனப்பக்குவத்தின் போக்கிற்குக் குறுக்கே நான் நிற்க விரும்பாததால் பற்றி இலக்கிய பஜனை கோஷ்டிக்கு அத்தியாவசியமான பூதக் கண்ணாடி, மைக்ராஸ்கோப்பு, தராசுத் தட்டு, ஆசாரியின் உரைகல் இவைகளைப் பத்திரமாக முட்டை கட்டி வைத்து விட்டு வெறுமனே உங்களுக்கு இதை அறிமுகம் செய்து வைக்கிறேன்,

பிரசங்கி

(பழைய ஏற்பாட்டில் ஞானியாகிய சாலமோன் சொன்னாற் போல் எழுதப்பட்டது)

...ஒரு சந்ததி போகிறது. மறு சந்ததி வருகிறது; பூமியோ என்றைக்கும் நிலைத்து நிற்கிறது.

...முன் இருந்ததே இனிமேலும் இருக்கும்; முன் செய்யப்பட்டதே பின்னும் செய்யப்படும்; சூரியனுக்குக் கீழே நூதனமானது ஒன்றுமில்லை.

...எல்லா நதிகளும் சமுத்திரத்திலே ஓடி விழுந்தாலும்.

தொகுத்தவர்

வையவன்

சமுத்திரம் நிரம்பாது; தாங்கள் உற்பத்தியான இடத்திற்கே நதிகள் மறுபடியும் திரும்பும்.

...எல்லாம் வருத்தத்தினால் நிறைந்திருக்கிறது. அது மனுஷரால் சொல்லி முடியாது; காண்கிறதினால் கண் திருப்தியாகிறதில்லை, கேட்கிறதினால் செவி நிறப்பப்படுகிறதில்லை.

...என் கண்கள் இச்சித்தவைகளில் ஒன்றையும் நான்

அவைகளுக்குத் தடை பண்ணவில்லை; என் இருதயத்துக்கு ஒரு சந்தோஷத்தையும் நான் வேண்டாமென்று விலக்கவில்லை; நான் செய்த முயற்சிகளிலெல்லாம் மனம் மகிழ்ச்சி கொண்டிருந்தது; இதுவே என் பிரயாசங்கள் எல்லாவற்றிலும் எனக்கு வந்த பலன்.

...மனுஷன் சூரியனுக்குக் கீழே படுகிற எல்லாப் பிரயாசத்திலும் அவனுடைய இருதயத்தின் எண்ணங்களிலும் அவனுக்குப் பலன் என்ன?

...மனுஷன் புசித்துக் குடித்து, தன் பிரயாசத்தின் பலனை அனுபவிப்பதைப் பார்க்கிலும் அவனுக்கு ஒரு நன்மையும் இல்லை; இதுவும் தேவனுடைய கரத்திலிருந்து வருகிறது என்று நான் கண்டேன்.

.... மகிழ்ச்சியாயிருப்பதும், உயிரோடிருக்கையில் நன்மை செய்வதுமேயல்லாமல், வேறொரு நன்மையும் மனுஷனுக்கு இல்லையென்று அறிந்தேன்.

...எல்லாம் ஒரே இடத்துக்குப் போகிறது; எல்லாம் மண்ணிலே உண்டாகிறது. எல்லாம் மண்ணுக்குத் திரும்புகிறது.

... உயர ஏறும் மனுஷனுடைய ஆவியையும் தாழப் பூமியிலிறங்கும் மிருகங்களுடைய ஆவியையும் அறிகிறவன் யார்?

... அரசாளச் சிறையிலிருந்து புறப்படுவாருமுண்டு; ராஜாங்கத்தில் பிறந்து ஏழையாவருமுண்டு.

... பணப்பிரியன் பணத்தினால் திருப்தி யடைவதில்லை; செல்வப் பிரியன் செல்வப் பெருக்கினால் திருப்தியடைவதில்லை; இதுவும் மாயையே.

.. சூரியனுக்குக் கீழே நான் கண்ட வேறொரு கொடிய தீங்குமுண்டு; அதாவது ஐசுவரியமானது அதை உடையவர்களுக்கே கேடுண்டாகும்படி சேகரித்து வைக்கப்படுவதாம்.

... ஒருவன் நூறு பிள்ளைகளைப் பெற்று அநேகம் வருஷம் ஜீவித்து, தீர்க்காயுசை அடைந்திருந்தாலும், அவன் ஆத்துமா அந்தச் செல்வத்தால் திருப்தியடையாமலும், அவனுக்குப் பிரேதக் கல்லறை முதலாய் இல்லாமலும் போகுமானால், அவனைப் பார்க்கிலும் கருவழிந்த பிண்டம் வாசி (மேலானது) என்கிறேன்.

அது சூரியனைக் கண்டதுமில்லை; ஒன்றையும் அறிந்ததுமில்லை; அவனுக்கு இல்லாத அமைச்சல் அதற்கு உண்டு.

... வாழ்வு காலத்திலே நன்மையை அனுபவித்திரு, தாழ்வு காலத்திலே சிந்தனை செய்; மனுஷன் தனக்குப்பின் வருவ

தொன்றயும் கண்டு பிடியாத படிக்கு தேவன் இவ்விரண்டையும் ஒன்றுக்கொன்று எதிரிடையாக வைத்திருக்கிறார்.

... ஆவியை விடாதிருக்கிறதற்கு ஆவியின்மேல் ஒரு மனுஷனுக்கும் அதிகாரமில்லை; மரண நாளின் மேலும் அவனுக்கு அதிகாரமில்லை, அந்தப் போருக்கு நீங்கிப் போவதுமில்லை, துன்மார்க்கரை துன்மார்க்கம் விடுவிக்க மாட்டாது.

... மூடரை ஆளும் அதிபதியின் கூக்குரலைப் பார்க்கிலும் ஞானிகளுடைய அமரிக்கையான வார்த்தைகளே கேட்கப்படத்தக்கவைகள்.

... செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமளத்தை நாறிக் கெட்டுப் போகப் பண்ணும்; ஞானத்திலும் கனத்திலும் பேர் பெற்றவனைச் சொற்ப மதியீனமும் அப்படியே செய்யும்.

... மூடன் தன் சதையைத் தானே தின்கிறான்.

... வாலிபனே, உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவை யெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி.

...இப்படியிருக்கிறபடியால் மனுஷன் தன் செய்கைகளில் மகிழ்ச்சியாயிருக்கும் நன்மையையே யல்லாமல், வேறே நன்மை இல்லையென்று கண்டேன்; இதுவே அவன் பங்கு; தனக்குப் பின் வரும் காரியங்களைக் காணும்படிக்கு அவனைத் திரும்பிவரப் பண்ணுகிறவன் யார்?

சாலொமோனின் உன்னதப் பாட்டு

...நான் சாரோனின் ரோஜாவும், பள்ளத்தாக்குகளின் லீலி புஷ்பமுமாயிருக்கிறேன்.

... காட்டு மரங்களுக்குள்ளே கிச்சிலிமரம் எப்படியிருக்கிறதோ, அப்படியே குமாரருக்குள்ளே என் நேசர் இருக்கிறார்; அதன் கனி என் வாய்க்கு மதுரமாயிருக்கிறது.

...என்னை விருந்து சாலைக்கு அழைத்துக்கொண்டு போனார்; என்மேல் பறந்த அவருடைய கொடி நேசமே.

.. திராட்சரசத்தால்என்னைத் தேற்றுங்கள். கிச்சிலிப் பழங்களால் என்னை ஆற்றுங்கள்; நேசத்தால் சோகமடைந்திருக்கிறேன்.

...இதோ மாரிக் காலம் சென்றது. மழை பெய்து ஒழிந்தது. பூமியிலே புஷ்பங்கள் காணப்படுகிறது; குருவிகள் பாடுங்காலம் வந்தது, காட்டுப் புறாவின் சத்தம் நமது தேசத்தில் கேட்கப்படுகிறது.

...என் நேசரே பகல்

குளிர்ச்சியாகி, நிழல் சாய்ந்து போகும் வரைக்கும், நீர் திரும்பி, குன்றும் பிளப்புமான கன்மலைகளில் குதித்து வரும் கலைமானுக்கும் மரைகளின் குட்டிக்கும் சமானமாயிரும்.

... நீ ரூபவதி, என் பிரியமே! நீ ரூபவதி, உன் முக்காட்டின் நடுவே உன் கண்கள் புறாக் கண்களாயிருக்கிறது; உன் கூந்தல் கீலேயாத் மலையில் தழைமேயும் வெள்ளாட்டு மந்தையைப் போலிருக்கிறது.

... உன் உதடுகள் சிவப்பு நூலுக்குச் சமானமும், உன் வாக்கு இன்பமுமாயிருக்கிறது; உன் முக்காட்டின் நடுவே உன் கன்னங்கள் வெடித்த மாதளம்பழம் போலிருக்கிறது.

... உன் கழுத்து, பராக்கிரமசாலிகளின் கேடகங்களாகிய ஆயிரம் பரிசைகள் தூக்கியிருக்கிற ஆயுத சாலையாகக் கட்டப்பட்ட தாவீதின் கோபுரம் போலிருக்கிறது.

... உன் இரண்டு ஸ்தனங்களும் லீலி புஷ்பங்களில் மேயும் வெளிமானின் இரட்டைக் குட்டிகளுக்குச் சமானம்.

... வாடையே! எழும்பு; தென்றலே! வா; கந்தப்பிசின்கள் வடிய என் தோட்டத்தில் வீசு; என் நேசர் தம்முடைய தோட்டத்துக்கு வந்து, தமது அருமையான கனிகளைப் புசிப்பாராக.

... நான் நித்திரை பண்ணினேன், என் இதயமோ விழித்திருந்தது; கதவைத் தட்டுகிற என் நேசரின் சத்தத்தைக் கேட்டேன்; என் சகோதரியே! என் பிரியமே! என் புறாவே! என் உத்தமியே! கதவைத் திற; என் தலை பனியினாலும், தலைமயிர் இரவில் பெய்யும் தூறலினாலும் நனைந்திருக்கிறது என்றார்.

... ராஜ குமாரத்தியே! பாதரட்சைகளிட்ட உன் பாதங்கள் மிகவும் அழகாயிருக்கிறது. உன் இடுப்பின் வடிவு விசித்திரத் தொழிற்காரரின் வேலையாகிய பூஷணம் போலிருக்கிறது.

... உன் நாபி திராட்ச ரசம் நிறைந்த வட்டக் கவசம் போலிருக்கிறது; உன் வயிறு லீலி புஷ்பங்கள் சூழ்ந்த கோதுமை அம்பாரம் போலிருக்கிறது.

... உன் உயரம் பனைமரத் தொழுங்கு போலவும், உன் ஸ்தனங்கள் திராட்சைக் குலைகள் போலவும் இருக்கிறது.

... உன் தொண்டை என் நேசர் குடிக்கையில் மெதுவாயிறங்குகிறதும், உறங்குகிறவர்களின் உதடுகளைப் பேசப் பண்ணுகிறதுமான, நல்ல திராட்ச ரசத்தைப் போலிருக்கிறது.

... நீர் என்னை உமது இருதயத்தின் மேல் முத்திரையை போலவும் உமது புயத்தின்

மேல், முத்திரையைப்போல் வைத்துக்கொள்ளும்; நேசம் மரணத்தைப்போல் வலிது; நேச வைராக்கியம் பாதாளத்தைப் போல் கொடிதாயிருக்கிறது; அதன் தழல் அக்கினித் தழலும் அதின் ஜ்வாலை கடும் ஜ்வாலையுமாயிருக்கிறது.

... திரளான தண்ணீர்கள் நேசத்தை அவிக்கமாட்டாது; வெள்ளங்களும் அதைத் தணிக்க மாட்டாது, ஒருவன் தன் வீட்டிலுள்ள ஆஸ்திகளையெல்லாம் நேசத்துக்காகக் கொடுத்தாலும், அது முற்றிலும் அசட்டை பண்ணப்படும்.

... இது என் நேசருடைய சத்தம்! இதோ, அவர் மலைகள் மேல் குதித்தும் மேடுகளின் மேல் துள்ளியும் வருகிறார்.

... என் ஆத்தும நேசரே! உமது மந்தையை எங்கே மேய்த்து, அதை மத்தியானத்தில் எங்கே மடக்குகிறீர்? எனக்குச் சொல்லும்; உமது தோழரின் மந்தைகள் அருகே அலைந்து திரிகின்றவளைப் போல் நான் இருக்க வேண்டியதென்ன?

... நீர் ரூபமுள்ளவர்; என் நேசரே! இன்பமானவர் நம்முடைய மஞ்சம் பசுமையானது.

நம்முடைய வீட்டின் உத்திரங்கள் கேதுரு மரம்; நம்முடைய மச்சு தேவதாரு மரம்.

———

மூன்று கோணங்கள்

எந்த இலக்கிய முயற்சியிலும் நாம் மூன்று விஷயங்களைக் கவனிக்க வேண்டும் மிகவும் முக்கியமானது ஆசிரியன் சொல்வதற்கு என்ன வைத்திருக்கிறான் என்பது. அதற்கு அடுத்தது அவனது விஷயத்தின் மீது அவனுக்கிருக்கின்ற நெகிழ்ச்சியான பற்று, கடைசியாக 'டெக்னிக்'. முன் கூறிய இரண்டிலும் ஒருங்கிணைந்த உடன்பாடு இருந்தால்தான் உண்மையான கலைப் படைப்பு சாத்தியம். அந்த இரண்டும் இருந்தால் டெக்னிக் என்பது தானாக வந்துவிடும்.

—டால்ஸ் டாய்.

எங்கோ—யாரோ—யாருக்காகவோ...

நானும் நண்பரும் 'பா'ரில் — கவ்ண்ட்டருக்கு அருகே போடப்பட்டிருந்த உயரமான முக்காலிகளில் ஏறி உட்கார்ந்து பீர் குடித்துக்கொண்டிருந்தோம். காலையிலிருந்து இதுவரை ஆளுக்கு மூன்று பாட்டில் பீர் குடித்திருக்கிறோம். கொஞ்சம் வெயிலில் போய் நின்று எதிரேயுள்ள சமுத்திரத்தை வேடிக்கைப் பார்ப்பது; வந்து பீர் குடிப்பது - இப்படியே இந்த கோடை வெப்பத்தைக் குதூகலமாய்ப் பயன்படுத்திக் கொள்ளத் திட்டம். நண்பருக்கு ஒன்றுக்குப் போக வேண்டும் போல் இருக்கிறது. பீர் குடித்தாலே இப்படித்தான். சிரமப்பட்டு ஸ்டூலிலிருந்து இறங்கிப் பின்புறம் செல்கிறார். ஷூஸ் அணிந்த எங்கள் பாதங்கள் தரைக்கு மேலே இரண்டடி உயரத்தில் தொங்கத் தகுந்த உயரம் அந்த ஸ்டூல்களுக்கு. அவர் போன பின் நான் சுற்றும்-முற்றும் பார்க்கிறேன். எங்கள் எதிரே பார்வெண்டருக்குப் பின்னால் முதுகுப்புறத்தில் வரிசை வரிசையாக வெளிநாட்டுத் தயாரிப்பும், உள்நாட்டு வடிப்புகளுமான வகை வகையான மது கலசங்கள் வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

மத்தியான நேரம். பன்னிரண்டு மணி இருக்கும். நல்ல வெயில். கோடை 'பா'ரில் அதிகக் கூட்டம் இல்லை. ஒரு மூலையில் இரண்டு பச்சை நிறப் பிரம்பு நாற்காலிகளில் உட்கார்ந்து ஒரு வெள்ளைக்காரனும் வெள்ளைக்காரியும் நுரை வழிகிற பீர் தம்ளர்களை வேடிக்கை பார்த்துக்கொண்டு மெதுவான குரலில் சம்பாஷித்துக்கொண்டிருந்தனர். பிரெஞ்சுக்காரர்களோ, பிரிட்டிஷ்காரர்களோ, அமெரிக்கர்களோ, ரஷ்யர்களோ-ஒன்றும் தெரியவில்லை. இருவருமே தொடைக்குப் பாதியளவு நெருக்கிப் பிடித்த அரைக்கால் சட்டை அணிந்திருந்தனர். இங்கே

ஜெயகாந்தன்

இருந்து பார்க்கிறபோது எங்களுக்கு அவள்தான் நேரே தெரிந்தாள். அவனுடைய முதுகுப் புறமும் கால்மேல் கால் போட்டு வலதுபுறம் நீண்ட இடது பாதமும் தெரிந்தது. காலில் ஒரு சாதாரண செருப்பு. அவளுக்கு உடம்பு அளவு பருமன் ஒவ்வொரு தொடையும். ஒரு வேளை உட்கார்ந்திருக்கும் நிலையில் அப்படி தெரிந்ததோ என்னவோ! கழுத்தில் வைலட் கலரில் ஒரு குறத்தி மாலை, கறுப்பு நிறத்தில் அவள் அணிந்திருந்த கால் சட்டையில் பிதுங்கிக் கொண்டு தெரியும் தொடைச் சதையையே நான் பார்த்துக் கொண்டிருந்தேன். அவள் கறுப்புக் கண்ணாடியைக் கழற்றவில்லை. அதனால் அவள் என்னைப் பார்க்கிருளா என்று நான் கவனிக்க வேயில்லை. எதற்கு நான் இவர்களை இப்படி முறைத்துக் கொண்டிருக்கிறேன் என்று என்னையே மனத்துள் கண்டித்துக்கொண்டு 'டக்'கென்று வேறுபுறம் திரும்பி வெளியே பார்த்தேன்.

வெளியே சாலையின் மறுபுறம் கடல் கொந்தளிக்கிற சப்தம். நீல ஆகாசம் தெரிந்தது. காற்று வீசுகையில் சற்று வெப்பம் அசைந்து கலைகிறது. எனக்குப் பின்னுல் திடீரெனச் சிரிக்கும் அந்த வெள்ளைக்காரியின் பெண்மை குலுக்கல்கேட்டது. என்னைப் பற்றித் தான் எதுவும் சொல்லிச் சிரிக்கிருளோ என்று நினைத்துக் கொண்டேன். சிரிக்கட்டுமே.

வெளியில் ஜன்னலுக்கு நேரே எங்கள் கார் வெகு நேரமாய் வெயிலில் பழுக்கக் காய்ந்து கொண்டிருந்தது. அதன் நிக்கல் பிளேட்டில் பட்ட வெளிச்சம் 'டால்' அடித்து முகத்தில் பட்டுக் கண்களைக் கூசச் செய்ததால் நான் சற்று நகர்ந்தேன். அப்போது கார் ஓரத்தில் சிவப்புப் புடவையின் முந்தானை காற்றில் பறக்கக் கண்டு எழுந்து வந்து வெளியே பார்த்தேன்.

சுவரோரமாக இருந்த அரை அடி நிழலில் ஒதுங்கி நின்று அவள் வேர்க்கடலை கொறித்துக்கொண்டிருந்தாள். தரையில் – சிமண்ட் பிளாட்பாரத்தில் கிடந்த ஒரு சுண்ணும்புக் காரைக் கட்டியை வலது காலின் பெரு விரலால் அழுத்தி நொறுக்கி விரலாலேயே ஒரு சதுரம் வரைந்து அதன் நடுவே ஒரு பெருக்கல் குறி வரைந்து மீண்டும் மீண்டும் அதன்மேல் கால் பெருவிரலால் வரைந்தவாறு நின்றிருந்தாள். நான் அவளைப் பார்ப்பதைக் கூட அவள் கவனிக்கவில்லை. நான் அவளை நன்ருகப் பார்த்தேன். எடுத்த எடுப்பில் அவள் ஒரு கூலிக்காரியாகவோ, அல்லது

தலைச் சுமையாகக் கூடையில் ஏதேனும் கொண்டு வந்து தெருவில் கூவி விற்பார்களே அதுமாதிரி ஏதோ ஒரு தொழில் செய்கிறவளாகவோ அவளை நினைக்க அது மரதியானவர்களின் நினைவு எனக்கு வந்தது. கறுப்பாக இருந்தாள். குள்ளம் நல்ல பதினெட்டுக்கு மேலே இருபத்திரண்டுக்குள் ஏதோ ஒரு வயது...அவள் கண்கள் எங்கோ சோம்பலுடன் வெறித்த வாறிருந்தன. அவள் விரலரல் நிமிண்டி நிமிண்டித் தள்ளிய வேர்க்கடலையின் தோல் காற்றில் பறந்து வந்தது.

'இவள் ஒரு தொழில் காரியாக இருப்பாளோ?' என்று பீர் போதையில் வசதியாக யோசித்தேன்.

அப்போது பாத் ரூமுக்குப் போயிருந்த நண்பரும் வந்து என் பின்னால் நின்று என் பார்வை வழியே அவளைப் பார்த்து,

''என்ன 'ஸனகோட்டா'?'' என்று கேட்டார். இந்த வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்று உலகத்துப் பாஷைகளில் எல்லாம் தேடினாலும் கிடைக்காது. என்னை அந்தரங்கமாகத் தெரிந்த எனது அத்யந்த நண்பர்களுடன் பகிரங்கமாக எங்கே வேண்டுமானாலும் உரையாடுவதற்காக நானே கண்டுபிடித்த பாஷை இது. வார்த்தையை உச்சரிக்க வேண்டிய முறை: 'ஸன GOTE ஆ' வினா: இதற்குப் பொருள், இடத்திற்கேற்ப மாறிவரும். இது மாதிரி சந்தர்ப்பங்களில் இதற்குப் பொருள்: 'பிராஸ்ட்டிட்யூட்டா?' என்பது.

''ஐ ஆம் நாட் ஷ்யூர்'' என்று சொல்லி விட்டு நான் மறுபடியும் கவுண்ட்டர் ஸ்டூலுக்கு வந்து ஏறி உட்கார்ந்து கொண்டு பீர் தம்ளரில் ஒரு 'ஸிப்' பண்ணினேன். தம்ளரில் நுரை அடங்கி இருந்தது. பக்கத்தில் பாட்டிலில் மீதி இருந்த பீரை எடுத்து பார்வெண்டர் என் கிளாஸில் ஊற்றினான். நண்பர் ஒரு சிகரட்டை எடுத்துப் பற்றவைத்துக்கொள்ளும் முன்னர் என்னிடமும் நீட்டினார். நான் பொதுவாக சிகரட் பிடிப்பதில்லை. குடிக்கிறதும் இல்லை. குடித்தால் குடிக்கிறபோது சிகரட் பிடிக்கிறதும் உண்டு. இதுமாதிரி முகமறியாத ஓர் ஊரில் வந்து ஓய்வாக சில நாட்களை இஷ்டப்படியெல்லாம் கழிப்பது என்கிற தீர்மானத்தில் பை நிறைய பணத்தையும் நிரப்பிக்கொண்டு வந்திருக்கும் போது என்ன செய்தால்தான் என்ன? இதில் எல்லாம் ஏற்படுகிற 'எக்ஸைட்மென்ட்' தானே இன்பம்? ஒரு சிகரட்டை நானும் பற்றவைத்துக் கொண்டேன்.

நண்பர் பாத் ரூமுக்குப்

போவதற்கு முன்னால் என்னிடம் சொல்லிக் கொண்டிருந்த அவரது அமெரிக்க வாழ்க்கை அநுபவங்களைத் தொடர்ந்து சொல்ல ஆரம்பித்தார். என் கவனமெல்லால் ஜன்னலுக்கு வெளியே காற்றில் பறக்கும் சிவப்புப் புடவையிலும், எங்கள்காரில் தெரிகிற அவளது விசித்திரமான பிம்பத்திலும் தான். நண்பர் அமெரிக்க நினைவுகளில் ஆழ்ந்து போயிருந்தார்.

அவர் அமெரிக்காவில் தனக்கிருந்த ஒரு நீக்ரோ சிநேகிதியைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். சிகாகோ நகரிலும், வேறு பல தென்மாநிலங்களிலுள்ள நிற வேற்றுமையின் கண்மூடித் தனத்தைப் பற்றி மிகவும் உணர்ச்சி வசப்பட்டுச் சொல்லிக் கொண்டிருந்தார். முதன் முதலில் இவர் போய் அமெரிக்காவில் காலூன்றியவுடனே தனக்கு ஏற்பட்ட 'வரவேற்பு' குறித்து அவர் கூறிய போது கண்கலங்கிப் போனார் நண்பர்.

சிகாகே நகரில் அமைதியா பார்க்கை ஒட்டிய அழகான பெரிய சாலையாம். அப்போது பனிக் காலம். ஆளரவமற்ற அமைதியான நெடிய சாலையில் ஆங்காங்கே ஜோடி ஜோடியாகவும் தனித்தும் ஒரு சிலர் மெதுவாக நடந்து கொண்டிருக்கின்றனர். மேலங்கிகளையும் குல்லாய்களையும் வைத்து மனிதர்களை அடையாளம் காண முடியவில்லையாம்.

எதிரே ஓர் இளம் அமெரிக்க மாதும் அவள் கையைப் பற்றிக் கொண்டு இரண்டரை அல்லது மூன்றுவயதுச் சிறுமியும் வருகிறார்களாம். அந்தக் குழந்தை பணிக்குல்லாயும் ஃபர் உடையும் அணிந்து, நீலக் கண்களை உருட்டி உருட்டிப் பார்த்தவாறு வருவது நண்பரை அதனிடம் மண்டியிட வைத்ததாம். குனிந்து 'குட்மார்னிங்...' என்று வாழ்த்தினாராம்.

பதிலுக்கு அந்தக் குழந்தை 'தூ' வென்று தூப்பி விட்டு வேறு புறம் திரும்பி நடந்ததாம். அந்தத்தாயும் அதற்காகக் குழந்தையைத் திருத்தவோ, அவரிடம் மன்னிப்புக் கேட்கவோ கூட இல்லையாம்.

"பல சமயங்களில் நான் ஒரு நீக்ரோ என்று கருதப் பட்டேன். நான் நீக்ரோ, அல்ல என்று மறுத்து ஓர் இந் இந்தியனுக்குரிய மரியாதையைக் கேட்டுப் பெற்றுக் கொள்ள நான் விரும்பவில்லை. நான் நீக்ரோக்களுடனே நெருக்கமாகப் பழகினேன். அவர்களைப் போன்ற உயர்ந்த ஜாதி மனிதர்கள் கிடையாது. நான் ஒரு நீக்ரோவாக மதிக்கப்பட்டதால் பெருமையும் கொள்ள ஆரம்பித்தேன்..."

என்று ஆங்கிலத்தில் என் காதில் மட்டும் விழுகிறமாதிரி மிகவும் உணர்ச்சி வசத்தோடு கூறினார் நண்பர்.

என் பார்வை ஜன்னலுக்கு வெளியே காற்றில் பறக்கும் சிவப்புப் புடவையில்...

நண்பர் ஓர் அமெரிக்கனின் கண்களுக்கு நீக்ரோ மாதிரித் தோன்றினால் ஆச்சரியப் படுவதற்கில்லை. இந்திய—தமிழ் நாட்டுத் தரத்தில் அவர் கறுப்பு அல்ல. மாநிறம்தான். மாநிறமான, இந்தியத்தரச் சிவப்பு நிறமான நீக்ரோக்களும் உண்டாம். இவர் கிராப்பு மிகவும் குறுகத் தரித்துச் சுருட்டையானதாகவும் இருக்கும். ஒரு அமெரிக்க நீக்ரோ என்று நினைத்துக் கொண்டு பார்க்கையில் என் கண்களுக்கு இவர் இப்போது ஒரு நீக்ரோ மாதிரித்தான் தோன்றுகிறார்.

"ஸ்டேட்ஸில் நான் இருந்த பத்து வருஷங்களில் எத்தனையோ அமெரிக்க இளைஞர்களோடும் குடும்பத்தினரோடும் பெண்களோடும் பழகி இருக்கிறேன். என்றாலும் எனக்குப் பிடித்தவர்கள், என் மனதைக் கொள்ளை கொண்டவர்கள் நீக்ரோப் பெண்கள் தான்-எனக்குச் கறுப்பிகளைத் தான் பிடிக்கிறது..." என்றார் நண்பர்.

நண்பருக்குத் தமிழில் பேச வராது. தங்கு தடையின்றிப் பேசுவதற்கு அவரால் இங்லீஷில்தான் முடியும்.

"வெளியில் நிற்கிறாளே, அந்தக் கறுப்பியை உங்களுக்குப் பிடிக்கிறதா?" என்று கேட்டேன் நான்.

நண்பர் சிரித்தார்: 'இப்பல்லாம் நோ ஸெலக்ஷன்ஸ்? இதென்னஸ்டேட்ஸா? கெடை கெடைக்கிறதே அபூர்வம். இதிலே தேர்வு என்ன? எனிதிங்! டார்க், பிரவுண், யெல்லோ, வய்ட் ஒண்ணும் வித்தியாசம் பார்க்கறதல்லே. ஆனா கெடைக்கறதுதான் கஷ்டமா இருக்கு... நம் தேசத்திலே இது ரொம்ப பெரிய சிக்கலாகத்தான் இருக்கு. நான் ஒரு பெண்ணோட படுத்துக்கறதைப் பற்றிச் சொல்லலே. பேசறது கூட இங்கே பெரிய விஷயம். ஒரு ஆண் குடிக்கறதே ஒரு குற்றம். பெண் குடிக்கிறது பாவமும் குற்றமும்...ரெண்டு பேரும் சேர்ந்து குடிச்சுப் பேசறதை இங்கே யாரும் கற்பனை கூடப் பண்ண முடியாது...'

நண்பர் கலியாணமாகாதவர். நாற்பதைக் கடந்தவர். முப்பது வயதிலிருந்து நாற்பது வயது வரை பத்து ஆண்டுகள் சுதந்தரமாக அமெரிக்காவில் இருந்தவர். அவருடைய அங்கலாய்ப்பு எனக்குப் புரிகிறது.

இங்கு வந்து இரண்டு நாட்

களாகிறது, இரண்டு நாட்களாய்க் குடிப்பதும் சினிமா பார்ப்பதும், தெருவை வேடிக்கைப் பார்த்துக் கொண்டு சைக்கிள் ரிக்ஷாவில் உட்கார்ந்து ஊர் சுற்றுவதும். சாயங்கால நேரத்தில் கடற்கரையில் அந்தச் சிமண்ட் சுவரின் மீது உட்கார்த்து கொண்டு அரைக்கால் சட்டை அணிந்து திரியும் ஆஸ்ரமத்துப் பெண்களை வேடிக்கை பார்ப்பதையும் தவிர அவரது 'தேவை' பூர்த்தியாகிற காரியம் எதுவும் இது வரை கை கூடவில்லை. எனக்குக் அதில் நாட்டமில்லை. திட்டமிட்டதற்கு மேலே ஒரு நாளும் ஆகிவிட்டது. இன்று திங்கட் கிழமை. சாயங்காலமாவது புறப்பட்டு விடவேண்டும். நண்பருக்கு நாளை நிச்சயம் ஆபீசில் இருந்தாக வேண்டும். இவருக்கு எவளாவது கிடைத்தால் எனக்கும் சந்தோஷம்தான். இது என்ன கடையில் கிடைக்கிற சரக்கா?

எங்கள் இருவரின் கிளாசும் காலியாகி விட்டன.

'ஒன் மோர் பாட்டில் பீர்?' என்று கேட்டேன்.

'ஓ எஸ்! வேறு என்னதான் இருக்கிறது' என்றார் நண்பர்.

'இங்கே 'ப்ரான்ஸ் ஃப்ரை' ரொம்பப் பிரமாதமாக இருக்கும். ரெண்டு பிளேட்டு கொண்டு வா' என்றேன்.

வறுத்த இருல், எண்ணெய் மிளகாய் எதுவுமில்லாமல் 'டிரையாக' இரண்டு பிளேட்டுகளில் கொண்டு வந்து வைக்கப்பட்டது. நாண்பர் ரொம்பப் பிரியமாகச் சாப்பிட்டார்... எங்கள் தம்ளர்களில் நுரை வழிய பீரை நிறைப்பினன் அந்த ஆள். நான் பீர் கிளாஸ் வழியாக ஜன்னலை, வெளியே தெரியும் காரை, பழுக்கக்காயும் வெயிலை, பக்கத்தில் காற்றில் பறந்து காரில் பிரதிபலிக்கிற சேலையை எல்லாவற்றையும் மஞ்சளாகப் பார்த்தேன்.

நாலைந்து பாட்டில்கள் குடித்திருந்ததால் வயிறும் கனத்து, போதையும் நன்கு தலைக்கேறி இருந்தது. காலை ஒன்பது மணிக்கு ஆரம்பித்தது. நாலரை மணி நேரமும் ஆகி இருந்தது. மத்தியானச் சாப்பாட்டு நேரம் வந்து விட்டது. ஆனால், பசி இல்லை. காலை ஸெஷனை இத்துடன் முடித்துக் கொள்ளலாம் என்ற தீர்மானத்தோடு 'ப்ரான்ஸ் ஃப்ரை' யுடன் பீரை முடித்தோம்.

ஸ்டூலிலிருந்து இறங்கி நிற்கும் போது ரொம்ப சுகமாக இருந்தது. ஐம்பத்தி ஆறரை ரூபாய் 'பில்'லுமாகி இருந்தது. அறுபது ரூபாய் கொடுப்பதற்கு என்னிடம் சில்லரை இல்லை. நூறு ரூபாய்த் தாள் ஒன்றைத் தந்து ஒரு பாக்கட் சிகரட்டும் நான்கு பத்து ருபாய்நோட்டுகளும் பெற்றுக் கொண்டு நானும் நண்பரும்

வெளியே புறப்படுகிறபோது அவள் ஜன்னலுக்குக் குறுக்காக எங்களைப் பார்த்துக் கொண்டே நடந்தாள். அப்படி அவள் பார்த்துக் கொண்டே நடக்கிறபோது லேசாகச் சிரித்தாள். நானும் சிரித்தேன். நான் சிரித்த பிறகு அவள் சிரித்தாளா, அவள் சிரித்ததால் நான் சிரித்தேனா என்று நிதானிக்க முடியவில்லை.

இருவரும் அவசர அவசரமாக வெளியே வந்தோம். சற்று தூரத்தில் கடலை வெறித்துப் பார்த்துக்கொண்டு எதிர்ப்புற பேவ்மென்ட்டில் போய் அவள் நின்று கொண்டு இருந்தாள். வீசியடிக்கிற காற்றில் போய் அவள் சேலைத்தலைப்பும், தலைமுடியும் தாறுமாருய்ப் பறந்து கொண்டிருந்தது. அவற்றைச் சரிசெய்து சுருட்டிக்கொண்டு எங்களைப் பார்த்தவள் வெள்ளைப் பற்கள் பளீடச் சிரித்தாள்.

நண்பரிடம் நான் சொன்னேன் ''நீங்களும் போய் அங்கே நில்லுங்கள் நான் காரை எடுத்துக் கொண்டு வருகிறேன்.''

நான் எப்போது இதைச் சொல்லுவேன் என்று காத்துக் கொண்டிருந்தவர் போல நண்பர் உடனே எதிர் பிளாட்பாரத்துக்கு ஓடி நடந்தார். இவர் வருவதைப் பார்த்தும் அவள் மெல்ல அந்த பேவ்மெண்டில் கடலின் அலை வந்து மோதுகிற சிமெண்ட் சுவரோரமாகத் தெற்கு நோக்கி நடக்க வாரம்பித்தாள். நண்பரும் அவளைப் பின் தொடர்ந்து சிகரட்டைப் பிடித்த வண்ணம் கூலிங் கிளாஸை மாட்டிக் கொண்டு பத்தடி பின் தங்கி நடக்க வாரம்பித்தார்.

வடக்கு நோக்கி நிறுத்தி இருந்த காரை நான் 'ரிவர்ஸ்' எடுத்து மெள்ள, கலியாண ஊர்கோலம் போகிறமாதிரி அவர்களுக்குப் பின்னல் சென்று கொண்டிருந்தேன். அவள் திரும்பிப் பார்த்துப் பார்த்து நடக்கிருள். நண்பர் நான் வருகிறேனு பார்த்துக் கொள்கிருர். நானும் யாராவது நம்மைக் கவனிக்கிருர்களா என்று பார்த்துக் கொண்டேன்.

பீச் ரோடு முழுதும் நெடுக ஆள் சந்தடியே இல்லை. தூரத்தில் இரண்டொரு குப்பத்துச் சிறுவர்கள் பீடி குடித்துக் கொண்டு இருக்கிருர்கள். ஒரே ஒரு சைக்கிள் ரிக்ஷா, அதில் இரண்டுபேர் குடித்து விட்ட குதூகலத்தில் 'ஓ' வென்று இரைந்து கூவ, அவர்கள் அட்டகாசத்தை ரசித்துச் சிரித்தவாறே சைக்கிள் ரிக்ஷாக்காரன் மிதித்துக் கொண்டு வந்தான். என்னைப் பார்த்து தனது கேலிச் சிரிப்பைப் பகிர்ந்து கொண்டான்.

அப்புறம் அதுவும் எங்களைக் கடந்து போய்விட்டது.

தென் கோடி வரைக்கும் அவள் நடந்து - அங்கே பாதை முடிந்து வலதுபுறம் திரும்புகிறது. இனி மேல் கடலை ஒட்டின பாதைஇல்லை- சுவ ரோரமாகப் போய் சாய்ந்து நின்று கொள்ளு கிருள். எங்கள் பக்கம் திரும் பாமல் கடலையே பார்த்துக் கொஞ்சம் 'பிகு' பண்ணுகி ருள்.

நான் பத்தடி தூரத்தில் காரில் இருக்கிறேன். நண்பர் நல்ல வெயிலில், பாண்ட் பாக்கெட்டில் கையை நுழைத் துக்கொண்டு பத்தடி தூரத் தில் நின்று அவளையே வெறிக் கிருர். அவர் கொஞ்சம் நகர்ந் தார். நானும் நகர்ந்தேன். இன்னும் அவர் நெருங்கினுர். நானும் காரிலிருந்து இறங்கி 'பேவ் மெண்ட்டி'ல் நடந் தேன். அவளோடு வந்தவர் மாதிரி நெருக்கமாகப் போய் நின்று-இருவருக்கு மிடையே நாலு அடி தூரம் இருந்தது- பேசத் தைரியம் இல்லாமல் ஒரு சிகரட்டை பற்றவைத்துக் கொண்டு, என்பக்கம் திரும்பி,

'சிகரட் வேணுமா? என்ருர். இவர் முதுகுக்குப் பின்னுல் அவள் என்னைப் பார்த்தாள். சிரித்தாள். நண்பரின் அருகே சென்று ஒரு சிகரட்டை வாங் கிப் பற்றவைத்துக் கொள்ள நான் மிகச் சிரமப்பட்டேன். காற்றில் தீக்குச்சிகள் நான்கு ஐந்து அணைந்து போயின.

நான் நண்பருக்கும் அவ ளுக்கும் நடுவே போய் நின்று கொண்டேன். அவளைத் திரும்பி நான் பார்த்தபோது அவள் என்னை நேருக்கு நேர் நன்ருகத் தெரிந்தவள் மாதிரி சொந்தத்தோடு பார்த்தாள்.

''எந்த ஊரு? '' என்று அந்த ஊர் தொனியில் நான் கேட்டேன்.

''இந்த ஊருதான்.. இப்ப- நீங்க இன்னு மெட்ருஸா?'' என்று அவள் கேட்கும்போது தான் நான் கணித்திருந்த வயசுக்கும் குறைவாகத்தான் இருப்பாள் இவள் என்று தோன்றியது.

நான் தலையை ஆட்டி னேன்.

''கார்லேயேவா வரீங்க?''

'' ஆமாம் ... '' என்றேன் நான்.

''நீங்க ரெண்டு பேரு தானு?'' என்று இப்போது தான் முதல் தடவையாக நண்பரையும்பார்த்துச் சிரித்து வைத்தாள்

''ஆமாம் ரெண்டு பேரு தான்-நீ வரியா?'' என்று எடுப்பில் கேட்டார் நண்பர்.

'' ஐயையோ/... பாரேன் கேக்கறதெ'' என்று நாக்கைக் கடித்துக் கொண்டவள் சற்று கழித்து என்னிடம் கேட்டாள்

''வந்தா கூட்டிக்கிட்டுப் போறீங்களா?''-நான் பதில்

சொல்ல முடியாமல் இருந்தேன்.

'ஓ! எஸ்...' என்று உற்சாகமாய்ச் சொன்னார் நண்பர்.

'நான் உங்களைக் கேக்கறேன்...வரேன் வந்தா கூட்டிக்கினு போறீங்களா?' என்று என்னிடம் திரும்பவும் கேட்டாள்.

"நீ அங்கே என்ன செய்வே?" என்றேன் நான்.

"நீங்க என்ன செய்ய சொன்னாலும் செய்றேன். இல்லே அஞ்சுரூவா காசி குடுத்தீங்கன்னா பஸ் ஏறி இதான் என் தலை எழுத்துனு திரியும் இங்கியே வந்துடறேன்" என்றாள்.

"கமான் இப்ப கார்லே ஏறிக்க—பேசிக்கினே போலாம்" என்று நன்பர் காரருகே வந்தார்.

அவளாகவே வந்து டிரைவிங் ஸீட்டுக்குப் பக்கத்துக் கததவை "எப்பிடித் தெறக்கறது?" என்று கேட்டுக்கொண்டே திறந்தாள்...

"ம் ... உக்கார்ந்துக்கோ" என்றேன் நான்.

நண்பர் பின் ஸீட்டில் உட்கார்ந்து கொண்டார். அவளை என் பக்கத்தில் அமர்த்திக் கொண்டு நான் காரை ஸ்டார்ட் செய்தேன்.

'அந்தப் பக்கம் வாணும்... திருப்பி ஓட்டுங்க...' என்று என் கையைத் தொட்டுச் சொன்னாள் அவள்.

'உன் பேரு என்ன?' என்று அவள் கழுத்தை விரலால் தொட்டார் போல் இருக்கிறது' நண்பர்.

"எல்லாம் இப்பவே சொல்லணுமா? கொஞ்ச தூரம் போங்க...இங்கே யாராவது தெரிஞ்சவங்க இருப்பாங்க..." என்று காருக்குள் தலை வெளியே தெரியாமல் குனிந்து கொண்டாள் அவள்.

(இன்னும் வரும்)

அடுத்த இதழில்:

ஜெயகாந்தன் எழுதும்

ப்ரமஹம்ஸர் கதைகள்

துவங்குகிறது

புத்தக வெளியீட்டாளர்களுக்கு மட்டும்

(புத்தக விற்பனையாளர்களுக்கு அல்ல)

விற்பனையாளர்களையும் நூலகங்களையும் மட்டும் நம்பியிராமல், நேரடியாக வாசகர்களிடம் புத்தகங்களை விற்க, கவனத்திற்குக் கொண்டுவர, பதிப்பாளர்களுக்கு இன்று வழி ஏதுமில்லை என்று அங்கலாய்க்கப்படுகிறது.

இதற்கான ஒரு வழியை ஞானரதம் திறந்திருக்கிறது. ஞானரதத்தின் பல்லாயிரக்கணக்கான இலக்கிய வாசகர்களின் கவனத்திற்கு உங்கள் சொந்தப் புத்தகங்களைப் பற்றிய தகவல் எட்டச் செய்ய ஒரு சலுகைத் திட்டத்தை ஏற்பாடு செய்திருக்கிறோம்.

''புத்தக விமர்சனம்'' என்ற பெயரில் எல்லோரும் சேர்ந்து எல்லோரையும் ஏமாற்றிக்கொள்ளும் வேலைக்குத் துணை போக ஞானரதம் விரும்பவில்லை. ஏமாறவும் இன்று யாரும் இல்லை.

அதனால் :

பதிப்பாளர்களே தரும் சொந்தப் புத்தக விளம்பரங்கள் மட்டும் அரைக் கட்டணத்தில் வெளியிடப்படும். விற்பனையாளர்களுக்கு இந்தச் சலுகைத் திட்டம் பொருந்தாது. விளம்பர விகிதம் வேறு பக்கத்தில் பிரசுரமாகியிருக்கிறது.

ஒரே ஒரு புத்தகத்திற்கு மட்டுமான விளம்பரம் என்றால் குறைத்தபட்ச கட்டணம் ரூ. 10/- மட்டுமே விளம்பரங்களை பணத்துடன் சேர்ந்து அனுப்பவேண்டும்.

—நிர்வாக ஆசிரியர்

வருக ரதம் வருக

'ஞானரதம் கிடைத்தது. அறிவறிந்த நெஞ்சங்களில் நிலைக்கவல்ல ஆற்றல் மிக்க இலக்கியப் பதிவுகளைப் பெற்றுள்ளது. நலிவு தழுவிய பரிணாமத்திலிருக்கும் தமிழ் இலக்கியம் ஞானரதத்தால் நலம் பெறத் துணை செய்ய வேண்டுகிறேன்.'

—சேவற்கொடியோன், சிங்கம் புனரி

'To me, 'ஞானரதம்' is full of "promise" and promises given but unkept everywhere else.

'Run-of-the-mill' தீம்களை ஒழித்து off best கதைகளின் மூலம் இலக்கிய சாகுபடியின் தரத்தை உயர்த்த வேண்டிய அவசியத்தை உங்கள் பத்திரிகை சுட்டிக்காட்டியிருக்கிறது. மற்றப் பத்திரிகைகள் ஒரு holier-than-thou 'attitude உடன் பிரசுரிக்கத் தயங்கும், மயங்கும் கதைகளை ஞானரதம் பிரசுரிக்கும் என்கிறீர்கள். வாழ்த்துக்கள், வழக்கமான அர்த்தத்தைவிட கனமான அர்த்தத்தல் வாழ்த்துக்கள்.''

வீ. சுகுமாரன், பம்பாய்-22

'ஞானரதம் சாதனை புரியும் என்பதேபோல் முதல் இதழ் மிக அபாரமாக வந்திருக்கிறது. ஜெயகாந்தன் இலக்கிய நேர்மை மிகுந்தவர் என்பதால் பல புதிய படைப்பாளிகளை ஞானரதம் உருவாக்குமென்று நம்ப முடிகிறது. தமிழர்களின் ரசனையால் நீண்டு நிலைத்து நின்று ஞானரதம் 'இலக்கியத்தரமானவை நீடிப்பதில்லை. நீடித்திருப்பவை இலக்கியத் தரமாயில்லை, என்ற சாபக்கேடான நியதியை மாற்ற வேண்டும் என இலக்கிய வட்டம் வாழ்த்துகிறது:

ட்டி. ஆர். நடராஜன், செயலர்
இலக்கிய வட்டம், மதுரை-3

'என்னுடைய அபிமான எழுத்தாளர் திரு. ஜெயகாந்தன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு, பாரதி தந்த பெயரில் ஒரு இலக்கிய இதழ் துவங்கியது குறித்து மிக்க மகிழ்ச்சி'

—ஆ. கோவிந்தராசன்,
சின்னமனூர்

'நல்ல இலக்கியப் பசி கொண்டலையும் என் போன்றவர்க்கு ருசியான தீனி கிடைத்துவிட்டது என்று பெரு மகிழ்ச்சி அடைந்தேன். இதற்கு முன்னர் காணாத ஜெயகாந்தனையும் கூட இனிமேல் சரியாக—முழுசாக காண முடியும் என்ற நம்பிக்கையால் பெருமையுற்றேன்'

—ஏரல் எஸ். ஏ. சலாம்,
இராமேஸ்வரம்

'ஞானரதம் முதல் இதழைப் படித்து முடித்தேன். வல்லிக்கண்ணன் எழுதியபடி உங்கள்

பத்திரிகை ஒரு 'நல்ல சத்திரம்' என்பதில் துளியும் ஐயமில்லை. இதை வெளிக் கொணர நீங்கள் எடுத்துக் கொண்ட சிரமங் களுக்கு நல்ல பலன் விளைய வாழ்த்துகிறேன்.

—க. நாகலிங்கம், சென்னை-33

'ஞானரதம் முதல் இதழ் கண் டேன்; தரமாக உள்ளது...வாச கனைப் புதிய பார்வைகள் பார்க்க வைக்க இதழ் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை. ஞானரதம் பல புதிய சோதனைகளைச் செய் யும் படைப்பாளிகளை ஊக்குவிக் கும் என்றே நம்புகிறேன்.'

இரா. ப. புவனேஸ்வரன்,
மேட்டூர் அணை

'ஞானரதத்தை பல மாற்றங் களுக்கும் உட்படுத்துங்கள்'

சாதனுலயா கிருஷ்ணமூர்த்தி,
விருதாசலம்

தங்களுடைய ஞானரதம் என்ற இலக்கிய ஏடு தன்னைக் கண்டு இன்பம் கொண்டேன். முதல் இதழில் நான் எதிர் பார்த்த அளவு இருக்காவிட்டா லும் ஓரளவு நல்ல படைப்புக்கள் காணப்பட்டன. தங்களுடைய முதல் இதழில் எனக்குப் பிடித் தது தங்களுடைய முன்னேட்டம் தான். மிகவும் அருமையாக இருந்தது. 'வேறு பத்திரிகை களில் எதையோ தேடி அடிக்கடி இல்லை என்று ஏமாந்து தவிக் கிறீர்களே அதை ஞானரதம் தரமுயலும்' என்ற இறுதி வாக்கி யம் இன்னும் என் இதயத்தில் ஒலித்துக் கொண்டே இருக்கின் றது.' —எல்.எம். லட்சுமணன்,
பங்களூர் 9

தங்கள் 'ஞானரதம்' முதல் இதழை மிக ஆவலுடன் வாங் கிப் படித்தேன். படித்து முடித்த வுடன்தான் இதை எழுதுகிறேன். என்னுடைய அபிப்ராயம் ('வாச கன் விமர்சனம்') பின்வருமாறு:

1. உங்களுடைய தலையங்கம் 'முன்னேட்டம்' நன்ருக இருக் கிறது. உங்கள் மனதில், இலக்கி யத்தைத் தேடும் வாசகனின் உள்ளத்தில் இருப்பதை அப்ப டியே படம்பிடித்து தெளிவாக எழுதியிருக்கிறீர்கள். இனிவரும் ஒவ்வொரு இதழும் தங்கள் தலையங்கத்திற்கு ஒப்ப, கொண்டு வர முயற்சி செய்யுங்கள்.

2. ரசனை...வெ. சாமிநாதன் தான் எடுத்துக்கொண்ட விஷ யத்தை (Subject) எழுதுகிருர். தி. ஜானகிராமனைத் திட்ட 6 பக்கங்களா? அதில் 'தொடரும்' வேறு. சாதாரணவாசகன் கண் ணேட்டத்தில் படித்தால் இது அனுவசியம் என்று எனக்குப் படு கிறது. ரசிகன் என்கிற முறையில் இதை எழுதுகிறேன்.

3. 'ஆக்கம்'-பகுதி மகா மட்ட மான, திராபையான, படுபோர் அடிக்கக் கூடியதாக அமைந்து விட்டது! உங்கள் ஆசிரியர் குழு வைச் சேர்ந்த திரு. ந. முத்து சாமி எழுதியிருக்கும் 'சூழ்நிலை' படிக்கவே முடியவில்லை. எவ் வளவு பக்கத்தை Waste பண்ணி விட்டீர்கள். அடுத்த இதழில் இந்த மாதிரி கண்ராவிக் கதை களைப் போடாதீர்கள்!

4. 'இண்டலக்ட்ஸ்' பகுதியில் திரு. வல்லிக்கண்ணனின் கட் டுரைதான் உருப்படியாக சிறப் பாக எழுதியிருக்கிருர். படிக்க

வும், புரிந்து கொள்ளவும் விஷயம் இருக்கிறது. இம்மாதிரி 'இண்டரஸ்டிங்' பகுதி இருந்தால் வாசகனுக்கும், மற்ற எழுத்தாளர்களுக்கும் படிக்க ஆவலாக இருக்கும்.

5. மொழி பெயர்ப்பு பகுதியில் டினிக் கலைஞன் கதை சத்தற்றதாக எலும்புக் கூடாக காட்சியளித்தது. இன்னும் நல்ல கதையாக தேர்ந்தெடுத்து மொழிபெயர்த்து வெளியிட்டிருக்கலாம். முதல் இதழிலேயே வாசகனுக்கு "போர்" அடிக்கக் கூடிய கதையாக வெளியிட்டிருக்கவேண்டாம்.

6. 'பின்னேக்கு — ஸ்பினேசா பற்றி எழுதியிருக்கும் திரு. எம். கே. மணி சாஸ்திரி கட்டுரையை ஆய்ந்து எழுதியிருக்கிருர். இன்னும் விரிவாக எழுதியிருக்கலாம்.

ஞானரதம்

விளம்பர விகிதம் : ரூ.

பின் அட்டை (இருகலர்)	300/-
உள் அட்டைகள் (,,)	250/-
,, ,, (ஒரு கலர்)	200/-
முழுப்பக்கம்	100/-
அரைப்பக்கம்	60/-
கால் பக்கம்	30/-

ஒப்பந்த விளம்பரங்களுக்கு தள்ளுபடி உண்டு

புத்தக விளம்பரங்களுக்கு தனிச் சலுகை

விவரங்களுக்கு :

நிர்வாகி: ஞானரதம்,
சக்தி இல்லம், சென்னை-36

7. வே. மாலியின் 'குறை நிறைகள்' கச்சிதமாக, சுருக்கமாக எழுதப்பட்ட பாடல்.

8. 'யுக சந்தி' — திரு. லா. ச. ராவின் கட்டுரை இனிமையாக இருந்தது. அவர். உள்ளதை உள்ளபடியே தெளிவாகசொல்லி இருக்கிருர். இந்தப் பகுதி எனக்குப் பிடித்தது. தொடர்ந்து வெளியிடுங்கள்.

9. 'உரத்த சிந்தனை'—உங்கள் பகுதி. 'கலைமகள், தீபம்' பாணியில் கேள்விகளுக்கு நீங்கள் பதில் சொல்லும் பகுதி. இதில் உங்களுடைய எண்ணங்களை, பிறர் அறியச் செய்யும் முயற்சி. இது எவ்வளவு தூரத்திற்கு பயன்படும் என்பது போகப் போகத் தெரியும். கடைசியாக:

10. என் அபிப்ராயம்:—50 காசு கொடுத்து வாங்கும் சாதாரண வாசகனுக்கு கண்ணுக்கு அழகாக அளிக்கும் வகையில் atleast 4,5 படங்கள் உள்ளே போடக்கூடாதா? முதல் பக்கத்திலிருந்து கடைசிப் பக்கம் வரை ஒரே மாதிரி விஷயதானங்களால அடைத்து 'ஸ்கூல் நான்டிடைல்' புத்தகம் மாதிரி அமைத்து விட்டீர்கள். நடு நடுவே 'போர் அடிக்கும் பகுதிகளை அறவே நீக்கவேண்டும். அட்டையில் மாற்றம் தேவை. அழகான இயற்கைப் படம் போட்டாலும் போதும், கவர்ச்சிப்படம் வேண்டாம். துணுக்குகள் இன்னும் போடலாம். 'ஞானரதம்' இனி வரும் இதழ்களில் பொலிவுடன் வர, என் வாழ்த்துக்களுடன்,

அன்பன் பி. ஆர் ராஜராம்
சென்னை-28.

ரஸ்ஸல் என்ருெரு தனிமனிதன்!

பெர்ட்ரண்ட் ரஸ்ஸலின் ஆயுள் அவருடைய நூற்ருண்டு நிறைவோடு முடியாமல், மூன்ருண்டுகள் முன்னதாகவே முடிந்துவிட்டது.

தன்னை எந்த ஒரு இயக்கத்துடனும் பிணைத்துக் கொள்ளாத ஒரு தனி மனிதன்தான், தானே ஒரு இயக்கமாகப பரிணமித்து நிற்க முடிகிறது. சமுதாயம் சமுதாயம் என்று பூச்சாண்டி காட்டி, ஏற்கனவே இருக்கும் நியாயங்களுக்குக் கட்டுப்பட்டு நிற்குப்படி, எதிர்கால நியாயத்தை நிர்ணயிக்கப் பிறந்த தனி மனிதர்களிடம், இந்தச் சமுதாயம் என்னதான் கெடுபிடிகளைச் செய்த போதிலும் முடிவில் அதற்குக் கிடைப்பது தோல்வியே. இதற்கொரு நிலையான புதிய சாட்சியே ரஸ்ஸல் என்ருெரு தனி மனிதன்!

ரஸ்ஸலின் சமுதாய நோக்குகள் தனித்துவமுடையவை. அவருடைய ஒரு நோக்கை ஏற்பவர்கள் மறு நோக்கை ஜீரணித்துக் கொள்ளமாட்டார்கள். அது தத்தம் நோக்கை ரஸ்ஸலைக் கொண்டு நிறைவேற்றிக்கொள்ளப் பார்க்கும் பலவினர்களின் நிலை. ஆனல் நமக்கு வேலை அதுவல்ல. நமக்கு ரஸ்ஸலை முழுமையாகப் புரிந்துகொண்டாக வேண்டும். அதுவே அவருடைய நினைவை நாம் போற்றத்தக்கவர்களாக இருக்கிருேமா என்பதற்கான அடையாளம்.

அடுத்த இதழின் பின்னேக்காக பெட்ரண்ட் ரஸ்ஸலும் இடம் பெறுகிருர் — பிகாசோவுடன்!

—ஆசிரியர் குழு